வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P . 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu வார மலர் ඊළනාඩු




Email : news@eelanadu.lk | மலர் : 03 | 14.08.2022 ஞாயிற்றுக்கிழமை | இதழ் : 245 | பக்கங்கள் : 20



08 'அறகலய" போராட்ட இயக்கத்தின் மூலமான படிப்பினைகள்



10 சல்மான் ருஷ்டி யார்?



11 நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு சுயதொழில்களை ஊக்குவிப்போம்



16 மால்டோவா - உக்ரேனுக்கும் நடுவில், வல்லரசுகளின் போர்சூழ் பகைமையில்,

# சில புலம்பெயர் தமிழ் அமைப்புகளின் தடையை விலக்கியது இலங்கை அரசு!

## தனிநபர்கள் மீதான தடையும் நீங்கியது

கொழும்பு, ஒகஸ்ட் 14

**சில புலம்பெயர்ந்த தமிழ் அமைப்புகள் மற்றும் அந்த அமைப்புகளைச் சேர்ந்த தனிநபர்கள் சிலரை தடை செய்யப்பட்ட அமைப்புகள் பட்டியலில் இருந்து இலங்கை அரசு நீக்கியுள்ளது.**

புலம்பெயர் தமிழ் அமைப்பான பிரித்தானியாவை தளமாகக் கொண்டு இயங்கும் சர்வதேச தமிழர் பேரவை மீதான தடையும் நீக்கப்பட்டுள்ளது. இந்த அமைப்பின் செய்தித் தொடர்பாளர் சுரேன் சுரேந்திரன் பெயரும் தடைப் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டுள்ளது.

பிரித்தானிய தமிழர் பேரவை மற்றும் கனேடிய தமிழ் காங்கிரஸ் ஆகியனவும் தடைப்பட்டியல் இருந்து நீக்கப்பட்டுள்ளன.

தடைப் பட்டியில் இருந்து சில புலம்பெயர் தமிழ் அமைப்புகள் மற்றும்

19

## அனைத்துப் பாடசாலைகளும் நாளை முதல் ஐந்து நாள்களும்

கொழும்பு, ஒக. 14

எரிபொருள் நெருக்கடிகாரணமாக மட்டுப்படுத்தப் பட்டிருந்த பாடசாலைகளின் கல்வி நடவடிக்கைகள் மீண்டும் வழமைக்குத் திரும்பவுள்ளதாகக் கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

அதற்கமைய நாளை திங்கட்கிழமை முதல் ஐந்து நாட்களும் பாடசாலைகளை நடத்தத்

19

## கோவிட் மரணங்கள் மேலும் அதிகரிப்பு!

கொழும்பு, ஒக. 14

நாட்டில் மேலும் 5 பேர் கோவிட் தொற்றுக்கு உள்ளாகி உயிரிழந்துள்ளதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் உறுதிப்படுத்தியுள்ளார்.

உயிரிழந்தவர்களில் 60 வயதுக்கு மேற்பட்ட 3 ஆண்களும் 2 பெண்களும் அடங்குவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, நாட்டில் மேலும் 162 பேருக்கு கோவிட் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக சுகாதார சேவைகள்

19


## எரிபொருள் நிலையங்களுக்கு அமைச்சர் காஞ்சன எச்சரிக்கை

கொழும்பு, ஒக. 14

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபன அதிகாரிகளின் வழிகாட்டுதல்களுக்குக் கீழ்ப்படிய மறுக்கும் எரிபொருள் நிரப்பு நிலையங்கள் தொடர்பில் உரிய முகாமைத்துவ தீர்மானங்கள் மற்றும் விநியோகத் தீர்மானங்களை மேற்கொள்ளுமாறு மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர அறிவுறுத்தியுள்ளார்.

நேற்றுக் காலை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் கொலன்னாவை முனையத்தில் எரி

19



## சல்மான் ருஷ்டியை மேடையில் வைத்து கத்தியால் குத்திய நபர்!

நியூயோர்க் ஆக. 14

நியூயார்க்கில் நடைபெற்ற நிகழ்ச்சியொன்றில் அடையாளம் தெரியாத நபரால் கத்தியால் குத்தப்பட்ட பிரபல எழுத்தாளர் சல்மான் ருஷ்டி வென்டிலேட்டரில் வைக்கப்பட்டிருப்பதாக

19

## வெளிநாட்டு வருமானம் வீழ்ச்சி

கொழும்பு, ஒக.14

ஜூலை 2022 இல் இலங்கைக்கு அனுப்பப்பட்ட வெளிநாட்டு வருமானம் 279.5 மில்லியன் அமெரிக்க டொலர்கள் என இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது.

2022 ஜனவரி முதல் ஜூலை வரை, வெளிநாட்டுப் பணியாளர்கள் பெற்ற வெளிநாட்டு வருமானம் 1889.4 மில்லியன் அமெரிக்க டொலர்கள் என தெரிவிக்கப்படு

19

## குழந்தையின் கழுத்தில் கத்தியை வைத்து வீடியோ பதிவிட்ட கொடூர தந்தை கைது!

கொழும்பு, ஒக. 14

தனது 5 வயது குழந்தையை கத்தியைக் காட்டி கொலை செய்யப் போவதாக மிரட்டும் வீடியோவை மனைவிக்கு அனுப்பிய கொடூரமான தந்தையொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

குளியாப்பிட்டிய பகுதியில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது

19

## கோட்டாவை அழைக்கிறார் மகிந்த!

கொழும்பு, ஒக. 14

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை நாட்டுக்கு வருமாறு, முன்னாள் பிரதமரும் கோட்டாபயவின் சகோதரருமான மகிந்த ராஜபக்ஷ விடுத்த அழைப்புக்கு கோட்டாபயவிடம்

19

## முக்கிய துறைகள் தமக்குரிய எரிபொருளை தனித்தனியாக இறக்குமதி செய்ய அனுமதி?

கொழும்பு, ஒக. 14

பெற்றோலியப் பொருட்கள் சிறப்பு ஏற்பாடுகள் திருத்தச் சட்டமூலம் வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளது. இதன் மூலம் முக்கிய துறைகள் தமக்குத் தேவையான எரிபொருளை இறக்குமதி செய்வதற்கு எதிர்காலத்தில் அனுமதி வழங்கப்படவுள்ளது.

எரிசக்தி அமைச்சரின் பணிப்புரைக்கு அமைய நேற்று முன் தினம் குறித்த சட்டமூலம் வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளதாக குறிப்பிடப்படுகின்றது.

பொருளாதாரத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட துறைகள் தங்களுக்குத் தேவையான எரிபொருளை தனித்தனியாக இறக்குமதி செய்து பயன்படுத்திக்கொள்ளும் வகையில்

19

## சர்வகட்சி அரசமைக்க ஆதரவளிக்கும் எந்தவொரு தரப்புடனும் இணைவோம்



### கூறுகிறார் அமைச்சர் விஜேதாஸ

கொழும்பு, ஒக. 14

சர்வகட்சி அரசாங்கமொன்றை அமைப்பதற்கு ஆதரவளிக்கும் எந்தவொரு தரப்பினருடனும் இணைந்து செயற்படுவோம் என நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

19

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

# இப்படியும் நடக்கிறது!

இந்த ஊர்க்குருவி தினமும் இந்தப் பத்தியை எழுதினாலும் ஈழநாடுவின் தீவிர வாசகர்களிலும் ஒருவர்.

பத்திரிகையை கையில் எடுத்ததும் ஊர்க்குருவியர் திறந்து பார்ப்பது, இன்றைக்கு நம்மட அப்புக்குட்டியர் என்ன சொல்கிறார் என்றுதான்.

நேற்றைய பத்திரிகையை திறந்ததும் அப்புக்குட்டியற்ற கடியை படிச்சபோது சிரிப்பு வந்தாலும் அது சிரிப்பதற்கு மட்டுமானது அல்ல, சம்பந்தப்பட்டவர்கள் கவனம் செலுத்த வேண்டிய ஒன்றும்தான் என்ற எண்ணமே ஏற்பட்டது. நேற்றைய பத்திரிகையை படிக்காதவர்களுக்காக அதனை மீண்டும் தருகின்றேன்.

ஆனந்தசங்கரி:

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்து விலகி இருக்கும் கட்சியின் ஆரம்ப கால உறுப்பினர்கள் விரும்பினால் தமிழர் விடுதலைக் கூட்டணியில் இணைந்து பயணிக்கலாம்.

அப்புக்குட்டி:

நாங்கள் பயணிக்கிறதுக்கு, பஸ் எங்க போகுது எண்டும் சொன்னால்தானே ஐயா நாங்க ஏறலாம். ஏற்கனவே கூட்டமைப்பு எங்க போகுது எண்டதை தெரியாமல்தானே இறங்கி நிற்கிறம். அதுசரி பஸ்ஸை நீங்கள்தான் ஓட்டவேணும் எண்டும் அடம்பிடிச்சால் நம்பி ஏறலாம் எண்டுறியளோ?

இதுதான் அப்புக்குட்டியரின் கருத்தாக நேற்று வெளிவந்திருந்தது.

அப்புக்குட்டியர் கோபிக்க மாட்டார் என்று நினைக்கின்றேன்.

'பஸ்ஸை நீங்கள்தான் ஓட்டவேணும் என்று அடம்பிடிச்சால் நம்பி ஏறலாம் எண்டுறியளோ என்று கேட்டிருப்பதால், பஸ்ஸில் வேறொருவர் நடத்துனராக இருக்கிறார் என்று படிப்பவர்கள் நினைக்கப்போகின்றார்கள். ஓட்டுனர் மாத்திரமல்ல, நடத்துனரும் நீங்கள் தான் எண்டால் பஸ்ஸிலை ஏறலாம் எண்டுறியளோ?' என்றே அப்புக்குட்டியர் கேட்டிருக்க வேண்டும்.

சரி இனி விசயத்திற்கு வருவோம்.

கூட்டமைப்பு எப்போதெல்லாம் நெருக்கடிகளை சந்திக்கின்றதோ, அல்லது மக்கள் மத்தியில் அம்பலப்பட்டு நிற்கின்றதோ அப்போதெல்லாம் ஆனந்த சங்கரியர் இப்படி அழைப்பு விடுவது வழக்கமான ஒன்றாகிவிட்டது. விக்கினேஸ்வரன் கூட்டமைப்பிலி ருந்து வெளியே வந்தபோதும் ஓடிச் சென்று அவரைச் சந்தித்து கட்சித் தலைமையை பொறுப்பெடுங்கள் என்று கோரிக்கை விடுத்தது ஞாபகமிருக்கலாம்.

கொழும்புக்கு போவதாக பஸ்ஸில் முன் பக்கத்தில் போட்டுக் கொண்டு போய்க்கொண்டிருந்த பஸ், திருகோணமலைக்கு போகின்றது என்பதால் வவுனியாவில் இறங்கி நிற்கின்ற பயணியிடம்போய் எங்கே போகிறோம் என்றே சொல்லாமல் ஏறுங்கள் என்று கேட்பதுபோல ஆனந்தசங்கரியர் கேட்டால், அவர் ஏறுவாரா என்பதைக்கூட சங்கரியரால் புரிந்துகொள்ளமுடியவில்லையே என்று அப்போது இந்த ஊர்க்குருவியர் எண்ணியதுண்டு.

இப்போது கூட்டமைப்பு என்ற பஸ்ஸை ஓட்ட முடியாமல் மட்டுமல்ல, டிரைவர் ஆசனத்தில் கூட இருக்கமுடியாமல் ஒருவர் ஓட்டிச் சென்றுகொண்டிருக்கிறார். அவரே டிரைவர் ஆசனத்தில் இருப்பதாக காட்டிக்கொண்டு, ஒருபக்கத்தில் இருந்து ஒருவர் 'கியர்' போட்டுக்கொண்டு 'ஸ்ரேறிங்கை'யும் பிடித்துக்கொண்டி ருக்க, மற்றுமொருவர் மறுபக்கத்திலிருந்து 'அச்சிலேற்றறை' அமத்திக்கொண்டு 'பிறேக்கிலும்' கால் வைத்துக்கொண்டிருக்கிறார். டிரைவர் இருப்பது கூட வெளியில் தெரியவில்லை. அவர்களின் சிந்தனை எல்லாம் பஸ்ஸை எங்கே கொண்டுபோவது என்பதல்ல, ஆசனத்தில் தாங்களே அமர்ந்து ஓட்டுவதற்கு எப்போது சந்தர்ப்பம் வரும் என்பதுதான். போகும் இடம் எது என்பது கூட அவர்களுக்கு பொருட்டல்ல. அதனால் தான் அந்த பஸ்ஸில் பயணிப்பது போகவேண்டிய இடத்திற்கு போய்ச்சேரமுடியாது என்பதால் மட்டுமல்ல, ஆபத்தானது என்பதாலுமே அதிலிருந்து ஆட்கள் இறங்கிக்கொண்டிருக்கின்றார்கள்.

அவர்களைப் போய் தனது பஸ்ஸில் ஏறச்சொல்லுகிறார் சங்கரி ஐயா.

முதலில் பஸ்ஸை எங்கே கொண்டுசெல்வது என்பதையும் எந்த வீதியால் செல்வது என்பதையும் முடிவுசெய்யவேண்டும். அதன் பின்னர், அவ்வளவு தூரம் ஓட்டக்கூடிய ஒருவரிடம் டிரைவர் சீற்றைக் கொடுத்துவிட்டு, வேண்டுமெனில் பின்னால் உள்ள சீற்றில் அமர்ந்திருந்துகொண்டு, டிரைவர் ஒழுங்காக ஓடுகிறானா? நடத்துனர் எல்லோருக்கும் ரிக்கற்கொடுத்து காசை கணக்கு காட்டுகிறானா என்று கவனித்துக்கொண்டு இருக்க வேண்டும். அப்போதுதான் பயணிகள் அந்த பஸ்ஸில் ஏறுவார்கள்.

இந்த யதார்த்தத்தை சங்கரி ஐயா முதலில் புரிந்து கொள்ள வேண்டும்.

- ஊர்க்குருவி

# ரணிலின் கீழ் பதவிக்காக அடிபடுகின்றது பெரமுன!

## சுட்டிக்காட்டுகிறார் தயாசிறி

கொழும்பு, ஒக. 14

ரணில் பிரதமராக இருக்கும் நல்லாட்சி அரசாங்கத்தில் பணியாற்ற முடியாது என ரணில் விக்கிரமசிங்கவை சாடியவர்கள், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை விட்டு விலகியவர்கள் தற்போது ஜனாதிபதி விக்கிரமசிங்கவின் கீழ் பதவிகளைப் பெறுவதற்கு கடும் போரில் ஈடுபட்டுள்ளதாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர சுட்டிக்காட்டியுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, அப்போதைய பிரதமர் விக்கிரமசிங்க, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் நல்லாட்சிஅரசாங்கத்தை அவமதித்து ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவை உருவாக்கினர். பொதுஜன பெரமுன விற்கு இன்று விக்கிரமசிங்க மீட்பராக மாறியுள்ளது நகைப்புக்குரியது என்றும் அவர் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தோற்றத்துடன், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை என்றென்றைக்குமாக புதைத்துவிட்டதாக பலர் நினைத்தனர். கடந்த பொதுத் தேர்தலில் நாங்கள் மிகவும் கொடூரமான மற்றும் நியாயமற்ற தாக்குதலுக்கு உள்ளானோம். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு வாக்களிக்க வேண்டாம் என சில பொதுஜன பெரமுன அரசியல்வாதிகள் வாக்காளர்களிடம் கூறியுள்ளனர்.



ஆனால்,உள்நாட்டு அரசியலில் தனது நிலைப்பாட்டைத் தக்கவைத்துக் கொள்வதற்காக இந்த எதிர்மறையான பிரசாரங்களுக்கு மத்தியிலும் சுதந்திரக்கட்சி 14 ஆசனங்களை பாராளுமன்றத்தில் பெற்றுக்கொள்ள முடிந்தது - என்றார். (அ)

# பைஸர் தடுப்பூசிகள் தொடர்பில் வெளியாகும் தகவல்கள் பொய்!

கொழும்பு, ஒக. 14

நாட்டில் தற்போது எஞ்சியுள்ள பைஸர் தடுப்பூசிகள் காலாவதியாகிவிட்டதாகவும், அவற்றை மீளவும் பயன்படுத்த முடியாது எனவும் சமூக வலைத்தளங்களில் பகிரப்படும் செய்திகள் உண்மைக்கு புறம்பானவை என பொரளை லேடி ரிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலையின் தடுப்பூசி மையத்திற்கு பொறுப்பான பிரதம வைத்தியர் மஹிந்த விக்ரமாரச்சி தெரிவித்துள்ளார்.

பொரளை புனித லூக்கா தேவாலயத்தில் நேற்று முன்தினம் ஆரம்பமான தடுப்பூசி செலுத்தும் நிகழ்வில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

உலக சுகாதார ஸ்தாபனமும் சுகாதார அமைச்சும் இணைந்து மேற்கொண்ட பரிசோதனைகளின் பின்னர் மேலும் மூன்று மாதங்களுக்கு தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கைகளுக்கு பைஸர் தடுப்பூசிகளை பயன்படுத்த முடியும் என பரிந்துரைக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (அ)

# விவசாயிகளுக்கான டீஸல் விநியோகம்

யாழ்ப்பாணம்,ஒக.14

கல்வியங்காடு பகுதியில் அமைந்துள்ள நல்லூர் பலநோக்கு கூட்டுறவுச்சங்க எரிபொருள் நிரப்பு நிலையத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8:30 மணிமுதல் இருபாலை கமக்கார அமைப்புகளை சேர்ந்த பெரும்போக செய்கையில் ஈடுபடும் உழவு இயந்திரங்களுக்கு டீசல் விநியோகிக்கப்படவுள்ளது.

இருபாலை கமக்கார அமைப்புகளை சேர்ந்த பெரும்போக பயிர்ச்செய்கையில் ஈடுபடும் விவசாயிகளுக்கான எரிபொருள் விநியோகமே இன்று இடம்பெறவிருப்பதாக இருபாலை கமக்கார அமைப்பின் செயலாளர் ந. கஜேந்திரகுமார் தெரிவித்தார்.

# ரட்டாவின் வங்கி கணக்குக்கு வந்துள்ள 5 மில்லியன் ரூபா!

கொழும்பு, ஒக. 14

அரகலய' எனப்படும் மக்கள் போராட்டத்தின் முக்கிய செயற்பாட்டாளரும் பிரபலமான 'யூடியூபரு'மான 'ரட்டா' என அறியப்படும் ரதிந்து சேனாரத்ன, தனது வங்கிக் கணக்கில் 05 மில்லியன் (50 லட்சம்) ரூபா பணம் அறியப்படாதஷ நபர்களால் வைப்புச் செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

கோரப்படாத இந்தப் பணப் பரிவர்த்தனை தொடர்பாக ஏற்கனவே சம்பந்தப்பட்ட வங்கியில் ஒரு புகார் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் ரட்டா தனது பேஸ்புக் பக்கத்தில் குறிப்பிட்டுள்ளார்.

இது குறித்து சட்ட நடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். நீதிமன்றின் தடை உத்தரவை மீறி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டார் எனும் குற்றச்சாட்டில் - இவர் கடந்த 01ஆம் திகதி கைது செய்யப்பட்ட நிலையில், மறுநாள் பிணையில் விடுவிக்கப்பட்டார். (அ)

# ஹர்ஷவுக்கு முக்கிய பதவி

கொழும்பு, ஒக. 14

அரச கணக்குகள் தொடர்பான பாராளுமன்ற நிதிக் குழுவின் தலைவராக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா நியமிக்கப்படவுள்ளார்.

ஆளும் மற்றும் எதிரணிகளின் இணக்கப்பாட்டுடன் குறித்த பதவிக்கு ஹர்ஷ டி சில்வா ஏகமனதாக தெரிவு செய்யப்படவுள்ளார்.

குறித்த பதவி கிடைக்கும் பட்சத்தில் அதனை ஏற்க தான் தயார் என்று ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார். குறித்த குழு ஊடாக நாட்டுக்கு சேவையாற்ற முடியும் எனவும் அவர் நம்பிக்கை வெளியிட்டார்.

அத்துடன், நிதிக்குழுவுக்கு நிறைவேற்று அதிகாரம் வழங்கப்பட வேண்டும் எனவும் அவர் கோரிக்கை விடுத்தார். (அ)

# பெர்னாண்டோபுள்ளே மேம்பாலத்தில் கவிழ்ந்து எரிபொருள் பவுசர் விபத்து!

கொழும்பு, ஒக. 14

களனி, ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே மேம்பாலத்தின் மீது பயணித்த எரிபொருள் பவுசர் ஒன்று சாரதிக்கு ஏற்பட்ட தூக்கம் காரணமாக பாலத்தில் இருந்து கீழுள்ள வீதிக்கு குடை சாய்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

நேற்று அதிகாலை 2.00 மணியளவில் இந்த சம்பவம் இடம்பெற்றது.

அதில் இருந்த எரிபொருள் கையிருப்பு வேறு ஒரு பவுசர் வாகனத்துக்கு மாற்றப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்விபத்தின் போது பவுசர் சாரதி மாத்திரமே பயணித்துள்ளதுடன், காயமடைந்த அவர் சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

விபத்து தொடர்பில் பேலியகொடை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ)

ஈழநாடு



# பிரதமராக தமிழ், முஸ்லிம் சமூகத்தினர் தெரிவு செய்யப்படுவதை ஏற்கவேண்டும்

## அமைச்சர் ரமேஷ் பத்திரண கோரிக்கை

கொழும்பு, ஒக. 14

"இனவாதமற்ற சமூகத்தைத் தோற்றுவிக்க வேண்டுமாயின் குறைந்தபட்சம் பிரதமர் பதவிக்கு தமிழ், முஸ்லிம் சமூகத்தினர் தெரிவு செய்யப்படுவதை ஏற்றுக்கொள்ளவேண்டும். அதற்கான மனநிலை காணப்பட வேண்டும். இருப்பினும் அந்த மனநிலை இதுவரை தோற்றம் பெறவில்லை."

- இவ்வாறு பெருந்தோட்டத்துறை அபிவிருத்தி அமைச்சர் ரமேஷ் பத்திரண தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன் தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஜனாதிபதியின் சிம்மாசன உரை மீதான மூன்றாம் நாள் விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் - மக்கள் போராட்டத்தைத் தொடர்ந்து அப்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜ பக்ஷ பதவி விலகினார். கடந்த இரண்டரை வருட காலப்பகுதியில் அவர் நாட்டுக்காகச் சிறந்த விடயங்களைச் செயற்படுத்தி ருந்தாலும், கொரோனாத் தொற்று மற்றும் தூரநோக்கற்ற பொருளாதாரக் கொள்கை ஆகிய காரணிகளால் பதவி விலக நேரிட்டது.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தலைமையிலான அரசால் செயற்படுத்த முடியாத விடயங்களை மக்களின் எதிர்பார்ப்புக்கமைய செயற்படுத்த வேண்டிய பொறுப்பு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்குக் காணப்படுகின்றது. பாராளுமன்றத்தினதும், மக்களினதும் நம்பிக்கையை வென்று அவர் முன்னோக்கிச் செல்வார் என்று எதிர்பார்க்கின்றோம்.

மக்களின் எதிர்பார்ப்புக்கமைய அரசமைப்பின் 22ஆவது திருத்தம் நிறைவேற்றப்படவுள்ளது. பொருளாதார மறுசீரமைப்பு மற்றும் கொள்கை தொடர்பான தீர்மானங்கள் பிரபல்யமடையும் வகையில் அமையாவிடினும், அதனைச் செயற்படுத்தி சவால்களை வெற்றிகொள்ள வேண்டும்.

1948ஆம் ஆண்டுக்குப் பிறகு அரசியல், சமூகக் கட்டமைப்பு காலத்துக்குக் காலம் மாற்றமடைந்துள்ளது. ஆட்சியில் இருந்த அரச தலைவர்கள் அனைவரும் நாட்டுக்கு ஏதேனும் சிறந்த திட்டங்களைச் செயற்படுத்தியுள்ளார்கள். அனைத்து தலைவர்களும் ஊழல், மோசடியாளர்கள் எனக் குறிப்பிடுவதை ஏற்றுக்கொள்ள முடியாது.



பல்லின சமூகம் வாழும் நாடு என்ற ரீதியில் இனவாத முரண்பாடுகளுக்கு மத்தியில் பல சிறந்த திட்டங்கள் செயற்படுத்தப்பட்டுள்ளன என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தலைமையிலான அரசு முன்னெடுத்த ஒருசில தீர்மானங்கள் பொருளாதார நெருக்கடியைத் தீவிரப்படுத்தியுள்ளன. பொருளாதார மீட்சிக்காக அரச சேவை மறுசீரமைக்கப்பட வேண்டும் என்பதைத் தெளிவாகக் குறிப்பிட்டுக் கொள்ள வேண்டும்.

எதிர்வரும் நாட்களில் முன் னெடுக்கப்படும் தீர்மானங்கள் பிரபல்யமற்றதாக அமைந்தாலும், பொருளாதார மீட்சிக்கு ஏற்புடையதாக அமையும். நாட்டு மக்கள் அனைவரின் ஒத்துழைப்பு கிடைக்கப்பெற்றால் மாத்திரமே பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காண முடியும். இனவாதமற்ற சமூ கத்தைத் தோற்றுவிக்க வேண்டு மாயின் குறைந்தபட்சம் பிரத மர் பதவிக்குத் தமிழ், முஸ்லிம் சமூகத்தினர் தெரிவு செய்யப்படுவதை ஏற்றுக்கொள்ள வேண்டும். அதற்கான மன நிலை காணப்பட வேண்டும். இருப்பினும் அந்த மனநிலை இதுவரை தோற்றம் பெறவில்லை - என்றார். (அ)

# சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் யாழ்.போதானா வைத்தியசாலைக்கு விஜயம்

யாழ்ப்பாணம், ஒக. 14

இலங்கை சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அசேல குணவர்தன தலைமையிலான மத்திய சுகாதார அமைச்சின் உயர் அதிகாரிகள் குழுவொன்று நேற்றுமுன் தினம் யாழ்.போதனா வைத்திய சாலைக்கு விஜயம் செய்தது.

வைத்தியசாலையின் பகுதிகளைப் பார்வையிட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம், எதிர்கால அபிவிருத்தி தொடர்பாகவும் கலந்துரையாடினார்.

இதன்போது யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி உள்ளிட்ட வைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளர்கள் வைத்தியர்கள் எனப்பலரும் கலந்துகொண்டனர். (அ)



# கஜேந்திரகுமார் எம்.பியின் வீட்டு மதில் கட்டுமானத்தை உடன் நிறுத்த உத்தரவு!

## யாழ். மாநகர சபையின் அனுமதியின்றி அமைக்கப்படுவதால்

யாழ்ப்பாணம், ஒக. 14

தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திர குமார் பொன்னம்பலத்தின் வீட்டு மதில் அனுமதியின்றி கட்டப்படுவதால், கட்டுமான பணியை உடனடியாக நிறுத்த யாழ். மாநகரசபை தீர்மானித்துள்ளது.

கஜேந்திரகுமார் பொன்னம்பலம் நல்லூர் குறுக்கு வீதிப் பகுதியில் புதிதாக வீடொன்றை நிர்மணித்துள்ளார்.

அந்த வீட்டு மதில் கட்டும் பணி தற்போது நடந்து வருகிறது. எனினும், அதற்கான அனுமதி யாழ்.மாநகர சபையில் பெறப்படவில்லையென தெரிவிக்கப்படுகிறது.

யாழ்.மாநகரசபை அமர்வு நேற்று முன்தினம் நடந்த போது, இந்த மதில் விவகாரத்தை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மாநகரசபை உறுப்பினர் ப.தர்சானந் எழுப்பினார்.

"உங்கள் கட்சியின் தலைவர் என்பதால் அவர் அனுமதியின்றி மதில் கட்டுவதை அனுமதித்துள்ளீர்களா?" என யாழ்.மாநகர சபை முதல்வர் வி.மணிவண்ணனை பார்த்து கேள்வியெழுப்பினார்.

'எனக்கு இப்பொழுதும் அவர்தான் கட்சித்தலைவர். என்றாலும் அனுமதியற்ற கட்டுமானங்களை அனுமதிக்க முடியாது. அதனால் அந்த கட்டுமான பணிகளை உடனடியாக இடைநிறுத்துவதுடன், முறைப்படியான அனுமதி பெற்று கட்டுமானத்தை தொடரும்படி அறிவியுங்கள்' என மாநகரசபை உத்தியோகத்தர்களுக்கு முதல்வர் உத்தரவிட்டார். (அ-02)

# தமிழர்கள், முஸ்லிம்கள் இடையே முக்கிய பதவிகளை பகிரவேண்டும்

## டிலான் பெரேரா எம்.பி. வேண்டுகோள்

கொழும்பு, ஒக. 14

அமைச்சரவையை வரையறுத்து பிரதமர் உள்ளிட்ட முக்கிய பதவிகளைத் தமிழர், முஸ்லிம்கள் இடையே பகிர்ந்து கொள்ளவேண்டும் என்றும், இதன் மூலம் இலங்கை தொடர்பில் சர்வதேசத்துக்குச் சிறந்த செய்தியை கொண்டு செல்ல முடியும் என்றும் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் டலஸ் அணியைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்கவின் கொள்கை விளக்க உரை மீதான மூன்றாம் நாள் சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் கூறுகையில்-

நான் புதிய ஜனாதிபதியைத் தெரிவு செய்வதற்கான வாக்கெடுப்பின்போது டலஸ் அழகப்பெருமவுக்கே ஆதரவளித்தேன். அதற்குக் காரணம் சர்வகட்சி அரசை அமைக்க வேண்டும் என்று பலரும் விடுத்த கோரிக்கையே ஆகும். சஜித் பிரேமதாஸவே அவரின் பெயரைப் பரிந்துரைத்திருந்தார். அதற்கு முதல்நாள் வரையில் டலஸ் அழகப்பெருமவுக்கே பெரும்பான்மையான வர்கள் ஆதரவளிக்கத் தீர்மானித்திருந்தனர். 90 வீதமானவர்கள் அந்தத் தீர்மானித்திலேயே இருந்தனர். இதன்படியே நான் வாக்களித்தேன்.

இதற்கு முன்னர் ஜனாதிபதிகள் பலரின் சிம்மாசன உரைகளைக் கேட்டுள்ளோம். அவர்கள் சட்டபூர்வமாகத் தெரிவாகிய ஜனாதிபதிகளாகும். ஆனால், அண்மையில் வேறு முறையில் அரசமைப்பு ரீதியில் வந்தார் எனக் கூறப்படும் ஜனாதிபதியின் உரையைக் கேட்டோம். அவர் சர்வகட்சி அரசு தொடர்பில் குறிப்பிட்டுள்ளார்.

இந்நிலையில், சர்வதேசத்துக்குச் சிறந்த செய்தியொன்றைக் கூற முடியும். அமைச்சரவையை வரையறுத்து பிரதான பதவிகளை மற்றைய இனத்தவர்களிடையே பகிர்ந்துகொள்ளலாம். சிங்களவர் ஒருவர் ஜனாதிபதியாக இருந்தால் தமிழர் ஒருவரைப் பிரதமராக்கலாம். ஏன் இங்கு இவ்வாறு முடியாது? அமெரிக்காவில் கறுப்பினத்தைச் சேர்ந்த பராக் ஒபாமாவுக்கு ஜனாதிபதியாக முடியுமென்றால் இங்கே தமிழ் பேசும் ஒருவர் பிரதமராகினால் என்ன? முஸ்லிம் ஒருவர் இங்கே சபாநாயகராகினால் என்ன? இதன்மூலம் இனவாத மன நிலையில் இருந்து விடுபட்டுள்ளோம் என்று சர்வதேசத்துக்குக் கூற முடியுமாக இருக்கும்.

புரட்சிகரமான இனவாதம் அற்ற போராட்டக்காரர்கள் கேட்ட வரையறுக்கப்பட்ட அமைச்சரவையை அமையுங்கள். இதனைச் செய்து சிறந்த செய்தியை சர்வதேசத்துக்குவே வெளிக்காட்டுங்கள். அதனைத் தொடர்ந்து அனைத்து எம்.பிக்களையும் உள்ளடக்கி துறை சார் மேற்பார்வைக் குழுக்களை அமையுங்கள் - என்றார். (அ)

# திருகோணமலையை சேர்ந்த 4 பேர் நேற்று இராமேஸ்வரத்தில் தஞ்சம்!

திருமலை, ஒக. 14

திருகோணமலை மாவட்டத்தைச் சேர்ந்த நான்கு பேர் நேற்று இராமேஸ்வரத்தில் தஞ்சம் அடைந்துள்ளனர்.

திருகோணமலை மாவட்டம் 2ஆம் வட்டம் பகுதியைச் சேர்ந்த ஜெயமாலினி (வயது-50) அவரது மகன்கள் பதுர்ஜன் (வயது-26), ஹம்சிகன் (வயது-22), மகள் பதுசிகா (வயது-19) ஆகிய ஒரே குடும்பத்தை சேர்ந்த நால்வர் மன்னாரில் இருந்து படகு மூலம் புறப்பட்டு நேற்று அதிகாலை ராமேஸ்வரம் சென்றுள்ளனர்.

ராமேஸ்வரம் சென்ற இலங்கை தமிழர்கள் தாங்களாக ஓட்டோவில் ஏறி மண்டபம் மரைன் பொலிஸ் நிலையத்துக்கு சென்றனர்.

இதனையடுத்த மண்டபம் மரைன் பொலிஸார் நடத்திய விசாரணையில், இலங்கையில் ஏற்பட்டுள்ள கடுமையான பொருளாதார வீழ்ச்சியின் காரணமாக வாழ வழியின்றி உயிரை காப்பாற்றி கொள் தமிழகத்துக்கு அகதிகளாக வந்ததாகவும், தாங்கள் நால்வரும் 2006 முதல் 2019 வரை மண்டபம் முகாமில் பதிவில் தங்கி இருந்து மீண்டும் இலங்கைக்கு சென்றதாகவும் தெரிவித்தனர்.

மத்திய, மாநில உளவுத் துறை அதிகாரிகளின் விசாரணைக்கு பிறகு 4 பேரும் மண்டபம் அகதிகள் முகாமில் ஒப்படைக்கப்பட உள்ளனர்.

மேலும் தமிழகத்திற்கு வந்த இலங்கையிலிருந்து வந்த அகதிகளின் எண்ணிக்கை 133 ஆக உயர்ந்துள்ளது குறிப்பிடத்தக்கது. (அ)

# முன்னாள் ஜனாதிபதி கோட்டா மிகவிரைவில் நாடு திரும்புவார்

## இந்திக்க அநுருத்த எம்.பி. நம்பிக்கை

**கொழும்பு, ஒக.14**

**முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ விரைவில் நாடு திரும்புவார் என்று ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் இந்திக்க அநுருத்த தெரிவித்தார்.**

"இலங்கையில் இருந்து மாலைதீவு சென்ற கோட்டாபய ராஜபக்ஷ, அங்கிருந்து சிங்கப்பூர் சென்றார். தற்போது தாய்லாந்து சென்றுள்ளார். எதற்காக இவ்வாறு சுற்றித் திரிகின்றார். அவருக்கு இலங்கை வருவதற்கு உகந்த சூழ்நிலை இல்லையா?" என்று ஊடகம் ஒன்று எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

"அவ்வாறு எந்தத் தடையும் இல்லை. அவர் விரும்பிய நேரத்தில் நாடு திரும்பலாம். அவருக்கென சில பணிகள் இருக்கலாம். அந்தப் பணிகள் முடிவடைந்த பின்னர், முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நிச்சயம் நாடு திரும்புவார். இலங்கைதான் அவரின் நாடு" - என்றும் பாராளுமன்ற உறுப்பினர் இந்திக்க அநுருத்த மேலும் குறிப்பிட்டார். (அ)

# கல்கிஸையில் ஒருவர் கொக்கேய்னுடன் கைது!

கொழும்பு, ஒக. 14

கல்கிஸை பொலிஸ் அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் கொக்கேய்ன் போதைப் பொருளுடன் சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கல்கிஸை - அத்திடிய பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்படி, குறித்த சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளதுடன், அவரிடமிருந்த 15 கிராம் 200 மில்லிகிராம் கொக்கேய்ன் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

சந்தேக நபர் அத்திடிய பிரதேசத்தை சேர்ந்த 27 வயதுடைய ஒருவரென தெரிவிக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை கல்கிஸை பொலிஸார் மேற்கொண்டு வருவதுடன், சந்தேக நபரை நேற்று கல்கிஸை நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (அ)

# கிளைபோசேட் இறக்குமதிக்கு ஜனாதிபதி மீண்டும் அனுமதி!

கொழும்பு, ஒக. 14

கிளைபோசேட் இறக்குமதியை அனுமதிக்கும் அதிவிசேட வர்த்தமானி அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. நிதி, பொருளாதார வலுப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் இந்த அதிவிசேட வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

பூச்சிக்கொல்லிப் பதிவாளரின் பரிந்துரையின்பேரில், இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டாளர் நாயகத்தினால் கிளைபோசேட்டை இறக்குமதி செய்ய அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, 2017 நவம்பர் 9 ஆம் திகதி வெளியான 2044/40 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியினால் கிளைபோசேட் இறக்குமதிக்கு விதிக்கப்பட்ட தடை, இந்த வர்த்தமானியினால் நீக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், கடந்த ஒகஸ்ட் 5 ஆம் திகதி முதல் அமுலாகும் வகையில் கிளைபோசேட் இறக்குமதி அனுமதியளிக்கப்பட்டுள்ளது. சில கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டு கிளைபோசேட் இறக்குமதியை அனுமதிக்க அரசாங்கம் அண்மையில் தீர்மானித்தது. (அ)

# தெல்லிப்பழை துர்க்காதேவி மஹோற்சவம் 28ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பம்!

யாழ்ப்பாணம், ஒக. 14

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தின் மஹோற்சவம் எதிர்வரும் 28 ஆம் திகதி, ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

பன்னிரண்டு நாள்கள் இடம்பெறவுள்ள மஹோற்சவம் எதிர்வரும் செப்ரெம்பர் 08 ஆம் திகதி, வியாழக் கிழமை ஆவணித் திருவோண தினத்தன்று காலை 8.30 மணிக்கு "துர்க்கா புஷ்கரணி" தீர்த்தத் தடாகத்தில் இடம் பெறவுள்ள தீர்த்தோற்சவம் மற்றும் மாலை 6.00 மணிக்கு இடம்பெறவுள்ள கொடியிறக்கத்துடன் நிறைவு பெறவுள்ளது.

தினமும் முற்பகல் 9.30 மணிக்கும், பிற்பகல் 5.30 மணிக்கும் வசந்த மண்டப பூசை இடம்பெற்று அம்பாள் திருவீதி உலா இடம்பெறும்.

மஹோற்சவ காலத்தில் அம்பிகை அடியவர்கள் ஆசார சீலர்களாக, சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி வருகைதந்து வழிபாடியற்றி அம்பிகையின் அஷ்ட சித்திகளையும் பெற்றுய்யுமாறு தேவஸ்தான நிர்வாக சபை கேட்டுக் கொண்டுள்ளது. (அ)

# அனுமதிப்பத்திரமின்றி கப் ரக வாகனத்தில் பனை மரங்களை ஏற்றிவந்த அறுவர் கைது!

யாழ்ப்பாணம், ஒக. 14

அனுமதிப்பத்திரம் இன்றி நேற்று அதிகாலை கப் ரக வாகனத்தில் பனைமரங்களை ஏற்றிவந்த அறுவர் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

காரைநகர் மற்றும் அல்லைப்பிட்டி பகுதியைச் சேர்ந்தவர்களே இவ்வாறு பனைமரங்களை ஏற்றிவரும்வேளை பொன்னாலைப் பகுதியில் வைத்து கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வாகனச் சாரதி மாத்திரம் வாகனத்தில் வந்த நிலையில் ஏனையோர் மோட்டார் சைக்கிள்களில் வந்துள்ளனர். எனவே வாகனச் சாரதி அனுமதிப்பத்திரம் இன்றி மரங்களைக் கடத்திய குற்றச்சாட்டின் கீழும் ஏனைய ஐவர் சந்தேகத்தின் பேரிலும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள், பறிமுதல் செய்யப்பட்ட வாகனம் மற்றும் பனை மரங்களுடன் வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

மேலதிக விசாரணைகளின் பின்னர் அவர்களை மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்தவுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# 12 மணி நேரம் மின்வெட்டு?

கொழும்பு, ஒக. 14

எதிர்வரும் டிசெம்பர் மாதத்துக்குள் நிலக்கரி இருப்புகளை கொண்டு வருவதற்கு தேவையான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படாவிட்டால் 12 மணி நேரம் மின்வெட்டு ஏற்படும் என பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அண்மைக்காலமாக பெய்து வரும் மழை காரணமாக, தற்பொழுது மின்சார உற்பத்தி பெரும்பாலும் நீர் மின்சாரம் மற்றும் நிலக்கரி மூலம் மேற்கொள்ளப்படுவதாக அதன் தலைவர் ஜனக ரத்நாயக்க குறிப்பிட்டார்.

எனினும், இந்த நடவடிக்கை டிசெம்பரில் மாத்திரமே செய்யப்பட வேண்டுமெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன், ஒக்ரோபர் முதல் ஏப்ரல் வரை மட்டுமே நிலக்கரியை இறக்குமதி செய்ய முடியுமெனவும், இதனால் எதிர்காலத்தில் மின்வெட்டு காலப்பகுதி 12 மணித்தியாலங்களாக அதிகரிக்கப்படலாமென ஜனக ரத்நாயக்க தெரிவித்தார். (அ)

# யாழ்.மாநகர பிரதி முதல்வருக்கு பார்த்தீபன் சபையில் கண்டனம்!

யாழ்ப்பாணம், ஒக. 14

நல்லூர் கோவில் உற்சவம் தொடர்பில் உண்மைக்குப் புறம்பான சிறுபிள்ளைத்தனமான கருத்துக்களை ஊடகங்களுக்குத் தெரிவிக்கும் யாழ்.மாநகர சபை பிரதி முதல்வர் து.ஈசன் தொடர்பாக யாழ் மாநகர சபை உறுப்பினர் வரதராஜன் பார்த்தீபன் சபையில் கண்டனம் தெரிவித்தார்.

யாழ்.மாநகர சபையின் மாதாந்த அமர்வு நேற்று முன்தினம் இடம்பெற்றபோதே மாநகர சபை உறுப்பினர் பார்த்தீபன் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நல்லூர் கந்தசுவாமி கோவிலுக்கும் யாழ்.மாநகர சபைக்குமான வரலாற்று பின்னணியானது மிக நீண்டதாகும். இன்று நாங்கள் இருக்கின்ற இடமாக இருக்கட்டும் எதிர்காலத் தில் நாங்கள் இருக்கப்போகின்ற இடமாக இருக் கட்டும் எல்லாவற்றிலும் நல்லூர் கந்தனின் அருளாசி உள்ளது.

ஆண்டாண்டு காலமாக நல்லூர் கந்தப்பெருமானுக்கு யாழ்.மாநகர சபை செய்து வருகின்ற பணிக்கு நல்லூர் கந்தன் அருளிய செங்கோலுடன் தான் இந்த உயரிய சபை செயற்படுகின்றது. அந்த வரலாற்று பந்தத்திற்கு பங்கம் ஏற்படும் வகையில் நாம் செயற்படுவது உகந்தது அல்ல.

2020 ஆம் ஆண்டு ஆனோல்ட், மாநகர முதல்வராக இருந்தார். அவர் நல்லூர் பெருந்திருவிழா காலத்தில் வெளிநாடு ஒன்றுக்கு பயணமானதால் மாநகரத்தின் பதில் முதல்வராக பிரதி முதல்வர் து.ஈசன் பதவி வகித்தார். அப்போது (2020 ஆண்டு) நல்லூர் கந்தசுவாமி கோவில் திருவிழா தொடர்பில் ஊடக சந்திப்பு ஒன்றினை செய்திருந்தார்.

அவ் ஊடக சந்திப்பில் கொரோனா தொற்றுக் காரணமாக காவடிகள், அங்க பிரதட்டை உட்பட எந்த ஒரு நேர்த்திக் கடன்களையும் பக்தர்கள் செய்ய முடியாது, அன்னதானம் வழங்க முடியாது என்று கூறியிருந்தார். 2020 ஆண்டு நடத்திய குறித்த செய்தியாளர் மாநாட்டின் காணொளியை இம்முறை நல்லூர் திருவிழா காலத்தில் தனது முகப்புத்தகம் வாயிலாக மீண்டும் பகிர்ந்திருக்கின்றார். இதன் மூலம் மக்களிடத்தில் ஒரு குழப்ப நிலையை உருவாக்குகின்றார்.

அதுமட்டுமின்றி கடந்த 3 நாட்களுக்கு முன்னர் ஊடகமொன்றுக்கு கருத்து தெரிவித்த பிரதி முதல்வர், 2020 ஆண்டு தான் பதில் முதல்வராக இருந்த காலத்தில் கொரோனா தொற்றுக் காரணமாக நல்லூர் கந்தன் ஆலயத் திருவிழா நடைபெறுமா இல்லையா என்று கேள்விக் குறியாக இருந்தபோது ஜனாதிபதி செயலகம், சுகாதார அமைச்சு போன்ற மட்டங்களுக்கு கடிதங்களை அனுப்பி 50 பேர் மட்டுமே உட்செல்வதற்கு இருந்த அனுமதியை அதிகரித்து அந்த உற்சவத்தை நடத்தியிருந்தோம் என்று உண்மைக்கு புறம்பான கருத்துக்களை பொறுப்பற்றதனமாக ஊடகங்களுக்கு தெரிவித்திருக்கிறார்.

அத்துடன் 2021 ஆம் ஆண்டு நல்லைக் கந்தன் வெளி வீதி வருவதற்கு தற்போதைய முதல்வர் எந்த முயற்சியும் எடுக்கவில்லை என்று கருத்துக்க ளையும் தெரிவித்தார். நல்லூர் கந்தப் பெருமான் வெளிவீதி வருவதற்கும் மாநகர முதல்வருக்கும் என்ன சம்பந்தம் இருக்கின்றது. அந்த புரிதல்கூட இல்லாமல் ஒரு மாநகரத்தின் பிரதி முதல்வர் செயற்படுவது நகைப்பிற்குரியது.

2020 ஆண்டு திருவிழா தன்னால் தான் நடந் தது போலவும் 2021 ஆண்டு திருவிழா நடை பெறுவதற்கு தற்போதைய முதல்வர் எந்த முயற்சியும் எடுக்கவில்லை என்று சிறுபிள்ளைத்தனமாக பொய்யான விடயங்களினை ஊடங்களுக்கு தெரிவித்திருக்கின்றார்.

நல்லூர் கந்தசுவாமி கோவில் சைவத்தமிழ் மக்களின் அடையாளம் என்பதனையும் தாண்டி அது யாழ்ப்பாணத்தின் அடையாளமாக எல்லோராலும் பார்க்கப் படுகின்ற நிலையில் நல்லைக்கந்தன் உற்சவத்திற்கு யாழ். மாநகர சபை செய்கின்ற பணி வருமானத்தை கருத்திற் கொண்டானது அல்ல. அது வரலாற்று ரீதியான தெய்வீகப் பணி. எனவே அப் பணி தொடர்பில் தனக்கிருக்கின்ற ஆர்வக் கோளாறினால் இவ்வாறு சிறுபிள்ளைத்தனமான கருத்துக்களை ஊடங்களுக்கு வழங்குவதை கண்டிப்பதோடு பொறுப்புடன் நடந்துகொள்ள வேண்டும் என்றும் கேட்டுக் கொள்ளுகின்றேன்- என்றார். (அ-02)

ஈழநாடு
Eelanadu
14.08.2022 ஞாயிற்றுக்கிழமை
பிலவ வருடம், ஆடி 29

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
**தொலைபேசி : 021 730 1370**

# புலம்பெயர் அமைப்புக்கள் மீதான தடைநீக்கம்?

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வேண்டுகோளுக்கு அமைவாக, குறிப்பிட்ட சில புலம்பெயர் அமைப்புக்கள் மீதான தடை நீக்கப்பட்டுள்ளது. இது ஏற்கனவே எதிர்பார்க்கப்பட்ட ஒன்றுதான். ரணில் - மைத்திரி ஆட்சிக் காலத்தில் தடை நீக்கப்பட்ட சில அமைப்புக்கள் மீது - கோட்டபாய ராஜபக்ஷ அரசாங்கம் மீளவும் தடைவிதித்தது. குறித்த தடையே தற்போது நீக்கப்பட்டுள்ளது.

புலம்பெயர் அமைப்புக்கள் பல குழுக்களாக இயங்கிய போதிலும் கூட, ஒரு சில அமைப்புக்கள் மட்டுமே, குறித்த நாடுகளின் வெளிவிவகார அமைச்சுக்களோடும் ராஜதந்திரிகளோடும் தொடர்பிலிருக்கின்றன. இதற்கப்பால், அமெரிக்க ராஜாங்கத் திணைக்களத்தோடும் தொடர்பிலிருக்கின்றன. இவ்வாறான அமைப்புக்கள் உட்பட இன்னும் பல அமைப்புக்கள் மீதும் தனிநபர்கள் மீதுமே, மகிந்த ராஜபக்ஷ அரசாங்கம் தடை விதித்திருந்தது. குறித்த தடையையே, ரணில்-மைத்திரி அரசாங்கம் நீக்கியிருந்தது. குறிப்பாக உலகத் தமிழர் பேரவை, தமிழரசு கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனோடு நெருக்கமான தொடர்பை கொண்டிருக்கின்றது. இந்த ஆண்டின் ஆரம்பத்தில் இடம்பெற்ற, ராஜாங்கத் திணைக்கள சந்திப்பின் போதும், கூட்டமைப்பின் பிரதிநிதிகளோடு, உலகத் தமிழர் பேரவையின் பிரதிநிதிகளும் இணைந்திருந்தனர். குறித்த சந்திப்பு, அமெரிக்க அழைப்பின் கீழ் இடம்பெற்றிருக்கவில்லை.

ஆட்சி மாற்றத்திற்கான ஆதரவை பெறும் நோக்கில், மங்கள சமரவீர தலைமையிலான குழுவினர், சுமந்திரன் மற்றும் உலகத் தமிழர் பேரவையின் சார்பிலான புலம்பெயர் தமிழ் பிரதிநிதிகளை 2013இல், சிங்கப்பூரில் சந்தித்திருந்தனர். இந்த சந்திப்பிலிருந்து, உலகத் தமிழர் பேரவையும், அதனோடு தொடர்பிலிருந்த ஏனைய சில அமைப்புக்களின் பிரதிநிதிகளும், கொழும்புடன் நெருங்கிச் செயற்பட்டிருந்தனர்.

இந்த பின்புலத்தில், உலகத் தமிழர் பேரவையின் வேண்டுகோளுக்கு அமைவாகவே, சில புலம்பெயர் அமைப்புக்கள் மீதான தடைகள் நீக்கப்பட்டன. தடைகள் நீக்கப்பட வேண்டிய அமைப்புக்கள் மற்றும் தனிநபர்களின் விபரங்களும் உலகத் தமிழர் பேரவையினாலேயே ரணில்-மைத்திரி அரசாங்கத்திற்கு பரிந்துரைக்கப்பட்டிருந்தது. மங்கள சமரவீர இங்கிலாந்திற்கு சென்றிருந்த போது, உலகத் தமிழர் பேரவை உட்பட ஏனைய சில புலம்பெயர் அமைப்புக்களின் பிரதிநிதிகளை உத்தியோகபூர்வமாக சந்தித்திருந்தார்.

2019இல், கோட்டபாய ராஜபக்ஷ, ஜனாதிபதி தேர்தலில் வெற்றிபெற்றதை தொடர்ந்து, எதிர்பார்த்தது போன்றே, ரணில்-மைத்திரி அரசாங்கத்துடன் தொடர்பிலிருந்த புலம்பெயர் அமைப்புக்கள் மீளவும் தடைசெய்யப்பட்டன. விடுதலைப் புலிகள் சார்பானவர்கள் என்னும் குற்றச்சாட்டின் அடிப்படையில்தான், புலம்பெயர் அமைப்புக்கள் மீது, ராஜபக்ஷ அரசாங்கம் தடைவிதித்தது. ஆனால் உண்மையில் தடைப்பட்டியலில், இருந்த அமைப்புக்கள் பலவும், 2009இற்கு பின்னர் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவான நிலைப்பாட்டை கைவிட்டிருந்தன. குறிப்பாக உலகத் தமிழர் பேரவை, கனடிய தமிழ் காங்கிரஸ், பிரித்தானிய தமிழர் பேரவை ஆகிய அமைப்புக்கள் விடுதலைப் புலிகளுக்கான ஆதரவு நிலையில் இல்லை. மேலும், தனிநாட்டுக் கோரிக்கையையும் கைவிட்டிருந்தன.

புலம்பெயர் அமைப்புக்களை நோக்கும் கொழும்பின் அணுமுறை தெளிவற்றது. அதாவது, கொழும்பின் அணுகுமுறையானது, கொள்கை நிலைப்பாட்டிற்குட்பட்ட ஒன்றல்ல. இதன் காரணமாகவே ஓர் அரசாங்கம் தடைவிதிப்பதும், பின்னர் பிறிதொரு அரசாங்கம் தடையை நீக்குவதாகவும் விடயங்கள் கையாளப்பட்டன. இப்போதும் நாடுகடந்த அரசாங்கத்தின் மீதான தடை நீக்கப்படவில்லை. சகல புலம்பெயர் அமைப்புக்கள் மீதான தடையும் நீக்கப்பட வேண்டும். மேற்குலகில் இயங்கிவரும் ஓர் அமைப்பை, பயங்கரவாதத்துடன் தொடர்புபடுத்தி தடைசெய்வதானது, அடிப்படையிலேயே முரண்பாடான ஒன்றாகும். வெளிவிவகாரங்களை வெறுமனே, உள்ளூர் அரசியலின் அடிப்படையில் நோக்குவதன் விளைவாகவே இவ்வாறான தவறுகள் நிகழ்கின்றன.

ரணில் விக்கிரமசிங்க அரசாங்கம், அனைத்து புலம்பெயர் அமைப்புக்கள் மற்றும் தனிநபர்கள் மீதான தடைகளையும் நீக்க வேண்டும். அவர்கள், வடக்கு, கிழக்கோடு ஊடாடுவதற்கான சூழலை ஏற்படுத்த வேண்டும். புலம்பெயர் அமைப்புக்கள் மற்றும் தனிநபர்கள் சிறிலங்கா அரசிற்கு எதிராக வன்முறையை பிரயோகிக்கக் கூடிய ஆற்றலோடு இல்லை. மேலும் மேற்கு நாடுகளில் சிறந்த முறையில் வாழும் அவர்களால், ஒருபோதும் அவ்வாறான முடிவை எடுக்கவும் முடியாது.



# வெந்து தணிந்த காடுகளில் பசி, தாகத்துடன் விலங்குகள்!

காடுகள் இன்னமும் பல்லுயிரிகளின் தாயகமாக விளங்குகின்றன. மனித செயல்களால் காடுகள் நாசமாகின்ற போது பல்வேறு உயிர் ஐந்துகளும் சொல்லெணாத் துயரங்களை அனுபவிக்க நேர்கின்றது.

பிரான்ஸின் பல இடங்களில் வெப்ப மிகுதியால் காடுகள் தொடர்ந்தும் எரிந்துகொண்டிருக்கின்றன. தீயை அணைப்பதற்காக இரவுபகலாக நெருப்புடன் போர் தொடர்கிறது.

வெந்து தணிந்த காடுகளில் இருந்து தாகத்துடன பசியுடனும் தப்பி ஓடி வந்த சிறு விலங்குகளை பல் வேறு அமைப்புகளின் தொண்டர்கள் மீட்டெடுத்துப் பராமரித்து வருகின்றனர். பல்லாயிரக் கணக்கான பறவைகளும் விலங்குகளும் தீயோடு அழிந்துவிட்டன. கடந்த மாத இறுதியில் காட்டுத் தீயில் இருந்து தப்பி ஓடி வந்த மான் ஒன்று கடற்கரையை நோக்கி வந்து கரையில் வீழ்ந்து இறந்த காட்சி சமூக ஊடகங்களில் வெளியாகிக் காண்போரின் மனதுருகச் செய்திருந்தது .

எரியும் காடுகளில் இருந்து சில விலங்குகள் தப்பியோடி மீட்புப் பணியாளர்களிடம் அடைக்கலம் தேடிய சம்பவங்கள் பல பதிவாகியுள்ளன.

"விலங்குகள் தன்னிச்சையாகவே நம்மை நோக்கி ஓடி வருவதைக் கண்டோம். அவை பசி தாகத்துடன் எங்களை நெருங்குவது மிகவும் அசாதாரணமான காட்சியாக இருந்து" - என்று தீயணைப்பு வீரர் ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

பிரான்ஸில் ஏழாயிரம் ஹெக்டேயர் பரப்பில் - சுமார் 14 ஆயிரம் உயிரினங்களது- முக்கிய பல்லுயிர் மையமாக (great biodiversity) விளங்கிய Teste-de-Buch என்னும் இடத்தில் உள்ள காட்டை தீ விழுங்கியுள்ளது. அங்கு மிகச் சொற்ப எண்ணிக்கையான உயிரினங்களே தப்பிப் பிழைத்துள்ளன.

மனித நடவடிக்கைகள் பருவநிலை யில் ஏற்படுத்தும் தாக்கம் பூமியைத் தாயகமாகக் கொண்ட எல்லா உயிரினங்களினதும் எதிர் காலத்தை கேள்விக்குட்படுத்தி உள்ளது.

தென்மேற்கு போர்தோ மாகாணத்தில் புசைழனெந என்ற இடத்தில் கடந்த வியாழனன்று பரவிய தீ இரண்டு தினங்கள் மூர்க்கமாக எரிந்து சுமார் 7,400 ஹெக்டேர் பரப்பளவில் வன வளங்களை அழித்துள்ளது.

ஜேர்மனி, ருமேனியா, கிறீஸ், இத்தாலி போன்ற ஐரோப்பிய நாடுகளைச் சேர்ந்த சுமார் 350 தீயணைப்பு வீரர்கள் பிரான்ஸின் வீரர்களோடு கைகோர்த்துத் தீயணைப்புப் பணிக்கு உதவியுள்ளனர்.



## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



பகிர்வு -42

# ஒரு நடக்கும் நூலகர் பற்றியது

கணபதி சர்வானந்தா

எனக்கு ஞாபகம் இருக்கும் வரையில், நான் வாசிப்பேன். அது எனது மிகப்பெரிய மகிழ்ச்சிகளில் ஒன்றாக இருக்கும் என்பது எனது நம்பிக்கை. பல எழுத்தாளர்கள் தங்கள் எழுத்தின் மூலம் ஒரு உலகத்தை உருவாக்குகிறார்கள். அதனைக் கொண்டு அவர்கள் ஒரு வாசகனின் கற்பனையைக் கையகப்படுத்தும் விதம் என்னை வியக்க வைக்கிறது. நாம் பார்ப்பதை விட வாசிப்பு எம் மனதைப் பல வழிகளில் ஆட்கொள்ளலாம் என்று நான் பரிபூரணமாக நம்புகிறேன்.

நான் குழந்தையாக இருக்கும் போது. எல்லா வகையான கதைகளையும் என் அப்பாவுக்குப் படித்துக் காட்டுவேன். அவர் அதை விரும்பிக் கேட்பார். அவர் அதிகம் படிக்காதவர். அவரலால் வாசிக்க முடியாது. எனவே முழுப் புத்தகங்களையும் அவருக்குப் படித்துக் காட்டுகின்ற பொறுப்பை நான் ஏற்றுக்கொண்டேன். உலகெங்கிலும் உள்ள நிகழ்வுகளைப் பற்றிய செய்திகளை அவருக்குப் படித்துக் காட்டுவதன் மூலம் அவரை இற்றைப்படுத்துவேன்.

மளிகைக் கடையில் இருந்து எங்கள் வீட்டிற்கு டெலிவரி செய்யப்படும் பொருட்களில் ஒட்டப்பட்டுள்ள லேபல்களிலும், அதனைச் சுற்றி வருகின்ற கடதாசியிலும் உள்ள விபரங்களையும் நான் அவருக்குப் படித்துக் காட்டுவேன்.என் தந்தையின் சார்பாக, நான் எங்கள் குடும்ப உறவினர்கள் மற்றும் நண்பர்களுக்குக் கடிதங்கள் எழுதுவேன், பின்னர் நான் எழுதியதை அவர் சரிபார்க்க அந்தக் கடிதங்களைச் சத்தமாக வாசித்துக் காட்டுவேன். எனது வாசிப்பு மீதான என் காதல் அப்படித்தான் ஆரம்பித்தது, நான் வளர வளர அதுவும் வளர்ந்து கொண்டது என்று சொல்கிறார் ராதாமணி.

ராதாமணியை ஒரு “நடக்கும் நூலகர்” என்று கேரள மண் அடையாளப் படுத்தியிருக்கிறது. இவர் கேரளத்திலுள்ள மன்னன்தாவடி தாலுக்காவிலுள்ள வயநாட்டைச் சேர்ந்தவர். அந்தப் பகுதியில் இருந்து போட்டிப் பரீட்சைக்குத் தயாராகும் பெண்களுக்கு மிகவும் குறைந்த கட்டணமான ரூபா.5 ஐ கொடுத்து ஒரு புத்தகத்தை வாங்கிப் படிக்கக் கூடியவாறான வசதிகளை இவர் செய்து கொடுத்திருக்கிறார். கடந்த 2012 ஆம் ஆண்டு தொடங்கிய இவர் முயற்சியினால் பெண்கள், குழந்தைகள், முதியோர்கள் என எல்லோருக்கும் புத்தகங்களை விநியோகித்து வருகிறார். மலைப்பாங்கான நிலப்பரப்பில் மிகவும் அசாத்திய துணிச்சலுடன் ஒரு கூடையில் புத்தகங்களை அடுக்கிக் கொண்டு தினமும் நான்கு கிலோமீற்றர்கள் வரை சுற்றி வருகிறார். கால்களால் நடந்து இவர் ஒரு மாதத்தில் ஏறத்தாழ 500 நூல்களை மக்கள் மத்தியில் விநியோகிக்கிறார் என்பது அதிசயமே.

கேரளாவின் வயநாடு மாவட்டத்தில் உள்ள மலைப்பாங்கான பிரதேசமான மொதக்கரா கிராமத்தில் வசிப்பவர்களுக்கு நூலகத்துக்குச் சென்று புத்தகங்களை எளிதில் எடுக்கக் கூடிய வசதி வாய்ப்பு இருக்கவில்லை. அந்த விடயத்தையே ராதாமணி ஒரு சவாலாகக் கையில் எடுத்துக் கொண்டார்.

கடந்த 10 வருடங்களாக அவதானிக்கிறேன். அவளது வழக்கம் பெரிதாக மாறவில்லை. ஏறக்குறைய 30 க்கும் மேற்பட்ட புத்தகங்களைக் கூடையில் அடுக்கிக்கொண்டு, ஞாயிற்றுக்கிழமைகளில் கூட, அவள் தனது கிராமத்தைச் சுற்றி உள்ள வீடுகளிலுள்ள பெண்களுக்கு நூலகப் புத்தகங்களை விநியோகிக்கிறார் –என்கிறார் ஒரு வயநாட்டைச் சேர்ந்த வாசகி ஒருவர்.

கேரளாவின் வயநாட்டில் உள்ள பிரதிபா பொது நூலகத்தில் பணிபுரியும் ராதாமணி, “நடக்கும் நூலகர்” எனத் தன்னை மாற்றிக்கொண்ட நாள் தொடங்கி இதுவரை அவரது வழக்கமான அம்சமாக இந்தப் புத்தக விநியோகம் இருந்து வருகிறது. மகாத்மா காந்தி தேசிய கிராமிய வேலை உறுதிச் சட்டம் வரைபு என்னும் திட்டத்தின் கீழ் பணிபுரியும் அவரது கிராமப் பெண்கள் ஞாயிற்றுக்கிழமைகளில் கட்டாயம் வீட்டில் இருப்பார்கள், எனவே அவர்கள் புத்தகங்களைப் படிக்க அதுவே சிறந்த நேரம் என்று கருதியே தான் ஞாயிற்றுக் கிழமைகளிலும் பணிபுரிவதாக அவர் தி நியூஸ் மினிற் என்ற ஊடகத்துக்குச் சொல்லியிருக்கிறார்.

ராதாமணிக்கு இப்போது வயது அறுபத்தைந்தைத் தாண்டியிருக்கும் – தன்னால் முடிந்தவரை அந்தப் பெண்களுக்குப் புத்தகம் வழங்குவதற்காகத் தினமும் இரண்டு முதல் மூன்று கிலோமீட்டர் வரை நடந்து செல்கிறார். கொரோனா வைரஸ் தொற்றுநோயால் கூட அவளது புத்தக சேவையைத் தடுக்க முடியவில்லை, ஏனெனில் தொற்று நோயின் ஆரம்ப நாட்களில் கூட, அவளிடமிருந்து புத்தகங்களைப் பெறப் பழக்கப்பட்டவர்கள், கொரோனா முடக்க காலத்திலும் கூடப் வாசிப்பதற்காகப் புத்தகங்களை அவரிடம் கடன் வாங்க அவரது வீட்டிற்கு வந்தனர்.அவரது நூலகத்தில் 102 உறுப்பினர்கள் உள்ளனர், அவர்களில் 94 பேர் பெண்கள்.

இந்தியாவின் கிராமியக் குரல் என்ற ஊடகத்துக்காகத் தனது கதையை எழுதிய ராதாமணி “இந்தப் பெண்கள் முதலில் புத்தகங்களைப் படிப்பதில் அதிக ஆர்வம் காட்டவில்லை. மங்கலம் மற்றும் மனோரமா போன்ற உள்ளூர் இதழ்களை மட்டுமே படிப்பதில் ஆர்வம் கொண்டிருந்தனர். இறுதியில் அவர்கள் நாவல்களில் ஆர்வம் காட்டத் தொடங்கினர். மேலும் மேலும் பலர் என்னிடம் இருந்து புத்தகங்களைக் பெறத் தொடங்கினர். இப்போது அவர்கள் படித்து முடித்தவுடன் புத்தகங்கள் பற்றிய கருத்துகளையும், ஆலோசனைகளையும் அவர்களிடமிருந்து பெறுகிறேன். அவ்வளவுக்கு அவர்கள் வளர்ச்சி பெற்றிருக்கின்றனர். – என்று குறிப்பிட்டிருக்கிறார்.

கேரள மாநில நூலகக் கழகம், “நடைபயிற்சி நூலகரின்“ முயற்சியை ஒரு முன்னுதாரணமாகக் கொண்டு ஒரு புதிய திட்டத்தைத் தொடங்கியுள்ளது, இது கிராமங்களில் இருந்து பெண்களைப் படிக்கத் தூண்டும் “பெண்கள் வாசிப்புத்திட்டம்” (வனிதா வாயன பத்ததி) என்ற பெயரில் ஆரம்பிக்கப்பட்டுத் தற்போது அது பெண்கள் மற்றும் முதியவர்கள் ஆகியோருக்கான புத்தக விநியோகத்திட்டம் (வனிதா வயோஜக புஸ்தக விதாரண பத்திதி) என மாற்றம் பெற்றிருக்கிறது.).

மகிளா சமாஜம் என்ற மகளிர் குழுவுடன் அடிக்கடி ஏற்பட்ட சந்திப்புகளின் விளைவே எனக்கு நூல்களின் மீது காதல் கொள்ளச் செய்தது. 24 ஆண்டுகள் ராஜீவ் காந்தி தேசிய காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் பழங்குடி மாணவர்களுக்கு ஆசிரியராகப் பணியாற்றினேன். கேரளாவின் வறுமை ஒழிப்பு மற்றும் பெண்கள் அதிகாரமளிக்கும் திட்டமான குடும்பஸ்ரீயின் ஒரு பகுதியாக இருந்த நான் சுற்றுலாத் துறையின் வழிகாட்டியாகவும் பணியாற்றினேன். அங்குதான் நான் நீண்ட நடைப்பயணத்தைக் கற்றுக்கொண்டேன். அதுவே நடமாடும் நூலகராக எனது பணிகளை முன்னெடுக்க உதவியிருக்கிறது – என்கிறார் ராதாமணி.

# இந்தவார ராசிபலன் 14.08.2022 - 20.08.2022



ஓகஸ்ட் 14 ஞாயிற்றுக்கிழமை
சுபகிருது வருடம் - ஆடி 29

நல்ல நேரம்: 7.30 - 9.00 ராகு காலம் : 04.30 - 06.00 திதி : திரிதியை

## மேஷம்
[ அசுவினி, பரணி, கார்த்திகை 1 பாதம் ]

நீங்கள் நினைத்ததை சாதித்து முடிப்பீர்கள். நீண்ட நாள் முயற்சிகள் நிறைவேறும். எதிர்பாலினரின் ஆதரவு மகிழ்ச்சியை ஏற்படுத்தும். பொன் பொருள் சேர்க்கை உண்டாகும். எதிர்பார்த்த வரவுகள் வந்தாலும் செலவுகள் அதிகரிக்கும். முயற்சிகளில் குழப்பமும் தடுமாற்றமும் ஏற்படும். உங்கள் பணிக்கு பாராட்டுகள் கிடைக்கும். தொழிலை விரிவு செய்யும் முயற்சியில் ஒரு சிலர் ஈடுபடுவீர்கள்.

## ரிஷபம்
[ கார்த்திகை 2,3,4, ரோகிணி, மிருகசீரிஷம் 1,2 ]

நீங்கள் நினைத்ததை நிறைவேற்றி மகிழும் வாரம் இது, தொழிலில் முன்னேற்றம் உண்டாகும். வருமானம் அதிகரிக்கும் பணிபுரியும் இடத்தில் உங்கள் செல்வாக்கு உயரும். முயற்சிக்கேற்ற பலன்களை அடைவீர்கள். இதுவரை இருந்த பிரச்சினைகளை இல்லாமல் செய்வீர்கள். மற்றவர்கள் ஆச்சரியப்படும் வகையில் உங்களுடைய செல்வாக்கு உயரும். வார இறுதியில் செலவுகள் அதிகரிக்கும்.பிள்ளைகளுக்காக மேற்கொண்ட முயற்சிகள் நிறைவேறும்.

## மிதுனம்
[ மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ]

உங்கள் செயல்கள் ஆதாயமாகும். முயற்சிகள் நிறைவேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறும்.உங்கள் செயல்களில் தடுமாற்றம் ஏற்படும். அதன்பின் உங்கள் அனுகுமுறையால் நீங்கள் நினைத்ததை சாதிப்பீர்கள். முயற்சிகளின் வழியே எதிர்பார்த்தவற்றை அடைவீர்கள். செயல்களில் எச்சரிக்கையும் கவனமும் தேவைப்படும். சங்கடத்திற்கு ஆளாக்குவீர்கள். உங்கள் மனம் தெளிவடையும். சிந்தித்து செயல்பட்டு தேவைகளை நிறைவேற்றிக் கொள்வீர்கள்.

## கடகம்
[ புனர்பூசம் 4, பூசம், ஆயில்யம் ]

உங்கள் முயற்சிகள் சாதகமாகும். நெருக்கடிகளும் அதனால் குழப்பமும் அதிகரிக்கும். எதிர்பார்த்த வரவுகள் வந்து சேரும். உங்கள் எண்ணம் ஈடேறும்.சங்கடங்கள் அதிகரிக்கும். முயற்சிகள் இழுபறியாகும். குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். உங்கள் முயற்சிகளால் தடைகளைத் தாண்டி வெற்றி பெறுவீர்கள். அவசர முடிவுகள் எதுவும் வேண்டாம். மற்றவர்களை நம்பி எந்த பொறுப்பையும் ஒப்படைக்காதீர்கள்.

## சிம்மம்
[ மகம், பூரம், உத்திரம் 1 ]

உங்களுடைய முயற்சிகளில் வெற்றி காண்பீர்கள். வரவுகள் வந்து சேர்ந்து மகிழ்ச்சியான நிலையில் இருப்பீர்கள். அரசு வழி செயல்கள் வெற்றியாகும். எல்லாவற்றிலும் கவனமும் எச்சரிக்கையும் தேவைப்படும். நன்மைகள் அதிகரிக்கும். முயற்சிகளில் கவனம் தேவை. தைரியமாக செயல்பட்டு நீங்கள் நினைத்ததை சாதிப்பீர்கள். சிந்தித்து செயல்படுவதும். நிதானத்தைக் கடை பிடிப்பதும் நன்மையை உண்டாக்கும்.

## கன்னி
[ உத்திரம் 2,3,4, அஸ்தம், சித்திரை 1,2 ]

முயற்சிகளில் நன்மை உண்டாகும். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். நினைத்ததை சாதித்து வேண்டியதை அடைவீர்கள். வீட்டில் சுப நிகழ்ச்சிகளுக்கு வாய்ப்புண்டாகும். யோகமான வாரமாகும். அரசு வழியிலும் நன்மைகள் ஏற்படும். செயல்களில் கவனம் தேவை.உங்கள் செயல்களில் வேகம் இருக்கும். மற்றவர்கள் மதிப்பிற்கு ஆளாவீர்கள். குடும்பத்தில் இருந்த பிரச்சினைகள் விலகும். உங்கள் எதிர்பார்ப்புகள் நிறைவேறும். பணிகளில் கவனம் தேவை.

## துலாம்
[ சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1,2,3 ]

முயற்சிக்கேற்ற நன்மைகளை அடைவீர்கள். ஒரு சில செயல்கள் இழுபறியாகும். துணிவுடன் செயல்படுவீர்கள். எதிர்ப்புகள் விலகும். பொருளாதார நிலை உயரும். கடன்களை அடைத்து நிம்மதி அடைவீர்கள்.அன்பு, பாசம், காதல் என்றவற்றில் சிக்குவீர்கள். அதனால் உங்களுடைய கவனம் சிதறும்.பெரியவர்களின் ஆலோசனைப்படி உங்களை மாற்றிக்கொண்டு எதிர்கால வாழ்க்கையை நினைத்து செயல்படுவீர்கள்.

## விருச்சிகம்
[ விசாகம் 4, அனுஷம், கேட்டை ]

முயற்சிகள் பலிதமாகும். துணிச்சலுடன் செயல்பட்டு நினைத்ததை சாதிப்பீர்கள். வியாபாரத்தில் கவனம் செல்லும். எதிர்ப்புகள் விலகும். உங்கள் செயல்களில் எளிதாக வெற்றி பெறுவீர்கள். வெளி வட்டாரத்தில் உங்கள் செல்வாக்கு உயரும். பண வரவும் ஆதாயங்களும் மகிழ்ச்சியும் உண்டாகும். வேலை வாய்ப்பிற்காக காத்திருந்தவர்களுக்கு நல்ல தகவல் வரும்.

## தனுசு
[ மூலம், பூராடம், உத்திராடம் 1 ]

வேகமுடன் செயல்பட்டு நினைத்ததை அடைவீர்கள். செயல்கள் இழுபறியாகும். யோசிக்காமல் செய்யும் செயல்களும் லாபத்தை உண்டாக்கும். பெரிய முயற்சிகள் வெற்றியாகும். அதன்பிறகு ஒவ்வொரு செயலையும் யோசித்து செய்ய வேண்டிய நிலை உண்டாகும். வாழ்க்கைத் துணை வழியே ஆதாயம் காண்பீர்கள். திட்டமிட்டு செயல்பட்டு எண்ணியதை அடைவீர்கள். மகிழ்ச்சியாக இருப்பீர்கள்.

## மகரம்
[ உத்திராடம் 2,3,4, திருவோணம், அவிட்டம் 1,2 ]

உங்கள் மனம் மகிழும்படியான சம்பவங்கள் நடந்தேறும். குடும்பத்தினரின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள். செயல்களில் லாபம் காண்பீர்கள். துணிச்சலாக செயல்பட்டு நினைத்ததை சாதிப்பீர்கள். உங்கள் எதிர்பார்ப்புகள் நிறைவேறும். தொழிலில் கூடுதல் கவனம் செலுத்துவதால் லாபம் அதிகரிக்கும். குடும்பத்தினர் உங்களுடைய சொல்லுக்கு மதிப்பளிப்பார்கள். அந்நியர்களால் ஆதாயம் காண்பீர்கள்.

## கும்பம்
[ அவிட்டம் 3,4, சதயம், பூரட்டாதி 1,2,3 ]

அலைச்சலும் செலவுகளும் இருக்கும். உங்கள் மனம் மகிழும்படியான சம்பவங்கள் நடைபெறும். குடும்பத்தின் மீதான அக்கறை அதிகரிக்கும். துணிச்சலாக செயல்பட்டு நினைத்ததை அடைவீர்கள். தொழிலில் இருந்த தடைகள் விலகும். பண வரவு தாராளமாகும். பொன் பொருள் வாங்கி மகிழ்வீர்கள். குடும்பத்தினரின் ஆதரவு அதிகரிக்கும். பணியிடத்தில் ஏற்பட்ட சங்கடங்கள் விலகும்.உங்களுடைய சுய முயற்சிகளால் உங்கள் நிலையில் மாற்றம் காண்பீர்கள்.


## மீனம்
[ பூரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி ]

எதிர்பார்த்த வரவுகள் வந்து சேரும். திடீர் செலவுகளால் நெருக்கடிகளை சந்திப்பீர்கள் அதன்பின் உங்கள் எதிர்பார்ப்புகள் நிறைவேறி மகிழ்வீர்கள். ஒரு சிலர் வசிக்கும் இடத்தை மாற்றுவீர்கள்.குடும்பத்தினருடன் ஏற்பட்ட சங்கடங்கள் விலகும். வரவுகள் அதிகரிக்கும். பிள்ளைகளின் திருமணம், புதிய வீடு கட்டுதல் என்று உங்கள் சிந்தனை செல்லும். உறவு, நட்புகளிடம் ஏற்பட்ட பிரச்சினைகளைக் கண்டறிந்து அவற்றை சரி செய்வீர்கள்.எதிர்பார்த்தவற்றில் வரவுகள் உண்டாகும். செலவுகளும் அலைச்சலும் அதிகரிக்கும்.

ஈழநாடு



# சீன உளவுக் கப்பல் விவகாரம்: இலங்கையின் சீன அடிமைத்தனத்துக்கு சாசனம்?



சென்னை மடல்
-பகவான் சிங்-

'அமைதிப் பூங்கா' என்றழைக்கப்படும் தென்னகத்தில் ஒரு போர்முனை உருவாகிவிடும் ஆபத்தை நோக்கி இந்தியா மெல்ல நகர்கிறதா? பேச்சுவார்த்தைகள் முற்றுப்பெறும்வரை சீன உளவுக் கப்பலான யுவான் வாங் 5, இலங்கையின் தென் கடலோரத்தில் உள்ள அம்பாந்தோட்டை துறைமுகம் வருவதை ஒத்திப்போடுமாறு கொழும்பு விடுத்த கோரிக்கையை ஏற்காமல் சீன அதிபர் எடுத்துள்ள முடிவைப் பார்த்தால் இப்படித்தான் நம்பத் தோன்றுகிறது. தனது நாட்டின் பாதுகாப்புக்கு இது ஒரு தீவிர அச்சுறுத்தலாக இருக்கும் என்பதால் இதைத் தடுத்து நிறுத்துமாறு இலங்கைக்கு இந்தியா அழுத்தம் கொடுத்திருந்தது. "இந்திய மற்றும் அமெரிக்க அரசுகள் இந்தக் கப்பலின் வருகைக்கு எதிர்ப்பு தெரிவித்ததன் வலுவான காரணங்களை முன்வைக்கத் தவறியதால்" வெள்ளியன்று ஒகஸ்ட் 12) அம்பாந்தோட்டையில் யுவான் வாங் 5 கப்பலை நிறுத்த கொழும்பு அனுமதியளித்தது என 'சண்டே டைம்ஸ்' செய்தி வெளியிட்டுள்ளது. தனது தேசியப் பாதுகாப்புக்கு வலுவான அச்சுறுத்தல் என்ற காரணத்தால் இந்தியா எழுப்பிய எதிர்ப்பை அடுத்து, திட்டமிடப்பட்ட தேதியிலிருந்து 5 நாட்கள் தள்ளி, ஒகஸ்ட் 16 அன்று இக் கப்பல் வந்து சேரும் என்று இந்த இதழின் இணையப் பதிப்பு தெரிவிக்கிறது

திங்களன்று (ஒகஸ்ட் 8), அமெரிக்கத் தூதர் ஜூலி சுங். அதிபர் ரணில் விக்ரமசிங்கவைச் சந்தித்து, இதேபோல சீனக் கப்பல் வருகை குறித்துத் தீவிர கவலை தெரிவித்திருந்தார். அவரிடமும் இந்தியத் தூதரக அதிகாரிகளிடமும் கப்பல் வருகைக்கு எதிர்ப்பு தெரிவிப்பதற்கான காரணங்கள் என்னவென்று கேட்கப்பட்டன. இரு தரப்பினரும் வலுவான காரணங்களைக் கூறாததையடுத்து, இலங்கை அரசு கப்பலுக்கு அனுமதியளித்தது என்று தெரிவித்த அந்த செய்தித் தளம், இந்த விவகாரம் இலங்கைக்குப் புவியரசியல் ரீதியில் ஒரு பெரும் தலைவலியாக உருவாகிவிட்டதாகவும் சுட்டிக்காட்டியுள்ளது.

இந்தச் செய்தி உண்மையாக இருக்கும் பட்சத்தில், உயர் தொழில்நுட்ப ஊடுருவல் உபகரணங்களையும் தாங்கி, அம்பாந்தோட்டைக்கு வரும் இக்கப்பல், இலங்கை என்ற சிறிய தீவின் சீன அடிமைத் தனத்துக்கு சாசனம் எழுதித் தருவது போன்றதாகும் என்பது மட்டுமல்லாமல், அந்தப் பிராந்தியத்தின் அமைதிக்கும் பாதுகாப்புக்கும் பேராபத்தாக இருக்கும் என்ற தெளிவான உண்மையைக் கண்டும் காணாமல் இருக்க கொழும்பு துணிந்து விட்டதை இந்த ஊடகம் ஏனோ குறிப்பிடவில்லை.

ஒகஸ்ட் 11 தொடங்கித் தொடர்ந்து இரண்டு வாரங்களுக்குத் தனது உளவு வேலையைச் செய்யத் தேவையான அதிக அளவு எரிபொருளைப் பல மாதங்களுக்கு முன்பிருந்தே அம்பாந்தோட்டை துறைமுகத்தில் சீனா சேகரம் செய்திருப்பதாகத் தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. "சென்ற ஆண்டு நவம்பர்-டிசம்பர் மாதங்களிலேயே, ஈரானிடமிருந்து இந்த எரிபொருளை சீனா வாங்கியுள்ளது. அப்போதைய அதிபர் கோட்டாபய இதை அறிந்திருந்தார். அம்பாந்தோட்டையில் சேகரிக்கப்பட்டுள்ள எரிபொருள் மொத்த இலங்கையின் இரு வார எரிபொருள் தேவைக்கும் போதுமானது" என்று பெயர் குறிப்பிட விரும்பாத அதிகாரி ஒருவர் தெரிவித்தார். இத்தகைய எரிபொருள், யுவான் வாங் 5 தேவைகளுக்கு மட்டும் தானா அல்லது எதிர்கால அவசியங்களுக்கும் சேர்த்தா என்பது ஒரு பெரிய கேள்விக் குறி. தென்னிந்தியாவில் உள்ள மிக முக்கிய பாதுகாப்புத் தளங்கள், செயற்கைக்கோள்கள், ஒடிஸாவில் உள்ள ஏவு தளம் ஆகியவற்றைச் சுமார் 750கிமீ சுற்றளவுக்கு கண்காணிக்கக்கூடிய கருவிகளைக்கொண்ட இந்தக் கப்பல், இந்துமாக்கடல் பகுதியின் கடற்படுக்கையையும் ஆய்ந்து, எதிர்காலத்தில் இந்திய-சீனப் போர் மூளும் பட்சத்தில் இந்தத் தகவல்களை இந்தியாவின் நீர்மூழ்கிக் கப்பல்களுக்கு எதிராகவும் பயன்படுத்தலாம்.

ஒகஸ்ட் 11 என்று திட்டமிட்டபடி அந்தக் கப்பல் வந்து சேரவில்லை என்றாலும், அது மெதுவாகவும் மாற்றுப்பாதை வழியாகவும் இலங்கையை நோக்கிய தனது பயணத்தைத் தொடர்ந்து வந்ததாக முன்னதாகச் செய்திகள் தெரிவித்தன. கொழும்பைச் சேர்ந்த newsfirst.lk என்ற செய்தித் தளம், வியாழனன்று (ஒகஸ்ட் 11 மாலை அந்த உளவுக் கப்பல் இலங்கைத் தீவிலிருந்து சுமார் 600 நாட்டிகல் மைல் தொலைவில் இருந்ததாகத் தெரிவித்தது. தான் கப்பல் வர அனுமதி அளிக்கவில்லை என்றும், தன் அனுமதியின்றித் துறைமுகத்துக்குள் சீனக் கப்பல் நுழைய முடியாது என்றும் துறைமுக அதிகாரி ஒருவர் மார்தட்டிக் கொண்டதாகத் தகவல் வந்தது. ஐயோ பாவம், அவருக்குத் தெரியாதா, ரணில் பிரதமராக இருந்தபோது அவர் அம்பாந்தோட்டையை சீனாவிடம் 99 வருடக் குத்தகை என்று தாரைவார்த்தார் என்று. அத் துறைமுகத்தின் தற்போதைய உரிமை யாளர் என்ற முறையிலும் இந்தியா ஆட்சேபம் தெரி வித்த ஒரே காரணத்துக்காக, 'இலங்கை அனுமதி மறுத்தால், இதுவரையிலான பயணச் செலவையும், திரும்பிச் செல்வதால் நேரும் அவமானத்தையும் இலங்கையால் ஈடுகட்ட முடியாது' என்று மிரட்டியும், சீனா இந்தக் கப்பலை இங்கு நுழைக்கலாம். சீனாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான சாதாரண பரிமாற்றங் களில் நியாயமற்ற மற்றும் உண்மையற்ற பாதுகாப்புக் காரணங்களைக் குறிப்பிட்டு, மூன்றாவது நாடு தலை யிடுவதாக இந்தியா என்று பெயர் குறிப்பிடாமல் சீனா குற்றம் சாட்டியுள்ளது.

"எங்களைப்போன்ற ஒரு சிறிய தீவு தேசம், இந்தியாவைத் திருப்திப்படுத்துவதற்காகத் தனது திட்டங்களை மாற்ற முடியாது என்று தன் வலிமையைக் காட்ட சீனா முடிவு செய்துவிட்டதாகத் தெரிகிறது. அவர்களிடம் கையேந்திய பிறகு எங்களுக்கு வேறு வழியில்லை. டிராகன் மற்றும் புலி இவற்றுக்கிடையில் சிக்கிய சிறு எலியைப் போல எங்கள் நிலை ஆகிவிடும்போலிருக்கிறதே" என, பெயர் குறிப்பிட விரும்பாத ஒரு மூத்த கொழும்பு அதிகாரி கவலை தெரிவித்தார். சீனாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையில் சிக்கியுள்ள தைவானை உதாரணமாக அவர் குறிப்பிட்டார். சீனா தனது செயற்கைக்கோள் ஏவுதளமாக இலங்கையைப் பயன்படுத்திவிடுமோ என்ற அச்சமும் அவரிடம் இருந்தது.

## பிராந்திய பாதுகாப்புக்கும் அமைதிக்குமான பேராபத்தை கண்டும் காணாமலிருக்க துணிந்த இலங்கை!

அவர் குறிப்பிடாத ஒரு விஷயம், தென்னிந்தியாவை எதிர்நோக்கியுள்ள பெரிய அச்சுறுத்தல் குறித்துத்தான். 'பெலோஸி வருகைக்குப் பிறகான சீனாவின் வான் தாக்குதல் பயிற்சிகள், தைவான் மீதான சீன ஆக்கிரமிப்புக்கான தயார் நிலை தான்' என்று செவ்வாயன்று (ஒகஸ்ட் 9) குறிப்பிட்டிருந்தார் தைவானின் அயலுறவு அமைச்சர் ஜோசப் வூ. அந்த அறிக்கைக்குப் பின்னாலிருந்த பதற்றத்தைப் பார்த்தால், தென்னிந்தியக் கடலிலும் அதே போன்ற எண்ணம்தான் சீனாவுக்கு இருக்குமோ என்ற ஐயம் எழுகிறது. அம்பாந்தோட்டையில் எரிபொருள் குவிப்பு நினைவுக்கு வருகிறது.

இன்று உலகில் மிகப் பெரிய தலைவராக ஷி திகழ்கிறார். நாட்டின் அதிபர், இராணுவத்தின் தலைவர், ஆளும் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர் என்று மூன்று கிரீடங்களை அணிந்துள்ள அவர், இந்தியாவிற்குத் தனது எதிர்ப்பைக் காட்ட அம்பாந்தோட்டையை ஒரு வாய்ப்பாகக் கருதுவதில் வியப்பில்லை. சீன விரிவாக்கத்

## திரை மறைவிலிருந்து இயக்கும் ராஜபக்ஷ குடும்பத்தினர்?

தைக் கட்டுப்படுத்த உறுதி பூண்டிருக்கும் அமெரிக்காவுடன் இந்தியா, குவாட் கூட்டமைப்பில் இணைந்து செயல்படுவது சீனாவிற்கு எரிச்சலூட்டி வருகிறது. யாழ்ப்பாணத் தீவுகளில் தன்னுடைய மாற்று ஆற்றல் திட்டங்களை பிடுங்கி, இந்தியா தன் வசம் ஆக்கிக் கொண்டதில் சீனா எரிச்சலடைந்திருப்பதும் நாம் அறிந்ததேஅமைதிப்பூங்காவாகக் கொண்டாடப்படும் தென்னிந்தியப் பகுதியில் பதற்ற நிலையை உருவாக்குவதன் மூலம் இந்தியப் படைகளை இந்தப் பகுதிக்கு மடைமாற்றும் அவசியத்தை உருவாக்கி, வடக்கின் எல்லைப் பகுதியில் இந்தியப் படைகளின் எண்ணிக்கையைக் குறைக்கவும் இது ஒரு நீண்ட காலத் திட்டமாக அமையலாம். இலங்கையில் தான் செய்துள்ள முதலீடுகளையும் அவற்றில் பணியாற்றும் தனது ஊழியர்களையும் அவர்கள் குடும்பங்களையும் இந்திய அச்சுறுத்தலிலிருந்து காக்கத் தனது படைளை இறக்குவது அவசியம் என்றும் ஒரு கட்டத்தில் சீனா கூறக்கூடும். இவ்வாண்டு பிற்பகுதியில் நடக்கவுள்ள சீன கம்யூனிஸ்ட் கட்சி மாநாட்டில் ஷீ மூன்றாவது முறை ஆட்சியைக் கோரவுள்ள நிலையில், இதுபோன்ற வெளிநாட்டு மோதல்கள், அவருக்கு வலிமையான பிம்பத்தை உருவாக்குவதற்கும் உதவக்கூடும்.

தனது அயலுறவுத்துறை அறிக்கைகள் மூலம் சீனாவிடம் இந்தப் பயணத்தை ஒத்திவைக்குமாறு கோரியதாக பெயருக்கு தெரிவித்துவிட்டு, திரை மறைவில் சீன அழுத்தத்துக்கு ரணில் அடிபணிந்துவிட்டார் என்று டில்லியில் உள்ள தகவலறிந்த வட்டாரங்கள் கூறுகின்றன. கொந்தளிப்பான இலங்கை அரசியல் என்னும் கலங்கிய குட்டையில் மீன் பிடிக்கப் பல தந்திரங்கள் செய்து, ஆறு முறை பிரதமர் பதவி வகித்தவரும், தற்போது எட்டாவது அதிபராகப் பொறுப்பேற்றிருப்பவருமான ரணில் விக்கிரமசிங்க, இப்போது கம்பியில் தலைகீழாகத் தொங்கும் நிலையில் உள்ளார். அண்டை நாடான இந்தியாவுடன் சுமுக உறவைப் பேணும் அதேநேரம். தொலைவிலிருந்து, தன்னைக் களமாகப் பயன்படுத்தத் துடிக்கும் சீனாவின் கோரிக்கைகளுக்கும் செவிமடுக்கவேண்டிய கட்டாயத்தில் இருக்கிறார். மயிலுக்கும் டிராகனுக்கும் இடையே ஊசலாடிக்கொண் டிருக்கும் நிலையில், திரை மறைவிலிருந்து இயக்கும் ராஜபக்ஷ குடும்பத்தினரின் கட்டளைகளையும் நிறை வேற்றியாக வேண்டிய நிர்ப்பந்தமும் அவருக்கு இருக்கிறது.

யுவான் வாங் 5 விஷயத்தில் சீனாவின் எதிர்வினையை மீண்டும் ஒருமுறை பார்ப்போம். 'மூன்றாம் தரப்பு', 'தார்மீகப் பொறுப்பின்றி' நடந்துகொண்டதாகக் குற்றம் சாட்டியிருந்தது. திங்களன்று (ஒகஸ்ட் 8) தனது செய்தியாளர் சந்திப்பில் இரண்டு முக்கிய புள்ளிகள் குறித்து வலியுறுத்திய அயலுறவுத் துறை அமைச்சகச் செய்தித் தொடர்பாளர் வாங் வென்பின், சீனா உள்ளிட்ட பல்வேறு நாடுகளின் அறிவியல் ஆய்வுக் கப்பல்களுக்கு இந்து மாக்கடலில் இலங்கை ஒரு நிறுத்தமாகச் செயல்பட்டுள்ளதைக் குறிப்பிட்டார். மேலும், பிற கடலோர நாடுகளின் நீர்ப்பரப்பைப் பயன்படுத்தும்போது சீனா எப்போதும் அந்தந்த நாடுகளின் கடல் சட்ட விதிகளுக்கு உட்பட்டே செயல்பட்டு வந்துள்ளதாகவும் கூறியுள்ளார்.

சாத்தான் வேதம் ஓதுவதுபோல் அல்லவா இதெல்லாம் உள்ளது? கடந்த டிசம்பரில் கொழும்பில் உள்ள சீனத் தூதர் க்வி ஜெனாங்க் யாழ்ப்பாணத்திற்குப் பயணம் மேற்கொண்டார். வடக்குக் கடற்கரையோரம் வரை இலங்கை இராணுவ அதிகாரிகளுடன் பயணம் செய்து, அங்கிருந்து உள்ளூர் கடற்படை ரோந்துப் படகில் சிறிது தூரம் சென்று, அங்கிருந்து ஒரு சிறிய படகில் ஏறி ராம சேது தீவுக் கூட்டத்திற்குச் சென்றார். அங்கிருந்து இராமேஸ்வரத்தைத் தெளிவாகப் பார்க்க முடியும். பாக் ஜலசந்தியின்மீது தனது ட்ரோன்களைப் பறக்கவிட்டுப் படம்பிடித்து, இந்தியா எவ்வளவு தூரத்தில் இருக்கிறது என்று இலங்கை அதிகாரிகாளைக் கேட்டுள்ளார். அந்த மூன்று நாள் பயணத்தின்போது யாழ்ப்பாண நூலகம் சென்று, அங்குள்ள இந்தியப் பகுதிக்குச் சென்றார். தனது படகுப் பயணத்தின் முடிவில், அவர் ஊடகங்களிடம் "இது ஒரு தொடக்கம் தான்" என்று அச்சுறுத்தும் வகையில் குறிப்பிட்டார். இதெல்லாம் எந்த 'தார்மீகப் பொறுப்பில்' அடங்கும்? முதல்முறையாக ஒரு சீனத் தூதர் யாழ்ப்பாணம் செல்லும் இந்தப் பின்னணியை இந்தியா புரிந்து கொள்ள இது போதுமானதாக இருந்தது.

சீனாவின் செய்தித்தொடர்பாளர் வென்பின் குறிப்பிட்ட இரண்டாவது விஷயம், தனது வளர்ச்சி அக்கறையின் அடிப்படையில், எந்த ஒரு நாட்டுடனும் தனது உறவுகளை வளர்த்துக்கொள்ள உரிமைபெற்ற இறையாண்மையுள்ள ஒரு நாடு இலங்கை என்பதுதான். பகிரப்பட்ட இருதரப்பு நலன்களை மட்டுமே இது கருத்தில் கொள்கிறது என்றும் எந்த மூன்றாவது தரப்பும் இதில் இலக்கன்று என்றும் அவர் குறிப்பிட்டிருந்தார். "சில நாடுகள், 'பாதுகாப்பு நலன்கள்' என்ற பெயரில் இலங்கைக்கு அழுத்தம் கொடுப்பதில் நியாயமில்லை" என்றார் அவர்.

வென்பின் சொல்வது சரிதான், சரிதான். ஆனால், அவர், 'வளர்ச்சி' அக்கறை என்கிறாரே! மூன்றாம் உலக நாடுகளில், குறிப்பாக, உள்ளூர் சமூக-அரசியல் அமைப்புகளால் தட்டிக்கேட்கப்படாத, அராஜக, ஊழல் அரசியல்வாதிகளால் ஆளப்படும் நாடுகளில், சீனாவின் வளர்ச்சி அக்கறை என்ன என்பதை உலகே அறியும். நாமும் அறிவோம். காலிமுக போராட்டம் வரை இலங்கையிலும் இதே நிலைதான் இருந்தது. இதுபோன்ற நாடுகளைத் தன் கடன் வலைக்குள் சிக்க வைக்க சீனா திட்டமிட்டுச் செயல்பட்டு வருகிறது. யுவான் வாங் 5 விவகாரம் எழுப்பக்கூடிய அச்சுறுத்தலை உணராமல், இதை மேம்போக்காக மட்டுமே நாம் கண்டும் காணாமல் இருக்கப்போவதானால், ஆபத்தான நிலைக்குத் தயார் படுத்திக்கொள்ளாத தவறைச் செய்தவர்களாவோம். ஈழப் போருக்கு உதவியதாக இந்தியாவின்மீது சிங்களவர்கள் பகைமைப் பார்வை பார்ப்பதை மட்டுப்படுத்த, பொருளாதார மீட்புக்கு இந்தியா செய்த உடனடி உதவி வகைசெய்துள்ளது. இருப்பினும், வடகிழக்குப் பகுதியில் பிரச்னைகள் தொடர்கின்றன. தமிழர் தலைமை அந்நிய அழுத்தங்களுக்கு ஆட்பணிவது, ஊழல் மற்றும் சுயநலப்போக்கைக் கடைபிடிப்பதுடன், சீனாவுக்கு அடிமையாகிவிடக் கூடிய ஆபத்தையும் உணரவில்லை என்பது கவலையளிக்கிறது. சாமானியர்களான நாமாவது அவர்களிடம் இதையெல்லாம் உணர்த்துவோமா?

நாம் மீண்டும் சந்திக்கும்போது நிலைமை எப்படி இருக்குமோ! வணக்கம்.





# "அறகலய" போராட்ட இயக்கத்தின் மூலமான படிப்பினைகள்

♦ வீரகத்தி தனபாலசிங்கம்

கடந்த மே 9 பிரதமர் பதவியில் இருந்து மகிந்த ராஜபக்ச விலகினார். ஜூன் 9 முன்னாள் நிதியமைச்சர் பசில் ராஜபக்ச பாராளுமன்ற உறுப்பினர் பதவியை துறந்தார். ஜூலை 9 மாபெரும் மக்கள் கிளர்ச்சியை அடுத்து ஜனாதிபதி கோதாபய ராஜபக்ச ஜனாதிபதி மாளிகையில் இருந்து வெளியேறி பிறகு வெளிநாடு சென்று பதவி விலகினார். இந்த மூன்று 9 ஆம் திகதிகளும் இலங்கையின் அரசியலில் நிலையான ஒரு வரலாற்று முக்கியத்துவ இடத்தைப் பெற்றுவிட்டன.

இது சில எதிரணி கட்சிகளுக்கு 9 ஆம் திகதியில் போராட்டம் நடத்தினால் அரசாங்கத்தை வீழ்த்தமுடியும் என்ற ஒரு மருட்சியைக் கொடுத்துவிட்டது போலும். ஆகஸ்ட் 9 ஆம் திகதியையும் அவை மாபெரும் போராட்டத்துக்கான தினமாக அறிவித்து கொழும்பில் அணிதிரளுமாறு மக்களுக்கு அழைப்பு விடுத்தன. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கத்தை வீட்டுக்கு அனுப்புவதே இந்த அழைப்பின் நோக்கம். ஜனதா விமுக்தி பெரமுன ( ஜே.வி.பி.)யும் முன்னரங்க சோசலிச கட்சி யும் அதன் பின்னணியில் இருந்தபோதிலும், சமகி ஜன பலவேகயவின் பாராளுமன்ற உறுப்பினரான முன்னாள் இராணுவ தளபதி பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவே முன்னரங்க பேச்சாளராக நின்று " இறுதி யுத்தத்தில்" பங்கேற்குமாறு மக்களை அழைத்தார்.

ஜூலை 9 தலைநகரில் இடம்பெற்ற வரலாற்று மக்கள் கிளர்ச்சியின்போது அங்குவந்த வேறு அரசியல்வாதிகளை போராட்டக்காரர்கள் தாக்கி விரட்டிய போதிலும், அவர்களில் ஒரு பிரிவினர் பொன்சேகாவை உற்சாகமாக வரவேற்றதை காணக்கூடியதாக இருந்தது. அந்த வரவேற்பு போராட்ட இயக்கத்தின் மத்தியில் தனக்கு பேராதரவு இருக்கிறது என்ற ஒரு மருட்சியை அவருக்கு ஏற்படுத்திவிட்டது போல தோன்றுகிறது. பாராளுமன்றத்துக்கு உள்ளேயும் வெளியேயும் " அறகலய" போராட்ட இயக்கத்தின் முக்கிய பேச்சாளர் போன்று பொன்சேகா நடந்துகொண்டார்.

மக்கள் போராட்டத்தை ஒடுக்குவதற்கு அரசாங்கத்தினால் பிறப்பிக்கப்படக்கூடிய உத்தரவுகளை " சட்ட விரோதமானவை" என்று வர்ணித்த அவர் இராணுவத்தினர் அந்த உத்தரவுகளை பின்பற்றக்கூடாது என்றும் வேண்டுகோள் விடுத்தார். இராணுவ தளபதி பதவியில் இருந்து ஓய்வுபெற்று 13 வருடங்கள் கடந்துவிட்ட போதிலும் தனது வேண்டுகோளுக்கு படையினர் மதிப்புக்கொடுப்பார்கள் என்று அவருக்கு நம்பிக்கை இருக்கிறது போலும். அவரது போராட்ட அழைப்புக்கும் தங்களுக்கும் எந்த தொடர்பும் இல்லை என்று சமகி ஜன பல வேகய அறிவிக்கத்தவறவில்லை.

எதிர்பார்க்கப்பட்டதைப் போன்றே ஆகஸ்ட் 9 " இறுதி யுத்தத்தில் " பங்கேற்பதில் மக்கள் ஆர்வம் காட்டவில்லை. அந்த போராட்டத்துக்கு அழைப்பு விடுத்தவர்களினால் பெரும் எண்ணிக்கையில் மக்களை அணிதிரட்ட முடியவில்லை. சில தொழிற்சங்க இயக்கங்களும் சம்பந்தப்பட்ட கட்சிகளின் ஆதரவாளர்களுமே ஆங்காங்கே ஆர்ப்பாட்ட ஊர்வலங்களை நடத்தினர்.

அந்த போராட்டத்தில் பங்கேற்பதில் மக்கள் காட்டாத ஆர்வத்தை தற்போதைய அரசாங்கத்தை அவர்கள் ஆதரிக்கிறார்கள் என்றோ அல்லது வீதிகளில் இறங்கவேண்டிய அளவுக்கு இப்போது மக்களுக்கு பிரச்சினைகள் இல்லை என்றோ அர்த்தப்படுத்தவேண்டியதில்லை. ஆனால், இலக்குகளை தெளிவாக வரையறுக்காமல் நெடுகவும் போராட்டங்களை தொடருவதை மக்கள் விரும்புவதாக இல்லை.

இடையறாத போராட்டங்கள் ஒரே குழப்பநிலைக்கு வழிவகுக்கலாம் என்ற பீதி மக்கள் மத்தியில் காணப்படுகிறது. போராட்டக்காரர்கள் மீதான விக்கிரமசிங்க அரசாங்கத்தின் ஒடுக்குமுறையும் " அறகலய " போராட்ட இயக்கத்தில் கடந்த நான்கு மாதங்களாக பங்கேற்று ஆதரவு வழங்கிய பல அமைப்புக்களை அதைரியப்படுத்திவிட்டது என்பதும் உண்மை.

" இறுதி யுத்தத்திற்கு" அழைப்பு விடுத்தவர்கள் இலங்கை அரசியல் அரங்கை பெருமளவுக்கு மாற்றியமைத்துவிட்ட மக்கள் கிளர்ச்சியின் அடிப்படை உணர்வுகளை கொச்சைப் படுத்திவிட்டார்கள் என்றுதான் கூறவேண்டும். புதியதொரு அரசியல் கலாசாரம் தோற்றுவிக்கப்படவேண்டும் மக்களுக்கு பொறுப்புக்கூறக்கூடியதும் ஊழலற்றதுமான ஆட்சிமுறை ஏற்படுத்தப்படவேண்டும் ஒட்டுமொத்தத்தில் முறைமை மாற்றம் ( System Change) வேண்டும் என்ற போராட்ட இயக்கத்தின் அடிப்படை இலட்சியங்களுக்கு மக்கள் தொடர்ந்தும் ஒருமைப்பாட்டை வெளிக்காட்டுகிறார்கள் என்பதில் சந்தேகமில்லை.

அதேவேளை, பொருளாதார நெருக்கடியில் இருந்து நாட்டை மீட்பதற்கான நடவடிக்கைகளில் இறங்கியிருப்பாக கூறும் புதிய ஜனாதிபதிக்கு அவகாசம் வழங்கவேண்டும் என்ற கருத்து மக்களில் கணிசமான பிரிவினர் மத்தியில் குறிப்பாக மேல் தட்டு மற்றும் நடுத்தர வர்க்கத்தவர்கள் மத்தியில் வலுவாக இருக்கிறது. தற்போது அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்படுகின்ற சில நடவடிக்கைகள் மக்களுக்கு ஒரு தற்காலிக நிவாரணத்தை தருகின்றன என்ற போதிலும் வாழ்க்கைச் செலவு உயர்வு தொடர்ந்தும் வானளாவ உயர்ந்துகொண்டே போகிறது.

ஒரு புறத்தில் பொருளாதார இடர்பாடுகளை தணிப்பதற்காக நடவடிக்கைகள் எடுப்பதில் அக்கறை காட்டுவதாக கூறுகின்ற அரசாங்கம் மறுபுறத்தில் மின்சார கட்டணங்களை முன் னென்றும் இல்லாத வகையில் 75 சதவீதத்தினால் அதிகரித்திருக்கிறது. நீர்க் கட்டணம் போன்ற பல சேவைகளின் கட்டணங்கள் அதிகரிக்கப்படும் சாத்தியமும் இருக்கிறது. மேலும் பல்வேறு வரிகளை அதிகரித்ததன் மூலமாக மக்கள் மீது மறைமுகமாக சுமைகள் ஏற்றப்பட்டுக் கொண்டேயிருக்கின்றன. இதே போக்கு தொடருமாக இருந்தால் ஒரு எல்லைக்கு அப்பால் மக்கள் மீண்டும் வீதிகளுக்கு இறங்குவதை தவிர்க்கமுடியாமல் போகும்.

கடந்த நான்கு மாதங்களாக தொடர்ந்த மக்கள் கிளர்ச்சி போன்று மீண்டும் மக்கள் அணிதிரண்டு ஆட்சியதிகாரத்தின் வாசற்படி வரை வந்து சவால் விடுக்கக்கூடிய நிலைமை மீண்டும் தோன்றுவதற்கு அனுமதிக்கக் கூடாது என்பதில் அரசியல் அதிகார வர்க்கம் உறுதியாக இருக்கிறது. விக்கிரமசிங்க அரசாங்கத்தின் ஒடுக்குமுறை நடவடிக்கைகள் இதையே பிரதிபலிக்கின்றன.

" அறகலய" போராட்ட இயக்கம் தணிந்துபோயிருக்கலாம். ஆனால் அது பொதுமக்கள் மத்தியில் தவறான ஆட்சிமுறைக்கு எதிராக வளர்த்துவிட்ட அரசியல் பிரக்ஞை தணிந்துவிடப்போவதில்லை. ராஜபக்சாக்களின் ஆட்சியின் வீழ்ச்சிக்கு பின்னரான காலகட்டத்தில் இலங்கையின் அரசியல் பழையமாதிரி இருக்கமுடியாது. உன்னிப்பாக தங்களை இடையறாது அவதானித்துக்கொண்டிருக்கப்போகின்ற மக்களின் உணர்வுகளை மதிக்காமல் அரசியல்வாதிகள் முன்னர் போன்று செயற்படமுடியாது என்பது நிச்சயம்.

அதேவேளை " அறகலய" போராட்ட இயக்கம் அதனால் இதுவரையில் சாதிக்கக்கூடியதாக இருந்தவை பற்றியும் கடைப்பிடித்த அணுகு முறைகள் பற்றியும் விமர்சன அடிப்படையில் உள்நோக்கிப் பார்க்கவேண்டியது அவசியமாகும். ஆரம்பக்கட்டத்தில் இருந்தே இயக்கத்துக்கு கட்டுறுதியான -- தெளிவான ஒரு தலைமைத் துவம் இருக்கவில்லை. ஆதரவு தெரி வித்து கொழும்பு காலிமுகத்திடல் " கோட்டா கோ கம " விற்கு வந்த பல் வேறு அமைப்புக்களும் அவற்றின் நோக்கங்களை அறிவிப்பதற்கான களமாக அதை மாற்றியதையும் காணக்கூடியதாக இருந்தது.



(09 ஆம் பக்கம் பார்க்க...)




# 2,000 நாட்களை கடந்த போராட்டம்

இலங்கையில் இடம்பெற்ற 30 வருட உள்நாட்டுப் போர் காரணமாக காணாமல் போனோரை கண்டறிந்து கொடுக்குமாறு வலியுறுத்தி நடத்தப்பட்டு வரும் தொடர் போராட்டம் கடந்த வெள்ளியன்று இரண்டாயிரமாவது நாளை எட்டியிருக்கிறது.

வவுனியா - ஏ9 வீதியில் இந்த தொடர் சுழற்சி முறையிலான போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

வவுனியாவில் 2017ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 24ம் திகதி இந்த போராட்டம் தொடங்கப்பட்டது.

அதேபோன்று, கிளிநொச்சியில் 2017ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 20ம் திகதியும், முல்லைத்தீவில் 2017ம் ஆண்டு மார்ச் மாதம் 24ம் திகதியும் இந்த போராட்டம் தொடங்கப்பட்டது.

2000ஆம் நாள் போராட்டத்தை முன்னிட்டு, வடக்கில் பல பகுதிகளில் வெள்ளியன்று மாபெரும் போராட்டங்கள் நடத்தப்பட்டன.

வவுனியாவில் இடம்பெற்ற போராட்டத்தில் கலந்துகொண்டவர்கள், அமெரிக்க, ஐரோப்பிய ஒன்றியம் ஆகியவற்றின் கொடிகளை ஏந்தியவாறு, சர்வதேசத்திடம் நீதி கோரியிருந்தனர்.

அதேவேளை, காணாமல் போனோரின் உறவுகளது படங்களையும் ஏந்திய இந்த போராட்டம் நடத்தப்பட்டது.

இதேவேளை, வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் கிளிநொச்சியிலும் போராட்டமொன்றை நடத்தியிருந்தனர்.

## கிளிநொச்சியில் திரண்ட உறவினர்கள்

கிளிநொச்சி கந்தசுவாமி ஆலயத்திற்கு முன்பாக இந்த போராட்டம் ஆரம்பிக்கப்பட்டது. வடக்கு, கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களினால் இந்த போராட்டம் ஏற்பாடு செய்யப்பட்டது.

காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவுகளை மீட்டுத் தருமாறும், காணாமல் போனோருக்கு என்ன நேர்ந்தது என்பது தொடர்பிலும் நீதியான விசாரணை வேண்டும் என வலியுறுத்தியும், ராஜபக்ச குடும்பத்தை கைது செய்து சட்டத்திற்கு முன்பாக நிறுத்த வேண்டும் எனவும் இதன்போது கோஷங்கள் எழுப்பப்பட்டன.

இந்த போராட்டத்தின் இறுதிக் கட்டத்தில் ஐக்கிய நாடுகள் சபைக்கு மகஜரொன்றும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இந்த 2000 நாட்களில் தாம் பல்வேறு விடயங்களை கற்றுக்கொண்டதாகவும், இவ்வாறு கற்றுக்கொண்ட விடயங்களின் ஊடாக சில உறுதியான முடிவுகளை எடுத்ததாகவும் காணாமல் போனோர் உறவுகள் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு எடுத்த முடிவுகளை அவர்கள் பட்டியலிட்டுள்ளனர்.

1. தமிழர்களுக்கு வடகிழக்கில் தாயகம் வேண்டும்.

2. இந்த தாயகம் பாதுகாக்கப்பட்டதாக வேண்டும்.

3. பாலியல் வன்கொடுமை, கடத்தல், கொலைகள், இனவழிப்பு போன்றவற்றிலிருந்து நம்மைப் பாதுகாத்துக் கொள்ள நமக்குச் சொந்த இறையாண்மை இருக்க வேண்டும்.

4. ஐக்கிய நாடுகளினால் கண்காணிக்கப்படும் வாக்கெடுப்பு மூலம் நமது பாதுகாப்பை அடைவதற்கான முறையான வழி.

5. அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் நல்லெண்ணத்தால் மட்டுமே அனைத்தும் சாத்தியமாகும்.

6. நாம் இறையாண்மையைப் பெற்றால், நாம் எதிர்கொள்ளும் ஒவ்வொரு பிரச்னையையும் தீர்க்க முடியும், குறிப்பாக காணாமல் ஆக்கப்பட்ட குழந்தைகளைக் கண்டுபிடிப்பது இலகுவாகும்.

7. எங்கள் குழந்தைகள் எங்கு என்று எங்களுக்குத் தெரியும். அவர்களில் சிலர் பாலியல் அடிமைகளாகவும், வேலைக்காரர்களாகவும், அவர்களில் சிலர் பிக்குகளாகவும், அவர்களில் சிலர் சிங்களவர்களாகவும் மாற்றப்பட்டனர்.

8. வெளிநாட்டு ஊடகவியலாளர் ஒருவர் தமிழர்களைப் பார்க்க பாவமாக இருப்பதாக கூறியிருந்தார் என்பதை நாம் இன்று சொல்ல விரும்புகிறோம். ஏனெனில் சிங்களவர்கள் தமிழுக்கு எதிராக வேலை செய்ய தமிழர்களை பணம் கொடுத்து உளவாளிகளாகவும், சம்பளம் வாங்கும் கொலைகாரர்களாகவும், பணம் கொடுத்து போதைப்பொருள் கடத்துபவர்களாகவும், பணம் கொடுத்து பாலியல் தொழிலாளர்களாகவும், தமிழ் கலாச்சாரங்களை அழிப்பதற்காகவும் பயன்படுத்துகிறார்கள்.

இதேவேளை, இந்த 2000 நாட்கள் தொடர் போராட்டத்தில் கலந்துக் கொண்ட, சுமார் 120க்கும் அதிகமானோர் உயிரிழந்துள்ளதாக காணாமல் ஆக்கப்பட்டோர் உறவுகள் சங்கத்தின் செயலாளர் கோ.ராஜ்குமார் தெரிவித்துள்ளார்.

இலங்கை அரசாங்கத்தின் அழைப்புகளை தாம் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை எனவும், இலங்கை அரசாங்கம் பொய்யான வாக்குறுதிகளை வழங்கி வருவதாகவும் அவர் கூறுகின்றார்.

"நாங்கள் அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம் ஆகியவற்றின் மீது தொடர்ந்தும் நம்பிக்கை வைத்துள்ளோம். இந்தியா மீதான நம்பிக்கையை இழந்து விட்டோம். அகத்தின் அழகு முகத்தில் தெரியும் என்பார்கள். ஆனால், பொருளாதார நெருக்கடியின் போது இந்தியா, இலங்கைக்கு அனைத்து ஆதரவையும் வழங்கியது. தமிழர்களுக்கும் அவர்களின் வாக்குறுதியளிக்கப்பட்ட அரசியல் தீர்மானத்திற்கும் எந்தவிதமான முயற்சியும் இந்தியா எடுக்கவில்லை என்பதை நாம் பார்த்தோம்," என அவர் குறிப்பிட்டார்.

---

# "அறகலய" போராட்ட இயக்கத்தின்...

(08 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

கோட்டாபய ராஜபக்ச அதிகாரத்தைக் கைவிட்டு நாட்டை விட்டு ஓடிய பிறகு அடுத்தது என்ன என்பது பற்றி போராட்ட இயக்கத்தின் மத்தியில் தெளிவு இருக்கவில்லை. மக்களின் மாபெரும் பங்கேற்புடன் போராட்ட இயக்கம் அரசியல் அதிகாரவர்க்கத்தை உலுக்கி உலகின் கவனத்தை ஈர்த்தபோது அதற்குள் ஊடுருவிய சில அரசியல் சக்திகள் தங்களது அரசியல் நிகழ்ச்சித்திட்டத்துக்கு இசைவான முறையில் இயக்கத்தை "கடத்திச்செல்ல "முயற்சித்து வன்முறைகளுக்கு வழிவகுத்தது ஒடுக்கு முறையை கட்டவிழ்த்துவிடுவதற்கு விக்கிரமசிங்க அரசாங்கத்துக்கு வாய்ப்பாகிப் போனது.

மே 9 அலரிமாளிகையில் இருந்து மகிந்த ராஜபக்சவினால் கட்டவிழ்த்து விடப்பட்ட குண்டர்கள் காலிமுகத்திடல் அமைதிவழி போராட்டக்காரர்கள் மீது தாக்குதல்களை நடத்தியபோது நாடு பூராவும் மக்கள் கொந்தளித்தார்கள். அதே போன்ற ஒரு பிரதிபலிப்பை ஜூலை 22 அதிகாலையில் பொலிசாரும் இராணுவத்தினரும் பலவந்தமாக போராட்ட இயக்கத்தவரை வெளியேற் றியபோது காணக்கூடியதாக இருக்க வில்லை.

முறைமை மாற்றம் போராட்ட இயக்கத்தின் பிரதான முழக்கமாக இருந்தது. முறைமை மாற்றம் என்பது அடிப்படையில் ஒரு அரசியல் புரட்சியாகும்.ஆட்சி மாற்றம் என்பது முறைமை மாற்றம் ஆகிவிடாது. சமுதாயத்தின் அரசியல் மற்றும் பொருளாதாரக் கட்டமைப்பை மாற்றுவதே உண்மையான முறைமை மாற்றம். கோதாபய ராஜபக்ச கூட 2019 நவம்பர் ஜனாதிபதி தேர்தலின் போது முறைமை மாற் றம் பற்றி பேசினார். இன்று ஜனாதிபதி விக்கிரமசிங்கவும் அது பற்றி பேசுகிறார்.உண்மையில் அத்தகைய மாற்றம் ஒன்றுக்கு அவர்கள் எதிரானவர்கள். அத்தகைய மாற் றம் அவர்கள் பிரதி நிதித்துவப் படுத்தி நிற்கின்ற வர்க்கத்தின் நலன்களுக்கு முற்றிலும் எதிரானது.

அதனால் அரசியல் அதிகார வர்க்கம் உண்மையான முறைமை மாற்றத்துக்காக போராடுகின்ற சக்திகளை படைபலம் கொண்டு ஒடுக்கவே செய்யும்.அதேவேளை, தற்போதைய அரச இயந்திரத்தை அப்படியே வைத்துக்கொண்டு முறைமை மாற்றத்தை செய்யமுடியாது.அதனால் முறைமை மாற்றம் என்பதைப் பற்றிய தெளிவான விளக்கமின்றி வெறுமனே ஒரு சுலோகமாக பயன்படுத்துவது மக்களை தவறாக வழிநடத்துவதாகவே அமையும்.

இதனிடையே, போராட்ட இயக்கம் ஓய்ந்துபோனதுதான் தாமதம் அரசியல்வாதிகள் தங்கள் பழைய போக்கிற்கு திரும்புவதைக்காணக்கூடியதாக இருக்கிறது.

போராட்ட இயக்கம் உச்சக்கட்டத்தில் இருந்தவேளையில் சர்வகட்சி இடைக்கால அரசாங்கம் அமைப்பது குறித்தும் அரசியல் உறுதிப்பாட்டை ஏற்படுத்தி சர்வதேச சமூகத்தின் நம்பிக்கையை வென்றெடுத்து உதவிகளைப் பெறவேண்டிய அவசியம் குறித்தும் பேசிய பெரும்பாலான அரசியல் கட்சிகள் இப்போது அத்தகைய ஒரு ஏற்பாட்டுக்கு ஒத்துழைக்காமல் இருப்பதிலேயே கவனம் செலுத்துகின்றன.

ஜனாதிபதி விக்கிரமசிங்க ராஜபக்சாக்களின் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் உறுப்பினர்களை அமைச்சர்களாகக் கொண்ட அரசாங்கத்துக்கு தலைமைதாங்கிக்கொண்டு சர்வகட்சி அரசாங்கத்தை அமைப்பதற்கு முன்வருமாறு கட்சிகளின் தலைவர்களுக்கு அழைப்பு விடுப்பதில் எந்தளவுக்கு நேர்மையாக இருக்கிறார் என்று தெரியவில்லை. ஆனால், அரசியல் கட்சிகள் அத்தகைய அரசாங்கம் ஒன்றில் பங்கேற்பது தங்களுக்கு ஒரு பொறியாக அமைந்துவிடுமோ என்று அஞ்சுகின்றன.

ஜனாதிபதி அரசியல் கட்சி களுடன் பேச்சுவார்த்தைகளை தொடர்ந்து நடத்திவருகின்ற போதிலும் பல கட்சி அரசாங் கம் ஒன்றையாவது அமைப்பதில் வெற்றி காண்பதற்கான சாத்தியங்கள் இல்லை என்ப தையே நிகழ்வுப்போக்குகள் உணர்த்துகின்றன.


தாங்கள் தற்போது எடுக் கக்கூடிய நிலைப்பாடுகள் அடுத்துவரக்கூடிய தேர்தலில் தங்க ளுக்கு எத்தகைய தாக்கத்தை ஏற்படுத் தும் என்பதை மனதிற்கொண்டே அரசி யல் கட்சிகள் அவற்றின் வியூகங்களை வகுக்கின்றன. எதிரணி கட்சிகள் "அற கலய" போாட்ட இயக்கத்துக்கு ஆதர வாக பேசினாலும் அரசாங்கம் தற்போது முன்னெடுக்கின்ற அடக்கு முறை நடவடிக்கைகளை உள்ளூர ஆதரிக்கவே செய்கின்றன. ஏனென்றால் தாங்கள் எவ்வாறு செயற்படவேண்டும் என்பதை தீர்மானிக்கின்ற வல்லமையு டன் மக்கள் சக்தி ஒன்று நிலையாக இருப்பதை அரசியல் வர்க்கம் விரும்பப்போவதில்லை.

"ராஜபக்சாக்களுடனேயே முன்னரும் இருந்தோம்.இப்போதும் இருக்கிறோம். எதிர்காலத்திலும் இருப்போம்.ராஜபக்சாக்களுடன் மீண்டெழுவோம் " என்று குரல்கள் கடந்தவாரம் பாராளுமன்றத்தில் ஒலித்ததையும் கேட்டோம்.

# சல்மான் ருஷ்டி யார்?

## முகமது நபியை அவமதித்ததாக முஸ்லிம்களின் வெறுப்புக்கு ஆளானது ஏன்?






**நி**யூயார்க்கில் கத்தியால் குத்தப்பட்ட சர் சல்மான் ருஷ்டிக்கு கடந்த அரை நூற்றாண்டாகவே தனது இலக்கியப் பணியின் காரணமாக கொலை மிரட்டல்கள் வந்து கொண்டிருந்தன.

பிரிட்டிஷ் நாவலாசிரியரான சல்மான் ருஷ்டியின் பல புத்தகங்கள் இலக்கிய உலகில் பிரபலமானவை. அவரது இரண்டாவது நாவலான "மிட்நைட்ஸ் சில்ட்ரன்" 1981ஆம் ஆண்டில் புக்கர் பரிசை வென்றது.

ஆனால் 1988-ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட அவரது நான்காவது நாவலான தி சாத்தானிக் வெர்சஸ் மிகவும் சர்ச்சைக்குள்ளானது. இதன் தலைப்பை சாத்தானின் வசனங்கள் என்று கூறலாம். இது அதற்கு முன்பு எந்தப் புத்தகமும் சந்திக்காத எதிப்பைச் சந்தித்தது. இஸ்லாமிய உலகம் கொந்தளித்தது.

ஏராளமான கொலை மிரட்டல்கள் வந்தன. அந்தப் புத்தகம் வெளிவந்த பிறகு அவர் தலைமறைவாகவே வாழ நேரிட்டது. பிரிட்டிஷ் அரசு அவருக்குப் பாதுகாப்பு அளித்து வந்தது.

சல்மான் ருஷ்டியை கொல்லுமாறு ஈரானின் உச்சபட்ச மதத் தலைவராக இருந்த அயதுல்லா ருஹோல்லா கோமேனி, பத்வா (மரணதண்டனை) என்படும் மதக்கட்டளையை 1989ஆம் ஆண்டு பிறப்பித்தார்.

இந்தப் பிரச்னைக்காக ஈரானும் பிரிட்டனும் தங்களது அரசுமுறை ராஜ்ஜீய உறவுகளை முறித்துக் கொண்டன. இஸ்லாமியர்களின் தீவிரமான எதிர்வினையால் கருத்துச் சுதந்திரத்துக்கு ஏற்பட்ட அச்சுறுத்தலை உலகம் முழுவதும் உள்ள எழுத்தாளர்கள் கண்டித்தனர்.


சல்மான் ருஷ்டி, இந்தியா சுதந்திரம் பெறுவதற்கு இரண்டு மாதங்களுக்கு முன் அப்போதைய பம்பாயில் பிறந்தார்.

14 வயதில் அவர் இங்கிலாந்துக்கு படிப்பதற்காக அனுப்பி வைக்கப்பட்டார். பிறகு கேம்பிரிட்ஜில் உள்ள புகழ்பெற்ற கிங்ஸ் கல்லூரியில் வரலாற்றுத் துறையில் ஹானர்ஸ் பட்டம் பெற்றார்.

அவருக்கு பிரிட்டிஷ் குடியுரிமை கிடைத்தது. தனது இஸ்லாமிய மத நம்பிக்கைகளைத் துறந்தார். சில காலம் ஒரு நடிகராவும் இருந்தார். அதன் பிறகு நாவல்களை எழுதத் தொடங்கினார்.

அவரது முதல் புத்தகமான "க்ரிமஸ்" பெரிதாக வெற்றியடைவில்லை. ஆனால் அவருக்குத் திறமை இருப்பதை எழுத்துலகம் புரிந்து கொள்ள அது அவருக்கு உதவியது.

தனது இரண்டாவது புத்தகமான மிட்நைட்ஸ் சில்ட்ரனை எழுத ருஷ்டிக்கு 5 ஆண்டுகள் தேவைப்பட்டன. இது பரவலாகப் பாராட்டப்பட்டது. 5 லட்சம் பிரதிகள் விற்று புதிய சாதனை படைத்தது.



மிட்நைட்ஸ் சில்ட்ரன் இந்தியாவைப் பற்றி பேசியது. 1983 இல் வெளியான அடுத்த நாவலான "ஷேம்" பாகிஸ்தானைப் பற்றியது. நான்கு ஆண்டுகளுக்குப் பிறகு, ருஷ்டி நிகரகுவா நாட்டு பயணத்தைப் பற்றிய "தி ஜாகுவார் ஸ்மைல்" நாவலை எழுதினார்.

செப்டம்பர் 1988ஆம் ஆண்டு அவரது உயிருக்கு ஆபத்தை ஏற்படுத்திய சாத்தானிக் வெர்சஸ் நாவல் வெளியிடப்பட்டது. இந்த பின்-நவீனத்துவ நாவல் முஸ்லிம்கள் மத்தியில் சீற்றத்தை ஏற்படுத்தியது. இந்த நாவல் தங்களது மதத்தை அவமதிப்பதாக அவர்கள் கருதினர்.

இதற்குத் தடை விதித்த முதல் நாடு இந்தியா. அதன் பிறகு பாகிஸ்தான் உள்ளிட்ட மற்ற முஸ்லிம் நாடுகள் இந்தியாவைப் பின்பற்றி ருஷ்டியின் புத்தகத்தைத் தடை செய்தன.

ஆயினும் எழுத்துலகில் இந்த நாவல் பாராட்டப்பட்டது. நாவல்களுக்கு வழங்கப்படும் விட்பிரெட் பரிசைப் பெற்றது. ஆனால் நாவல் பிரபலமாகும் போதே அதற்கான எதிர்ப்பும் கடுமையாக அதிகரித்தது. ஏராளமானோர் வீதிகளில் இறங்கிப் போராடத் தொடங்கினார்கள்.

சில முஸ்லிம்கள் இந்த நாவல் இஸ்லாத்தை அவமதிப்பதாகக் கருதினர். கதையில் பாலியல் தொழில் செய்யும் இரு பெண்களுக்கு முகமது நபியின் மனைவிகளின் பெயர்கள் கொடுக்கப்பட்டது உள்ளிட்ட பல அம்சங்களை முஸ்லிம்கள் கண்டித்தனர்.

சாத்தானின் வசனங்கள் என்ற தலைப்பு, குரானில் இருந்து முகமது நபியால் நீக்கப்பட்ட இரண்டு வசனங்களைக் குறிப்பிடுகிறது. அவ்விரு வசனங்களும் பிசாசினால் தரப்பட்டவை என்று முகமது நம்பியதாகக் கருதப்படுகிறது.

1989ஆம் ஆண்டு ஜனவரி மாதம் பிரிட்டனின் பிராட்போர்டில் முஸ்லிம்கள் புத்தகத்தின் நகலை எரித்தனர். செய்தித்தாள் முகவர்கள் அவரது புத்தகங்களைக் காட்சிப்படுத்துவதை நிறுத்தினர். ஆனால் தன் மீதான மத நிந்தனை குற்றச்சாட்டுகளை ருஷ்டி நிராகரித்தார்.

ருஷ்டிக்கு எதிராக நடந்த கலவரங்களில் மக்கள் கொல்லப்பட்டனர். ஈரான் தலைநகர் தெஹ்ரானில் பிரிட்டிஷ் தூதரகம் தாக்கப்பட்டது. ருஷ்டியின் தலைக்கு 3 மில்லியன் அமெரிக்க டாலர்கள் பரிசு வழங்குவதாக அறிவிக்கப்பட்டது.

இதற்கிடையே பிரிட்டனின் சில முஸ்லிம் தலைவர்கள் பொறுமையாக இருக்குமாறு அறிவுறுத்தினர். ஆனால் மற்றவர்கள் ஈரானின் உச்சபட்ச மதத் தலைவரை ஆதரித்தனர். ருஷ்டி மீதான கொலை மிரட்டல்களுக்கு அமெரிக்கா, பிரான்ஸ் உள்ளிட்ட மேற்கத்திய நாடுகள் கண்டனம் தெரிவித்தன.

அதன் பிறகு ருஷ்டி தனது மனைவியுடன் பொலிஸ் பாதுகாப்பில் தலைமறைவாக வாழத் தொடங்கினார். இஸ்லாமியர்களுக்கு ஏற்படுத்திய துயரத்துக்காக ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவித்தார். ஆனாலும் ஈரானின் உச்சபட்ச மதத் தலைவரான கோமேனி, ருஷ்டிக்கு எதிரான பத்வாவை மீண்டும் பிறப்பித்தார்.

ருஷ்டியை போலவே அதை விற்பனை செய்தவர்களுக்கும் வெளியீட்டாளர்களுக்கும் கொலை மிரட்டல்கள் வந்தன.

அதே நேரத்தில் அந்தப் புத்தகம் அட்லாண்டிக் பெருங்கடலின் இருபுறம் உள்ள நாடுகளிலும் பரபரப்பாக விற்பனையாகியது. பிரிட்டனை போலவே ஐரோப்பிய நாடுகள் ருஷ்டியை ஆதரித்தன. பெரும்பாலான நாடுகள் தெஹ்ரானில் இருந்து தூதர்களைத் திரும்பப் பெற்றன.

இதனிடையே 1991ஆம் ஆண்டு ஜூலையில் ருஷ்டியின் புத்தகத்தை ஜப்பானில் மொழி பெயர்த்த ஹிடோஷி என்பவர் டோக்கியோவில் கொல்லப்பட்டார். உதவிப் பேராசிரியராகப் பணியாற்றிய அவர் பல்கலைக்கழகத்துக்கு வெளியே பலமுறை கத்தியால் குத்தப்பட்டதாக காவல்துறையினர் கூறினர்.

அதே மாதத் தொடக்கத்தில், இத்தாலிய மொழிபெயர்ப்பாளரான எட்டோர் கேப்ரியோலோ, மிலனில் உள்ள அவரது குடியிருப்பில் கத்தியால் குத்தப்பட்டார். எனினும் அவர் உயிர் பிழைத்தார்.

1998ஆம் ஆண்டில் ஈரான் அரசு மனம் மாறியது. ருஷ்டிக்கு எதிராகப் பிறப்பிக்கப்பட்ட பத்வாவுக்கான தனது அதிகாரபூர்வமாக ஆதரவை விலக்கிக் கொண்டது.

சாத்தானின் வசனங்கள் புத்தகத்துக்குப் பிறகும் பல புத்தகங்களை ருஷ்டி எழுதியுள்ளார். ஹாரூன் அண்ட் தி சீ ஆஃப் ஸ்டோரிஸ் (1990), இமேஜினரி ஹோம்லேண்ட்ஸ் (1991), தி மூர்ஸ் லாஸ்ட் சை (1995), தி கிரவுண்ட் உள்ளிட்டவை அடங்கும்.

ருஷ்டி நான்கு முறை திருமணம் செய்து கொண்டார். அவருக்கு இரண்டு குழந்தைகள் உள்ளனர். சமீப காலமாக அவர் அமெரிக்காவில் வசிக்கிறார். இலக்கியத்திற்கான அவரது சேவைகளுக்காக 2007 ஆம் ஆண்டில் அவருக்கு சர் பட்டம் வழங்கப்பட்டது.

2012ஆம் ஆண்டில், சாத்தானின் வசனங்கள் பற்றிய சர்ச்சையை ஒட்டிய தனது வாழ்க்கையின் நினைவுகளைப் புத்தகமாக வெளியிட்டார்.



# நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு சுயதொழில்களை ஊக்குவிப்போம்

தற்போதைய பொருளாதார நெருக்கடி நிலைமையில் நாட்டில் சுயதொழில்களை ஊக்குவிக்கவேண்டிய தேவை அனைவருக்கும் எழுந்துள்ளது. அதிலும் குறிப்பாக

வடக்கு-கிழக்கு பகுதிகளில் ஏற்கனவே இலை மறை காய் களாக இருக்கும் சுயதொழில் முயற்சியாளர்கள் பலர் இனங் காணப்படாமலேயே உள்ளனர்.

இன்றைய நிலையில் இவ்வாறான சுயதொழில் முயற்சியாளர்களை ஊக்குவிக்க வேண்டிய கடப்பாடு அரசுக்கும் ஏனைய உதவி வழங்கும் நிறுவனங்களுக்கும் உண்டு.

சுயதொழில் முயற்சிகள் ஊக்கு விக்கப்பட்டால் அவை நாட்டின் பொருளாதாரத்தை தூக்கு நிறுத்து வதில் முக்கிய பங்காற்றக் கூடியன.

ஆகவே தற்போதுள்ள நெருக் கடி நிலைக்கு தீர்வு காண்பதன் ஓர் அங்கமாக இந்த சுயதொழில் முயற்சியாளர்களுக்கான உதவிகள், சந்தை வாய்ப்புக் கள், கட்டடவசதிகள் முக்கியமாக ஏற்படுத்திக்கொடுக்கப்பட வேண்டும். இது குறித்து அனைத்து தரப்பினரும் கவனம் செலுத்தவேண்டும்.

யாழ்ப்பாணத்தில் உள்ள சுய தொழில் முயற்சியாளர்கள் சிலர் தமது உற்பத்திகள்

குறித்து வழங்கிய கருத்துக்கள் இதோ...!

## நவீன இயந்திரங்கள் தேவை

**ச.பிரியதர்சினி**
*கொழும்புத்துறை*

கொழும்புத்துறைப் பகுதியில் நீண்ட காலமாக தோல் பொருள் உற்பத்தியை மேற்கொண்டு வருகின் றேன். தென் இலங்கையில் இருந்து எமது பகுதிக்கு உற்பத்திப் பொருட்கள் வருகின்றமையினால் எமக்கு குறைந்த விலையில் பொருட்களை கொடுக்க முடியா துள்ளது.

சுய தொழில் உற்பத்தியாளர்கள் என்ற ரீதியில் மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களில் எமக்கு முன்னுரிமை அளிக்கப்படுகின்றது. குறிப்பாக சமுர்த்தி உத்தியோகத்தர்கள் எம்மை ஊக்குவிப்பதற்காக செயற்படுகின்றார்கள்.

நாங்கள் சளைத்தாலும் அவர்கள் சளைக்கவிடாது தொடர்ச்சியாக எமக்கு ஊக்கம் அளிப்பதன் மூலம் எமது சுயதொழில் உற்பத்தியை மென்மேலும் உயர்த் தக்கூடியதாக உள்ளது.

எனினும் தற்போது மூலப் பொருட்களின் விலை உயர்வினால் எமக்கு குறைந்த விலையில் பொருட்களை விற்பனை செய்ய முடியாதுள்ளது.

எமக்கு சந்தை வாய்ப்பு ஏற்படுத்தி தரப்பட்டால் மிகவும் பயனுள்ளதாக இருக்கும். குறிப்பாக மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகத்தினால் வருடத் திற்கு இரண்டு அல்லது மூன்று தடவை யாழ்ப்பா ணத்தில் உள்ள அனைத்து சுயபொருள் உற்பத்தியா ளர்களுக்கு மாபெரும் கண்காட்சியை ஏற்படுத்தி

மக்களுக்கு உற்பத்தி பொருட்கள் தொடர்பான விளம்பரங்களை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட் டுள்ளது.

அதேபோல பிரதேச செயலக மட்டத்திலும் அவ்வா றான கண்காட்சி ஏற்பாடு செய்வதன் காரணமாக எமது பொருட்களுக்கு இலவச விளம்பரம் கிடைக்கின்றது.

அத்தோடு தற்போதுள்ள பொருளாதார நெருக்கடி நிலையில் கண்காட்சி ஏற்பாடு செய்யப்பட்டுள்ள போதிலும் பொதுமக்களின் வருகை குறைவாக காணப்படுகின்றது. அதற்கு காரணம் விலை அதிகரிப்பே.

எனினும் எமது சுயதொழில் உற்பத்தியை மேன் மேலும் மேம்படுத்துவதற்கு எமக்கு மேலும் இயந்திர உபகரணங்கள் மற்றும் நவீன தொழில்நுட்ப இயந்திரங் களை அரசாங்கம் கடன் அடிப்படையில் அல்லது மானிய அடிப்படையில் வழங்குமாக இருந்தால் அது எமக்கு மேலும் பல உதவியாக இருக்கும்.

## சந்தை வாய்ப்பு வேண்டும்

**உதயகுமார் சுதாஜினி**
*சுயதொழில் உற்பத்தியாளர், உரும்பிராய்.*

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பகுதி யில் எனது சுய தொழில் உற்பத்திகளை மேற்கொண்டு விநியோகிக்கக்கூடியதாக இருக்கின்றது.

நான் கற்பவதிகளுக்கான சத்து மா மற்றும் ஏனைய பொருட்களை உற்பத்தி செய்து விற்பனை செய்து சுயதொழில் முயற்சியை மேற்கொண்டு வருகின்றேன்.

ஆனால் எமக்கு உரிய சந்தை வாய்ப்பு கிடைப்ப தில்லை. சிறந்த சந்தை வாய்ப்பு கிடைக்குமாக இருந் தால் தொழிலில் முன்னோக்கிச் செல்ல முடியும். குறிப்பாக நான் எனது தற்துணிவின் காரணமாகவே சுயதொழில் முயற்சியை ஆரம்பித்துள்ளேன். அவ்வாறு ஆரம்பித்து நான் தொடர்ச்சியாக உற்பத்திகளை மேற்கொண்டு வருகின்றேன். சுயதொழில் உற்பத்தியா ளர்களுக்கு பிரதேச செயலர், பிரதேச செயலக உத்தி யோகத்தர்கள் ஒத்துழைப்பை வழங்கி வருகின்றார்கள்.

எமக்கு உரிய சந்தை வாய்ப்பு பெற்று தரப்படுமாக இருந்தால் நமது தொழில் முயற்சியை முன்னோக்கிக் கொண்டு செல்ல முடியும். அத்தோடு தற்பொழுது இந்த மூலப் பொருட்களின் விலை கொஞ்சம் அதி கரித்து காணப்படுகின்றதன் காரணமாக விலை பிரச்னை காணப்படுகின்றது.

எமது உற்பத்தி பொருட்களைக் குறைந்த விலையில் விற்பனை செய்ய முடியாதஷ நிலையும் காணப்படுகின் றது. எனது தொழிற்சாலையில் ஆறு பேர் என்னுடன் பணியாற்றுகின்றார்கள். அத்தோடு எனது குடும்ப உறுப்பினர்களும் எனது தொழில் முயற்சிக்கு உறு துணையாக இருக்கின்றார்கள்.

அதன் காரணமாக நான் இன்னும் வங்கி மற்றும் ஏனைய கடன் நிலைமைக்கு செல்லவில்லை. எனினும் சமுர்த்தி, பிரதேச செயலக மட்டங்களில் எமக்கு பூரண ஒத்துழைப்பு கிடைக்கின்றது.

சுயதொழில் உற்பத்தியாளர்கள் என்ற ரீதியில் எமக்கு முன்னுரிமை அளிக்கப்படுகின்றது.

அறிக்கையிடல்
REPORTING
என். குகராஜ்





## உற்பத்திப் பொருள்கள் உரியவேளையில் கிடைப்பதற்கு ஆவன செய்யவேண்டும்

**சுலக்ஷன்**
இணுவில்

நான் பல்கலைக்கழகத்தில் கல்வி கற்று பட்டம் பெற்று தற்பொழுது சுய தொழில் முயற்சியாளராக இருக்கின்றேன்.

நான் பல்கலைக்கழகத்தில் கல்வி கற்று முடித்து இருந்த சமயத்தில் கொரோனா தொற்று நிலை காரண மாக நாடு முடங்கியிருந்தது. அதன்போது நான் வீட்டில் சிறு தொழில் முயற்சி ஒன்றை ஆரம்பித்திருந் தேன். அதாவது வீட்டில் இருந்து மிளகாய்த் தூள் அரிசி மா மற்றும் சீரகம், மிளகுதூள் ஆகிய சிறுசிறு பொருட் களை உற்பத்தி செய்தேன். இன்று ஒரு தொழிற்சாலை யாக மாறும் அளவிற்கு எனது தொழில் முயற்சி அமைந்துள்ளது. இதே போல யாழ்ப்பாணத்தில் உள்ள வேலையற்ற இளைஞர் யுவதி களும் இவ்வாறான தொழில் முயற்சியில் ஈடுபடுவதன் மூலம் அடுத்தவரை நம்பி இருக்காது உங்களுடைய வாழ்வாதாரத்தை கொண்டு செல்லக்கூடிய நிலை காணப்படுகின்றது.

நான் தற்பொழுது பல பொருட்களை உற்பத்தி செய்கின்றேன். அவ் உற்பத்தி பொருட்களுக்குரிய மூலப் பொருட் களை அருகில் உள்ள விவசாயிகளிடம் கொள்வனவு செய்கின்றேன். தற்போது உள்ள பொருளா தார நெருக்கடி நிலை காரணமாக விவசாயிகளிட மிருந்து பொருட்களை கொள்வனவு செய்வதில் இடர் நிலை காணப்படுகின்றது. அதாவது அந்த விவசாயிகள் தமது உற்பத்தியை குறைத்துவிட்டார்கள் அதன் காரண மாக எனக்கு தேவையான உற்பத்திப் பொருட்களைக் கொள்வனவு செய்ய முடியாதுள்ளது.

எனவே அரசாங்கம் இந்த விவசாயி களுக்கு உரிய எரிபொருள் மற்றும் ஏனைய பொருட்களை தங்கு தடை இன்றி கிடைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். அவ்வாறு நட வடிக்கை எடுத்தால் என்னை போன்ற சிறு தொழில் முயற்சியாளர்கள் பலர் நன்மையடைவார்கள்.

அதேபோல நான் ஒன்றைக்கூறி வைக்க விரும்புகி றேன். நான் பட்டதாரி இன்று ஒரு சிறு தொழில் முயற்சியா ளராக செயற்படுகின்றேன். இந்த தொழிலின் மூலம் எனக்கு பூரண திருப்தி கிடைக்கின்றது. எனக் குரிய வருமா னத்தை நான் பெறக்கூடியதாக உள்ளது. ஆரம்பத்தில் சிறுசிறு இடையூறுகள் ஏற்பட்டன. ஆனால் தற்பொழுது அது அனைத்தையும் களைந்து நான் துரித மாக செயல்படுகின்றேன். குறிப்பாக எனக்கு மாவட்ட செயலகம் பிரதேச செயலகங்களில் எடக்கூடிய ஊக்குவிப் புகளை வழங்குகின்றார்கள்.

# விஜயின் வில்லன்!



வாரிசு படம் முடிந்ததும் லோகேஷ் கனகராஜ் இயக்கத்தில் நடிக்கவுள்ளார். பொதுவாக லோகேஷ் கனகராஜ் படம் என்றாலே அவற்றில் அதிக வில்லன்கள் இடம்பெறுவது வழக்கம். இந்தப்படத்தில் தென்னிந்திய மற்றும் பொலிவூட்டிலிருந்து பிரபலங்களை அழைத்து வந்து இந்தப் படத்தில் நடிக்க வைக்க இருக்கிறாராம் லோகேஷ் கனகராஜ்.

பொலிவூட்டிலிருந்து சஞ்சய் தத், மலையாளத்திலிருந்து பிரித்விராஜ் ஆகியோர் இந்த படத்தில் நடிக்கவுள்ளனர் என்று கூறப்படுகிறது. அந்த வகையில் மொத்தம் இந்தப் படத்தில் ஆறு வில்லன்கள் என்றும் அதில் ஒருவராக நடிகர் அர்ஜூன் நடிக்கவிருக்கிறார் என்றும் ஒரு தகவல் வெளியாகி உள்ளது.

# தலைப்பு யாருக்கு?

எழுத்தாளர் வேல ராமமூர்த்தியின் 'குற்றப் பரம்பரை' நாவலை ஹொட் ஸ்ரார் தயாரிக்க, சசிக்குமார் இயக்குகிறார். இதேநேரம் ஜீ-5 ஒடிடி தளமும் ஹகுற்றப் பரம்பரை' கதையைக் கையிலெடுத்திருக்கிறது.

பாரதிராஜா மகன் மனோஜ் இயக்க, 'மாநாடு' தயாரிப்பாளர் சுரேஷ் காமாட்சி முதல் பிரதி அடிப்படையில் தயாரிக்கிறார். 'குற்றப் பரம்பரை' என்ற தலைப்பை இரு தரப்பும் கோரிவரும் நிலையில், யாருக்குக் கிடைக்குமோ எனத் தெரியவில்லை. ஏற்கெனவே இதே விவகாரத்துக்காக இயக்குநர் பாலாவுடன் மல்லுக்கட்டிய பாரதிராஜா, இப்போது சசிகுமாருடன் மோதுகிறார். முதல்கட்டமாக சசிக்குமார் தலைப்பை விட்டுக்கொடுக்க முன்வந்துள்ளாராம்.



# ராமின் நம்பிக்கை

லிங்குசாமி இயக்கத்தில் மிகுந்த எதிர்பார்ப்புடன் வந்த 'தி வாரியர்' படம் தமிழ், தெலுங்கு என இரு மொழிகளிலும் வரவேற்பைப் பெறவில்லை. ஆனாலும், படத்தின் நாயகன் ராம், லிங்குசாமி மீது மாறாத பாசத்தில் இருக்கிறாராம்.

"நல்லபடிதான் திட்டமிட்டோம். ஆனாலும் சறுக்கிவிட்டது. இப்போதும் உங்கள் இயக்கத்தில் நடிக்க நான் தயாராக இருக்கிறேன் அடுத்த கதையை தயார்படுத்தச் சொல்லியிருக்கிறார் ராம்.

இதனிடையே நடிகர் விஷாலும் லிங்குசாமிக்கு திகதி கொடுக்க முன்வந்திருக்கிறார். புது விவாதக் குழுவுடன் சீக்கிரமே அடுத்த கதையைக் கையில் எடுக்கிறார் லிங்குசாமி.

# 19இல் மேதகு- 2

விடுதலை புலிகள் அமைப்பின் தலைவர் பிரபாகரன் வாழ்க்கையை மையப்படுத்தி உருவான மேதகு படம் ஓ. டி. டியில் வெளியானது. இதன் இரண்டாம் பாகம் வரும் 19ஆம் திகதி ஓ. டி. டி. தளத்தில் வெளியாகிறது.

முதல் பாகத்தில் தலைவர் பிரபாகரனின் 21 வயது வரையிலான வாழ்க்கை மட்டுமே சொல்லப்பட்டிருந்தது. இரண்டாம் பாகத்தில் அடுத்த 12 வருட காலகட்டத்தில் என்ன நடந்தது என்பது காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. தலைவர் பிரபாகரன் கதாபாத்திரத்தில் கவுரி சங்கர் நடித்துள்ளார். கௌரவ தோற்றத்தில் நாசர் நடித்துள்ளார். இரா. கோ யோகேந்திரன் இயக்கியுள்ளார். பிரவீன் குமார் இசை அமைத்துள்ளார், வினோத் ராஜேந்திரன் ஒளிப்பதிவு செய்துள்ளார்.

# ரஜினியின் நாயகி

நெல்சன் இயக்கத்தில் ரஜினி நடிக்கும் ஜெயிலர் படத்தின் படப்பிடிப்பு தொடங்கியுள்ளது. நாளை திங்கட்கிழமை முதல் ரஜினிகாந்த் கலந்து கொள்ளப் போகிறார். ரஜினியுடன், ரம்யா கிருஷ்ணன், பிரியங்கா மோகன், சிவராஜ்குமார் என பலர் நடிப்பதாக கூறப்பட்டு வரும் நிலையில் தற்போது ரஜினிக்கு ஜோடியாக தமன்னா நடிக்கிறார் என்று புதிய தகவல் ஒன்று வெளியாகி இருக்கிறது.

ஏற்கனவே ரஜினியுடன் எந்திரன் படத்தில் நடித்த ஐஸ்வர்யா ராய்தான் இந்த படத்திலும் ஜோடியாக நடிக்கிறார் என்று கூறப்பட்ட நிலையில், இப்போது திடீரென்று தமன்னா பெயர் அடிபடுகிறது.



# யசோதா வெளியீடு எப்போது?

ஹரி - ஹரீஸ் இயக்கத்தில் சமந்தா முதன்மை வேடத்தில் நடித்துள்ள படம் "யசோதா". இவருடன் வரலட்சுமி, உன்னி முகுந்தன் ஆகியோரும் நடித்துள்ளனர்.

உண்மை சம்பவத்தை அடிப்படையாக வைத்து குற்றம் - திரில்லர் படமாக உருவாகி உள்ளது. கடந்த 12ஆம் திகதி இந்தப் படம் வெளியாகும் என்று கூறப்பட்டது.

ஆனால், பட பணிகள் நிறைவடையாததால் இப்போது அடுத்த மாதம் செப்ரெம்பர், இரண்டாவது வாரத்தில் ரிலீஸ் செய்ய திட்டமிட்டுள்ளனர். இதுபற்றிய அறிவிப்பு விரைவில் வெளியாகும் என தெரிகிறது.









**திரைப்படம் - விருமன்**
**இயக்கம் - முத்தையா**
**இசை - யுவன்ஷங்கர் ராஜா**
**நடிப்பு - கார்த்தி, அதிதி ஷங்கர், பிரகாஷ்ராஜ், சூரி**

இந்த அவசர யுகத்தில் உடன் பிறந்தவர்கள், உறவினர்கள் அனைவரையும் திருமணம் போன்ற விழாக்களில் மட்டுமே கொஞ்ச நேரமாவது பார்த்துப் பேச முடிகிறது. பலருக்கும் தனித்து வாழ்வதுதான் பிடித்திருக்கிறது. உறவுகளால் நாம் எவ்வளவு உன்னதமாக இருப்போம் என்பதை இந்தப் படம் உரக்கவே சொல்கிறது. இயக்குநர் முத்தையா தனது முந்தைய படங்களில் ஒரு குறிப்பிட்ட சாதியை மட்டும் தூக்கிப் பிடிக்கும் கதைகளைத்தான் கொடுத்திருந்தார். இந்தப் படத்தில் அதைக் கொஞ்சம் கைவிட்டிருப்பது ஆச்சரியம்தான்.

தன் அம்மா சரண்யாவின் மரணத்துக்குக் காரணமான அப்பா பிரகாஷ்ராஜ்மீது கொலை வெறி கோபம் கொண்டிருப்பவர் கார்த்தி. தன் அம்மாவின் இறுதிச் சடங்குக்குக்கூட வராத அப்பா பிரகாஷ்ராஜையும் அண்ணன்கள் மூன்று பேரையும் தனது அம்மா மறைந்த வீட்டுக்கு வரவழைப்பேன் என்ற சபதத்தில் இருக்கிறார். பணத்தைப் பெரிதென நினைக்கும் பிரகாஷ்ராஜ், அப்பா பெயரைத் தட்டாத மூன்று மகன்கள் கார்த்தியின் பாசத்தைப் புரிந்து கொள்கிறார்களா, கார்த்தி தன் சபதத்தை நிறைவேற்றினாரா இல்லையா என்பதுதான் படத்தின் மீதிக் கதை.

அப்பா என்பது நம்பிக்கை என்று சொல்லியிருக்கும் படம். தமிழ் சினிமாவில் இதுவரையிலும் ஒரு மோசமான அப்பாவை இப்படி காட்டியிருப்பார்களா என்பது சந்தேகம் தான். அதேசமயம் ஒரு மகனை எப்படி வளர்க்க வேண்டும் என படத்தின் உச்சக்கட்ட காட்சியில் ஒரு வசனத்தை வைத்து ஒரு சிறந்த அம்மாவின் பாசம் எப்படியிருக்கும் என்பதையும் காட்டியிருக்கிறார்கள்.

தனது முதல் படமான "பருத்தி வீரன்" படத்திலேயே கிராமத்து இளைஞன் கதாபாத்திரத்தில் முத்திரை பதித்தவர் கார்த்தி. அதன்பின் முத்தையா இயக்கத்தில் அவர் நடித்த "கொம்பன்" படத்திலும் சிறப்பாக நடித்திருந்தார். அந்த இரண்டு படத்திலும் எப்படி பெயர் வாங்கினாரோ அதே போல இந்த படத்திலும் "விருமன்"ஆக வீறு கொண்டு நிற்கிறார். அப்பாவாகவே இருந்தாலும் தப்பு தப்புதான் என்று சொல்லும் ஒரு கதாபாத்திரம். அதிரடி, காதல், நகைச்சுவை, குடும்ப பாசம் என அனைத்திலும் புகுந்து விளையாடியிருக்கிறார். அதேசமயம் அவ்வப்போது "பருத்தி வீரன், கொம்பன்" கதாபாத்திரங்களும் எட்டிப் பார்த்துவிட்டுப் போகின்றன.

இயக்குநர் சங்கரின் மகள் அதிதி சங்கர் அறிமுகமாகியிருக்கும் படம். முதல் படம் என்று சொல்ல முடியாத நடிப்பு. நடனத்திலும், நடிப்பிலும் நன்றாகப் பயிற்சி பெற்றே களம் இறங்கியிருக்கிறார். அவருக்கான முத்திரை பதிக்கக்கூடிய காட்சிகள் குறைவுதான் என்றாலும் கிடைத்த வாய்ப்பை சரியாகப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்.

கார்த்தியின் அப்பாவாக பிரகாஷ்ராஜ். கிராமத்துப் பெரிய மனிதர் என்று காட்டினால் வழக்கமான கதாபாத்திரம் போல இருக்கும் என ஒரு தாசில்தார் என அடிக்கடி ஜீன்ஸ், சேர்ட்டில் உலவ விட்டிருக்கிறார்கள். ஆணாதிக்க மனோபாவம் கொண்ட, தான் சொல்வதை மட்டுமே மற்றவர்கள் கேட்க வேண்டும் என்று நினைக்கக் கூடிய கதாபாத்திரம். ஆனாலும், ஒரு கொடுமைக்கார அப்பா நம் கண்முன் தெரியாமல் போவது பலவீனமாக உள்ளது.

கார்த்தியின் தாய்மாமனாக ராஜ்கிரண். ஒரு முக்கியமான கதாபாத்திரம் என்றாலும் இவருக்கான காட்சிகள் குறைவுதான். அந்தக் கொஞ்சக் காட்சிகளிலும் தாய்மாமனின் பாசத்தால் கலங்க வைக்கிறார்.

படத்தின் நகைச்சுவைக்கு சூரி. கிராமத்துப் படங்களும், கதாபாத்திரமும் கிடைத்துவிட்டால் மட்டுமே சூரி சுழன்றடிக்கிறார். பிரகாஷ்ராஜின் இரண்டாவது மருமகளாக நடித்திருக்கும் மைனா, பல குசும்புத்தனமான வசனங்களில் சிரிக்க வைக்கிறார். சரண்யா, வடிவுக்கரசி, மனோஜ் பாரதி, வசமித்ரா, ராஜ்குமார், அருந்ததி, இளவரசு என படத்தில் பல கதாபாத்திரங்கள். ஆர். கே. சுரேஷ் கதாபாத்திரம் இரண்டாம் பாதியில் திணிக்கப்பட்டது போல இருக்கிறது.

முத்தையாவின் படத்துக்கு யுவன்ஷங்கர் ராஜா முத்தான மூன்று பாடல்களைக் கொடுத்திருக்கிறார். கிராமத்துப் படங்களுக்கும் தன்னுடைய பின்னணி இசை பொருந்தும் என மீண்டும் நிரூபித்திருக்கிறார். செல்வகுமாரின் ஒளிப்பதிவு, ஜாக்கியின் கலை இயக்கம் படத்தில் குறிப்பிட வேண்டியவை.

இரண்டாம் பாதியில் சில காட்சிகள் நீட்டி முழக்கி சொல்லப்பட்டிருக்கிறது. அப்பா, மகனுக்குமான மோதல் தான் படத்தின் மையக்கரு என்றாலும் அனைத்து ரசிகர்களுக்குமான வணிக படமாகக் கொடுத்திருக்கிறார்கள். அண்ணன், தம்பி, மாமன், மச்சான் என உறவுகளுடன் நெருக்கமாக வாழ்ந்து பாருங்கள் வாழ்க்கை இனிமையாக இருக்கும் என்று சொல்லும் படம்.

# இந்திய அணி

## வரலாற்றில் தடம் பதித்த தருணங்கள்!

சிறீ

இந்திய அணி இன்றைக்கு பல மாபெரும் வெற்றிகளைப் பெற்று ஆதிக்கம் மிக்க ஓர் அணியாகத் தன்னை நிலைநிறுத்தியிருக்கிறது. ஆனால், இதே இந்திய அணி தங்களின் முதல் வெற்றியை பெறுவதற்கு 20 ஆண்டுகளுக்கும் மேலாகக் காத்திருக்க வேண்டியிருந்தது. 1932இல் டெஸ்ட் கிரிக்கெட் ஆடத் தொடங்கிய இந்திய அணிக்கு முதல் வெற்றி 1952இல்தான் சாத்தியப்பட்டது. டொனால்ட் கேர் தலைமையில் இந்தியா வந்திருந்த இங்கிலாந்து அணிக்கு எதிராக விஜய் ஹசாரே தலைமையிலான இந்திய அணி இந்த வெற்றியை பதிவு செய்தது. வினோ மங்கட் சிறப்பாக செயல்பட்டு 12 விக்கெட்களை வீழ்த்தி வெற்றிக்கு அச்சாரமிட்டார்.

கூடுதல் சிறப்பம்சம் என்னவெனில், வரலாற்றுத் தருணங்கள் பலவற்றையும் தன்னுள் பொதிந்து வைத்திருக்கும் சென்னை சேப்பாக்கம் மைதானத்தில்தான் இந்தப் போட்டியும் நடைபெற்றிருந்தது.

இந்தியாவில் கிரிக்கெட் இந்தளவுக்கு வேரூன்ற காரணமாக அமைந்தது 1983 உலகக்கிண்ணம் வெற்றியே. கத்துக்குட்டி என்ற பட்டத்தோடு துச்சமாக மதிப்பிடப்பட்டு இங்கிலாந்துக்குப் பறந்த கபில்தேவ் தலைமையிலான இந்திய அணி ஒரு வரலாற்றையே படைத்துவிட்டு இந்தியா திரும்பியது. லோர்ட்ஸில் இறுதிப் போட்டியில் க்ளைவ் லொயிட் தலைமையிலான மேற்கிந்தியத்தீவுகள் அணியை அசாத்தியமாக வீழ்த்தி இந்திய அணி உலகக்கிண்ணத்தை வென்றது.

அந்தப் போட்டியில் விவியன் ரிச்சர்ட்ஸின் விக்கெட்டை வீழ்த்த கபில்தேவ் பின்னோக்கி ஓடிச் சென்று திறம்பட ஒரு பிடியை எடுத்திருப்பார். கபில்தேவ். அந்தப் பிடியில்தான் இந்தியர்கள் கிரிக்கெட்டைப் பிடித்துக்கொண்டனர்!

2007இல் டிராவிட் தலைமையிலான இந்திய அணி ஒருநாள் போட்டிகளுக்கான உலகக்கிண்ணத்தில் மிக மோசமாக தோற்றிருந்தது. முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு ரசிகர்கர்கள் இந்திய அணியை வெறுக்கத் தொடங்கினர். அணிக்குள்ளும் எக்கச்சக்க முரண்பாடுகள். இந்த சமயத்தில்தான் முதல் இருபது -20 உலகக் கிண்ணத்துக்காக இளம் வீரரான மகேந்திர சிங் டோனி தலைமையிலான இந்திய அணி தென்னாபிரிக்கா புறப்பட்டது.

> இந்திய அணி தோற்றுப் போயிருந்த அந்தச் சமயத்திலும் சிறப்பாக ஆடி வென்ற பாகிஸ்தான் வீரர்களுக்காக சேப்பாக்கத்தில் குழுமியிருந்த ரசிகர்கள் எழுந்து நின்று கைத்தட்டி மரியாதைச் செலுத்தியிருப்பர். கிரிக்கெட்டின் மூலம் விதைக்க நினைக்கும் வெறுப்புணர்வுக் கெல்லாம் கொடுக்கப்பட்ட சாட்டையடியாக இந்தச் சம்பவம் எப்போதும் வரலாற்றில் நிற்கும்.

அவநம்பிக்கைகள் சூழ அந்தத் தொடருக்குச் சென்றிருந்த இந்திய அணி அசாத்தியங்களை நிகழ்த்த தொடங்கியது. யுவராஜ் 6 பந்தில் 6 சிக்ஸர்களைப் பறக்கவிட்டார். கம் பீர், உத்தப்பா, இர்பான், டோனி என ஒட்டுமொத்த அணியுமே மிகச்சிறப் பாக செயல்பட்டது. நடந்ததெல்லாம் நல்லவையாக மட்டுமே இருக்க, இறுதிப்போட்டியில் பாகிஸ்தானை வீழ்த்தி இந்திய அணி இருபது -20 உலகக்கிண்ணத்தைக் கைப்பற்றியது. கிரிக்கெட் ரசிகர்களுக்கும் இந்திய அணியின் மீதான நம்பிக்கை புத்துயிர் பெற்றது.



1983இல் இந்திய அணி உலகக் கிண்ணத்தை வென்று ஏறக்குறைய 28 ஆண்டுகள் கடந்திருந்த சமயத்தில் டோனி தலைமையிலான இந்திய அணி மீண்டும் சாதித்துக் காட்டியது. 2011 உலகக் கிண்ணத் தொடரை சொந்த மண்ணிலேயே வென்று ஒட்டுமொத்த தேசத்தையுமே இந்திய அணி கொண்டாட்டத்தில் ஆழ்த்தியது. இந்த உலகக்கிண்ணத்தின் சுப்பர் ஸ்ராரும் யுவராஜ்தான். ஒரு சகல துறை வீரராக முழுமையாகத் தனது பங்களிப்பை அணிக்குக் கொடுத்திருந்தார்.

1983இல் கபில்தேவ் பிடித்த பிடி யெடுப்பைப் போல 2011இல் டோனி அடித்த வெற்றி அடியும் காலத்துக்கும் அழிக்கவே முடியாத சித்திரமாக இந்தியர்களின் மனதில் பதிவானது.

2013இல் இங்கிலாந்தில் நடைபெற்ற சம்பியன்ஸ் கிண்ணத் தொடரையும் டோனி தலைமையிலான இந்திய அணியே வென்றிருந்தது. உலகக்கிண்ண வெற்றிகளோடு ஒப்பிடுகையில் இது அவ்வளவு பெரிய வெற்றி கிடையாதுதான். ஆனாலும், இந்த வெற்றி இந்திய அணியில் ஏற்படுத்திய தாக்கம் தவிர்க்க முடியா தது. மூத்த வீரர்களை எல்லாம் மெது மெது வாக ஓரங்கட்டிவிட்டு அடுத்தக்கட்ட இந்திய அணியை டோனி உரு வாக்கத் தொடங்கியிருந் தார்.

அந்தச் சமயத்தில்தான் இந்த சம்பியன்ஸ் கிண் ணம் நடந்திருந்தது. இளம் வீரர்களை மட் டுமே முக்கியமான துருப்புச்சீட்டாக வைத்துக் கொண்டு டோனி இந்தத் தொடரை வென்று காட்டியிருந்தார். அடுத்த 7-8 ஆண்டுகளுக்கான இந்திய அணியின் பயணம் இங்கிருந்தே தொடங்கியது.


இந்த 75 ஆண்டு காலத்தில் ஏறக்குறைய மூன்றில் ஒரு பங்கு காலத்தை சச்சின் மட் டுமே கட்டி ஆண்டிருக்கிறார். "சச்சின்... சச்சின்" என்ற அந்த ஆர்ப்பரிப்புதான் இந்திய கிரிக்கெட்டின் மந்திரச் சொல்லா கவே இருந்திருக்கிறது. சுதந்திரமடைந்த 75 ஆண்டுகளில் இந்திய கிரிக்கெட்டில் நிகழ்ந்த மிகப்பெரிய அற்புதம் சச்சின். வாய்ப்பே இல்லை என அண்ணாந்து பார்க்கப்பட்ட பல சாதனைகளையும் சச்சின் உடைத்துக் காட்டினார். ஒருநாள் போட்டியில் முதன்முதலாக அடித்த இரட்டை சதம் ஆகட்டும், அசராமல் ஆடிய 200ஆவது டெஸ்ட் ஆகட்டும் எல்லாமே அதிரடி ஆட்டம்தான்.

சச்சின் இந்திய கிரிக்கெட்டின் சிகரம். இன்னும் 75 ஆண்டுகளானாலும் அவருடைய சாதனைகள் அப்படியேதான் இருக்கும்.

இந்திய இளம் வீரர்கள் மட்டுமே இணைந்து செய்த இன்னொரு வரலாற்று சம்பவம் இது. கொரோனா முதல் அலை ஓய்ந்திருந்த சமயத்தில் இந்திய அணி அவுஸ்திரேலியாவுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டிருந்தது. கோலி உட்பட முக்கியமான வீரர்கள் பலரும் காயம் மற்றும் ஓய்வின் காரணமாக அணியில் இடம்பெறாத சூழலில், டெஸ்ட் தொடரில் இரண்டாம் கட்ட வீரர்களை வைத்துக் கொண்டு ரஹானே தலைமையிலான இந்திய அணி அவுஸ்தி ரேலியாவை அதன் சொந்த மண்ணி லேயே வீழ்த்தி பெரும் அதிர்ச்சியை அளித்தது.

முதுகுவலியோடு அஷ்வினும் தசைப்பிடிப்போடு ஹனும விஹாரியும் சிட்னியில் வெளிக்காட்டிய அந்தப் போராட்ட குணம், அது ஒட்டுமொத்த அணியிடமிருந்தும் வெளிப்பட்டிருந்தது. கோலியாத்தை தாவீது வீழ்த்திய இந்தக் கதைக்கு இந்திய கிரிக்கெட் வரலாற்றில் எப்போதுமே முக்கிய இடமுண்டு.

இந்திய அணியும் வீரர்களும் மட்டுமில்லை ரசிகர்களுமே கூட சில மறக்க முடியாத நெகிழ்ச்சியான சம்பவங்களை மைதானங்களில் நிகழ்த்தியிருக்கின்றனர். 1999இல் வசிம் அக்ரம் தலைமையிலான பாகிஸ்தான் அணி இந்தியாவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டிருந்தது.



சென்னை சேப்பாக்கத்தில் நடைபெற்ற அந்த டெஸ்ட் போட்டியில் இந்திய அணி வெறும் 12 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோற்றிருக்கும். சச்சின் கடைசி வரை போராடி ஒரு சதமடித்து வீழ்ந்திருப்பார்.

இந்திய அணி தோற்றுப் போயிருந்த அந்தச் சமயத்திலும் சிறப்பாக ஆடி வென்ற பாகிஸ்தான் வீரர்களுக்காக சேப்பாக்கத்தில் குழுமியிருந்த ரசிகர்கள் எழுந்து நின்று கைத்தட்டி மரியாதைச் செலுத்தியி ருப்பர். கிரிக்கெட்டின் மூலம் விதைக்க நினைக்கும் வெறுப்புணர்வுக்கெல்லாம் கொடுக்கப்பட்ட சாட்டையடியாக இந்தச் சம்பவம் எப்போதும் வரலாற்றில் நிற்கும்.

ஈழநாடு



# கனடா சொப்கா பீல் குடும்பமன்றம் ஒன்றுகூடல் - 2022

புலம்பெயர் மடல்

குரு அரவிந்தன்









கனடா, பீல் பகுதியில் உள்ள சொப்கா குடும்ப மன்ற ஒன்று கூடல் சென்ற ஞாயிற்றுக் கிழமை 07-08-2022 மிசசாகா கொம்யூனிட்டி சென்ரர் பூங்காவில் இடம் பெற்றது. புலம் பெயர்ந்து வந்த இங்குள்ள இளம் தலைமுறையினரின் வளர்ச்சியில் அதிக அக்கறை கொண்டு இயங்கிவரும் இந்த சொப்கா மன்றம், ஒன்று கூடலின் போது மிசசாகா உணவு வங்கிக்காகவும் உணவுப் பொருட்களைச் சேகரித்தது குறிப்பிடத்தக்கது. அங்கத்தவர்கள் மனமுவர்ந்து உணவுப் பொருட்களை கொண்டு வந்து சேகரித்தனர். உணவு வங்கிக்கு உணவு சேகரித்துக் கொடுக்கும் இந்த வழக்கம் பல வருடங்களாகத் தொடர்ந்தும் சொப்கா மன்றத்தால் நடைமுறைப் படுத்தப்பட்டு வருவது குறிப்பிடத் தக்கது.

இதைவிட சொப்கா மன்றம் பூங்கா துப்பரவாக்கல், இரத்ததானம், முதியோருக்கான வகுப்புகள், மாணவர்களுக்கான சங்கீத, தமிழ் வகுப்புகள், வாராவாரம் முதியோர் ஒன்றுகூடல்கள், முதியோர், இளையோருக்கான பயிற்சிப் பட்டறைகள், முத்தமிழ் விழா, பொங்கல் விழா, முதியோருக்கான ஒய்வூதிய சேவை போன்ற தன்னார்வத் தொண்டு சேவைகளையும் தொடர்ந்து முன்னெடுத்து வருகின்றது. கோவிட் - 19 காலத்தில் முதியோருக்குத் தேவையான தொண்டு சேவையைச் சொப்கா குடும்ப மன்ற இளையோர் செய்து கொடுத்தது பாராட்டுக்குரியது.

இதைவிட சிறுகதைப் பயிற்சிப் பட்டறை மூலம் பயிற்சிபெற்று, மன்ற அங்கத்தவர்களான பெண் எழுத்தாளர்கள் 16 பேர் எழுதிய சிறுகதைகளைத் தொகுத்து 'நீங்காத நினைவுகள்' என்ற பெயரில் கனடா பெண் எழுத்தாளர்களில் முதலாவது சிறுகதைத் தொகுப்பாக வெளிவந்து சாதனை படைத்திருந்தது.

மற்றும் இளையோரால் சமயற்கலை பற்றிய உணவு வகைகளை எப்படிச் சமைப்பது என்பது போன்ற விபரங்கள் அடங்கிய மின்நூல் ஒன்றும் இணையத் தளத்தில் வெளியிடப்பட்டது.

கோவிட் -19 காரணமாக வீட்டுக்குள் அடைந்து கிடந்தவர்களுக்கு இது புத்துணர்வு தரம் ஒரு நிகழ்வாக அமைந்திருந்தது. இந்த ஒன்று கூடலின் போது பங்கு பற்றிய அங்கத்தவர்களுக்குக் காலை உணவும், மதிய உணவும் வழங்கப்பட்டது. சிறுவர், சிறுமிகள் மிகவும் உற்சாகத்தோடு விளையாட்டுப் போட்டிகளில் பங்குபற்றினார்கள். பெரியோருக்கான சொல்தேடல் போட்டியும், இன்னும் பல நிகழ்ச்சிகளும் தொடர்ந்து இடம் பெற்றன.

விளை யாட்டுப் போட்டிகளில் பங்குபற்றி வெற்றி பெற்றவர்களுக்குச் சிறப்பு விருந்தினர்களால் பரிசுகள் வழங்கப் பட்டன. மாலை 5 மணியளவில் இனிதே நிறைவு பெற்ற இந்த ஒன்று கூடல், சிறப்பாக அமைவதற்குச் சொப்கா நிர்வாகசபை அங்கத்தவர்கள் சிறப்பாகச் செயற்பட்டிருந்தனர்.




**உங்கள் கேள்விகளை அனுப்பவேண்டிய முகவரி**

**வியுக்தியார் பதில்கள்**
**ஈழநாடு, 707 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.**
viyukthiyar@gmail.com

**கே. சிவதாஸ், லா சப்பல், பாரிஸ், பிரான்ஸ்**

**கேள்வி:**
கூட்டமைப்பில் சில எம்.பி.க்கள் தனக்கு வாக்களித்தார்கள் என்று ரணில் விக்கிரமசிங்க அடித்துச் சொல்கிறார். ஆனால், நமது எம்.பி.க்களோ தாங்கள் எல்லோரும் ஒற்றுமையாக கட்சியின் முடிவுப்படிதான் டலஸ்க்கு வாக்களித்தோம் என்கிறார்கள். யார் சொல்வதை நம்புவது என்று தெரியவில்லையே?

**வியுக்தியார்:**
கட்சிக்குள் இருக்கும் சிலரே இந்தக் கதையை முதலில் கிளப்பியவர்கள் என்பதை முழு உலகுமறியுமே. தாம் எடுத்த முடிவு தவறாகிப் போய்விட்டதை திசை திருப்ப, அப்படியொரு புரளியை சிலர் கிளப்பிவிட, அதனை தனக்கே உரிய பாணியில் திரும்பிவிட்டிருக்கிறார் ரணில்.

---

**செல்வரத்தினம் ஐங்கரன், களுவாஞ்சிக்குடி, மட்டக்களப்பு.**

**கேள்வி:**
தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கு சாணக்கியன் போன்ற இளைஞர்களுக்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும் என்ற குரல்கள் எழும்பத் தொடங்கியிருக்கின்றனவே. இதுபற்றி நீங்கள் என்ன நினைக்கின்றீர்கள்.

**வியுக்தியார்:**
சில நாட்களுக்கு முன்னர், சாணக்கியனை இந்த நாட்டின் பிரதமராக நியமிக்கவேண்டும் என்றும் சமூக வலைத் தளங்களில் சிலர் பிரச்சாரம் செய்தார்கள். அந்தப் பிரச்சாரத்தின் பின்னணியில் யார் இருந்தார் களோ அவர்கள் தான் இப்போதும் கூட்டமைப்பிற்குள் அவரை முன்னிறுத்தச் சொல்லியும் பிரச்சாரத்தை தொடக்கியிருக்கிறார்கள். ஆசை இருக்கலாம். அதற்காக பேராசைப் பட்டால் அது ஆபத்தில்தான் முடியும் என்பதை அவருக்கு வேண்டியவர்கள் சொல்லி வைக்கவேண்டும்.

---

**பா. கிறோசன், கச்சாய் றோட், கொடிகாமம்.**

**கேள்வி:**
நாடு நாடாக ஓடிக்கொண்டிருக்கிறாரே நமது முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச, இப்படியெல்லாம் தனக்கு நேரும் என்று நினைத்திருப்பாரா? அவரை கைதுசெய்ய நமது புலம்பெயர் தமிழர்கள் முயன்றுகொண்டிருப்பதால்தான் அவர் இவ்வாறு ஓடிக்கொண்டிருக்கிறார் என்கிறார்களே?

**வியுக்தியார்:**
அவரை பதவியிலிருந்து ஓடுங்கள் என்றுதான் நாட்டில் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டனவே தவிர, நாட்டைவிட்டு ஓடுங்கள் என்றல்ல. ஆனால் அவர் ஓடிக்கொண்டிருப்பது, புலம்பெயர் தமிழர்களின் அழுத்தத்தால் அவர் கைதுசெய்யப்படலாம் என்ற பயத்தால் என்று நான் நினைக்கவில்லை. தமிழர்கள் கைதுசெய்து தண்டனை வாங்கிக் கொடுக்க முயல்கிறார்கள் என்று அவர் சிங்களவர்களை நம்ப வைப்பதற்காகவே ஓடிக் கொண்டிருக்கிறார் என்றுதான் நான் நினைக்கின்றேன். அப்படியெனில்தான், இதே சிங்கள மக்கள் அவரை மீண்டும் தேசத்தின் புதல்வனாக திரும்பி வரவேண்டும் என்று, அவர்களாகவே கோரிக்கை வைப்பார்கள் என்று நம்புகின்றார் என்று நினைக்கின்றேன். தமிழர்களால் தம்மவர் ஒருவர் பாதிக்கப்படுவதை அவர்கள் விரும்பப்போவதில்லையே.

---

**ஏ. லோஜிதன், நாவற்குழி தெற்கு, கைதடி**

**கேள்வி:**
தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான க. வி.விக்னேஸ்வரன், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை தனியாக சந்தித்துப் பேசினாராமே. தனியாக பேசினார் என்றால் என்னத்தைப் பேசியிருப்பார் என்று நினைக்கிறீர்கள்?

**வியுக்தியார்:**
நீங்கள் "பொடி" வைத்துக் கேள்வி கேட்பது புரிகின்றது. அவர் தனியாகப் பேசினார் என்பதற்காக அவர் தமிழர்களுக்கு விரோதமான விடயங்களை பேசியிருக்க மாட்டார் என்றே நம்புகின்றேன். அது சரி அவர் தனியே சந்திக்காமல் வேறு என்னதான் செய்வதாம். அவர் ஒருவர் தானே கட்சியிலேயே இருக்கிறார். அப்போ தனியாகத்தானே சந்திக்கவேண்டும்.

---

**எம்.கேதீஸ்வரன், பிரதான வீதி, பூம்புகார், மட்டக்களப்பு**

**கேள்வி:**
சர்வகட்சி அரசாங்கம் தொடர்பாக அரசியல் கட்சிகளுடன் நடாத்திய பேச்சுக்கள் வெற்றியளித்துள்ளதாக ஜனாதிபதி சொல்கிறாரே. அப்படியெனில் விரைவில் சர்வகட்சி அரசாங்கம் அமையப் போகின்றது என்று நம்பலாமா?

**வியுக்தியார்:**
அவர் பேச்சக்கள் வெற்றியளித்துள்ளது என்றுதான் சொல்லியிருக்கிறார். சகல கட்சிகளும் அரசில் சேரும் முடிவெடுத்திருந்தால் மனுசன் என்ன பாடுபட்டிருக்க வேண்டி வந்திருக்கும்? எல்லோரும் ஒவ்வொரு அமைச்சைக் கேட்டு பிச்செடுத்திருப்பார்கள். இப்போது எல்லோருமே சர்வகட்சி அரசை வரவேற்றிருக்கிறார்கள். ஆனால் யாரும் சேருவதாகவும் சொல்லவில்லை. அப்படியெனில் அவருக்கு வெற்றி தானே.



# ஞானம்

குணவர்தனா, தபாலில் வந்த கடிதத்தை படித்துவிட்டு, வீட்டின் விட்டத்தைப் பார்த்துக்கொண்டிருந்தான்.

கொவிட் பெருந்தொற்று தொடங்கிய காலத்திலிருந்து அவனும் வீட்டிலிருந்தே வேலை செய்கிறான். மனைவி நிலாந்தி பாடசாலைக்குச் சென்ற மகனை அழைத்துவரச்சென்று திரும்பும்போது, வீட்டு தபால் பெட்டியிலிருந்து எடுத்து வந்த கடிதத்தை அறையை தட்டி தந்துவிட்டு, மகனை குளியலறைக்கு கூட்டிச்சென்றாள்.

“ குணே” உங்கட உபாலியிடமிருந்து கடிதம். திரும்பவும் பணம் கேட்டு எழுதியிருக்கலாம் “ என்று முகத்தை இறுக்கமாக வைத்துக்கொண்டு சொல்லியவாறுதான் அகன்றாள் நிலாந்தி.

குணவர்தனாவின் நெருங்கிய நண்பன்தான் உபாலி. அம்பாந்தோட்டையில் ஒரே கிராமத்தில், பிறந்த வளர்ந்து படித்தவர்கள். வீட்டுக்கஷ்டத்தால், கிராமத்து விகாரையிலிருந்த தர்மரத்ன சாதுவின் தூண்டுதலால் தேசத்தை விடுதலை இயக்கத்திடமிருந்து காக்க இராணுவத்தில் சேர்ந்து, இறுதிப் போரில் வலது காலை இழந்து முடமாகத் திரும்பியவன்.

குணவர்தனாவின் குடும்பப் பின்னணி செழிப்பாக இருந்தமையால் படித்து பட்டதாரியாக முடிந்தது, அவுஸ்திரேலியாவில் தொழில்வாய்ப்பும் பெற்று வரக்கூடியதாக இருந்தது.

இறுதிப்போர்க் காலத்தில் உபாலியைப்பற்றியே மனைவியிடம் அடிக்கடி சொல்லிக்கொண்டிருந்த குணவர்தனாவுக்கு ஒருநாள் வந்த கடிதம் அனைத்தையும் சொல்லிவிட்டது.

பாடசாலையில் உதைபந்தாட்டத்தில் துரிதமாகவும் சாமர்த்தியமாகவும் தனது இரண்டு கால்களினாலும் பந்தை நகர்த்தி கோல் போட்டவன் உபாலி. அவனது விளையாட்டுத்துறை சான்றிதழ்களே இராணுவத்தில் இணைவதற்கு அன்று முக்கிய தகுதியாகவும் இருந்தது.

இறுதிப்போர் வெற்றியின் மமதையில் அதிகாரத்திலிருந்தவர்கள் பாற்சோறும் கேக்கும் சாப்பிட்டுக்கொண்டிருந்தபோது உபாலியின் வலது கால் இராணுவ மருத்துவமனையில் சத்திர சிகிச்சையில் அகற்றப்பட்டது.

குணவர்தனா, அடிக்கடி உபாலிக்கு பணவுதவி செய்தமையால், அன்று வந்த கடிதத்தையும் திறந்து பார்க்காமலேயே, முகத்தை நீட்டியவாறு கணவனிடம் கொடுத்துவிட்டு பிள்ளையின் தேவைகளை கவனிக்கத் தொடங்கினாள் நிலாந்தி.

வழக்கத்தை விட சிறிய கடிதம். உபாலி அந்தக்கடிதத்தை காலிமுகத்திடலிலிருந்து எழுதியிருக்கிறான். அதனை அவன் எழுதும்போது போராட்டம் தொடங்கி தொண்ணூற்றியைந்து நாட்களாகியிருந்தது.

கொழும்பு கோட்டை பொலிஸார், காலிமுகத்திடல் போராட்டக்காரர்கள் கூடாரங்களை அகற்றிக்கொண்டு சென்றுவிட வேண்டும் என்று ஒலிபெருக்கி மூலம் உத்தரவு பிறப்பித்துக்கொண்டிருந்த காட்சியின் காணொளியை குணவர்தனா தனது கணினியில் தரவிறக்கம் செய்து பார்த்துக்கொண்டிருந்த இரவுக்கு மறுநாள்தான் அக்கடிதம் வந்து சேர்ந்திருந்தது.

அக்கடிதம் மூலம்தான் உபாலியும் அந்தப் போராட்டத்தில் கலந்துகொண்டவன் என்பதை குணவர்தனா தெரிந்துகொண்டான்.

“ நிலாந்தி, மகனுக்கு சாப்பாட்டை கொடுத்துவிட்டு வாரும். நீர் நினைக்கிறவாறு உபாலி செலவுக்கு பணம் கேட்டு கடிதம் எழுதவில்லை. வாரும். வந்து கடிதத்தை பாரும். “ குணவர்தனா அறையிலிருந்து உரத்துக்குரல் கொடுத்தான்.

உணவருந்தும் மேசையில் குழந்தைகள் நிகழ்ச்சி பதிவான ஐபேர்டை இயக்கியவாறு, மகனது உணவுத்தட்டத்தில் நூடில்ஸூம் சிக்கன் நக்கட்ஸூம் தக்காளி ஸோஸூம் கலந்து வைத்துவிட்டு கணவன் குணவர்தனாவின் அறைக்கு வந்து உபாலியின் கடிதத்தை வாங்கிப்படித்தாள் நிலாந்தி.

“ அன்புள்ள குணே” நீயும் நிலாந்தியும் செல்ல மகனும் நலம்தானே..? இறுதியாக நான்கு மாதங்களுக்கு முன்னர் உனக்கு நான் எழுதிய கடிதத்திற்கு பதில் வந்ததாகத் தெரியவில்லை. கடந்த எழுபது நாட்களாக நானும் காலிமுகத்திடலில்தான் இருக்கின்றேன்.

எங்கள் நேசத்திற்குரிய எந்தத்தாயகத்தை தமிழ் பயங்கரவாதிகள் என வர்ணிக்கப்பட்ட விடுதலை இயக்கத்தின் அச்சுறுத்தலிலிருந்து மீட்க கடுமையாக போரிட்டோமோ, தற்போது அதே தாயகத்தை சுரண்டிக்கொழுத்து மக்களை பட்டினிச்சாவை நோக்கித்தள்ளிக் கொண்டிருக்கும் அதிகார வார்க்கத்தை எதிர்த்து போராடிக்கொண்டிருக்கின்றோம்.

அன்று 2009 ஆம் ஆண்டு மே மாதம் வரையில் நானும் எங்கள் படையிலிருந்தவர்களும் ஆயுதங்களுடன்தான் அவர்களை போராடி வென்றோம். ஆனால், இன்று கையில் ஆயுதம் ஏதும் இன்றி, எனது உன்றுகோலுடன் நின்றவாறே குரல் எழுப்பி போராடிக்கொண்டிருக்கின்றேன்.

அன்று போர்க்களத்தில் நின்ற அந்த கேர்ணல், பாதியில் விட்டுச்சென்று, மீண்டும் திரும்பி வந்து பாதுகாப்பு செயலாளராக உத்தரவுகள் பிறப்பித்தவர், மீண்டும் திரும்பிச்சென்று, அதிபராவதற்காகவே மீண்டும் வந்தார். பதின்மூன்று வருடங்களுக்கு முன்னர் எமது படையினர் உயிரையும் உடல் உறுப்புகளையும் தியாகம் செய்து மீட்டுக்கொடுத்த தேசத்தை முறையற்ற நிருவாகத்தினால் சீர்கெடச்செய்த அவரை மீண்டும் திருப்பி அனுப்பிவிட்டோம்.

எங்கள் கிராமத்து பன்சலையிலிருந்த தர்மரத்தின சாது, என்னையும் வேறு சில இளைஞர்களையும் இராணுவத்தில் சேருமாறு வழியனுப்பியபோது சொன்னதையும் நான் மறக்கவில்லை.

அவரும் காலிமுகத்திடல் போராட்டத்தில் எம்முடன் இணைந்திருந்தார். இந்தக் கடிதத்தை இங்கு அமைக்கப்பட்டுள்ள நூல்நிலைய கூடாரத்திலிருந்துதான் எழுதுகின்றேன்.

முள்ளிவாய்க்காலில் அன்று இறுதிப் போரின்போது நான் கண்ட காட்சிகளையும் மறக்க முடியவில்லை. தற்போது இங்கே நான் காணும் காட்சிகளையும் இனிவரும் காலத்தில் மறக்கமுடியாது நண்பனே.

நாம் வென்றெடுத்துவிட்டோம் என்று வீர முழக்கம் செய்த அந்த முள்ளிவாய்க்காலில் எம்மால் கொல்லப்பட்டவர்களை நினைவுபடுத்தி இங்கே விளக்கேற்றி, கஞ்சியும் கொடுத்தோம்.

நாம் பாடசாலையில் படித்துக்கொண்டிருந்த காலத்தில் யாழ்ப்பாணத்தில் எரிக்கப்பட்ட பொது நூலகத்தையும் நினைத்து கூட்டம் வைத்து பேசினோம். 1983 கறுப்பு ஜூலையையும் நினைவுகூர்ந்தோம்.

வடக்கு மக்களுக்கு எத்தனை தடைகளை எங்கள் அரசுகள் அன்று விதித்தன. இன்று அதே தடைகள் எமக்கும் வந்து வயிற்றில் அடிவிழுந்தமையால் வீதிக்கு வந்திருக்கின்றோம்.

போரில் நான் எனது காலையும் இழந்து, அதனால் எனது காதலையும் இழந்து, துணை ஏதும் இன்றி தற்போது மக்களோடு மக்களாக இந்தக் களத்தில் நின்றுகொண்டு இதனை எழுதுகின்றேன்.

சில தொலைக்காட்சி ஊடகவியலாளர்கள் என்னையும் படம் எடுத்து பேட்டி கண்டார்கள். அவற்றையெல்லாம் உன்னால் பார்க்கமுடிந்ததோ தெரியாது.

ஆளும் அதிகார வர்க்கம் ஆட்களைத்தான் மாற்றியிருக்கிறது. தலையணை உறைதான் மாறியிருக்கிறது. தலையணை மாற வேண்டும். அதுவரையில் நாம் போராடத்தானே வேண்டும்.

இக்கடிதம் உனக்கு கிடைக்கும்போது இங்கே காட்சிகள் மாறலாம். இறுதியாக ஒரு விடயத்தை உனக்கு சொல்லிக்கொண்டு இக்கடிதத்தை முடிக்கின்றேன்.

“ ஞானம் என்பது பிறர் மூலம் நமக்கு ஏற்படும் அனுபவம். மெய்ஞானம் என்பது நம்மாலேயே நமக்கே கிடைக்கும் அனுபவம். ”

எங்கள் ஊர் தர்மரத்தின தேரோ இங்கிருந்து புறப்படும்போது என்னிடம் வந்து சொன்ன வார்த்தைகள்தான் இவை. அவருக்கும் பல உடல் உபாதைகள் புறப்பட்டு விட்டார்.

நான் இங்கே ஊன்றுகோலுடன் காட்சிகளை பார்த்துக்கொண்டிருக்கின்றேன். காட்சிகள் மாறும். நேரம்கிடைக்கும்போது பதில் எழுது.

என்றும் உனது நண்பன் உபாலி.



# மால்டோவா - உக்ரேனுக்கும் நடுவில், வல்லரசுகளின் போர்சூழ் பகைமையில், சிக்கித் தவிக்கும் "திரான்ஸ்னிஸ்ட்ரியா"

ஐங்கரன் விக்கினேஸ்வரா

பலரும் அறியாத, ஐ. நாவால் அங்கீகரிக்கப்படாத பிரதேசமான திரான்ஸ் னிஸ்ட்ரியா - "Transnistria" கிழக்கு ஐரோப்பாவின் இன்னோர் உலைக்களமாக மாறும் அபாயமும் உள்ளது. உக்ரேனியப் போரின் எதிர் விளைவுகள் இங்கேயும் பிரதிபலிக்கும் சாத்தியங்கள் உள்ளன.

**திரான்ஸ்னிஸ்ட்ரியா:**

மால்டோவா நாட்டின் கிழக்கு பகுதியில் நீண்டகால இனச் சிக்கலும், தொடர்ந்த மனித உரிமை மீறல்களினாலும் 1992ஆம் ஆண்டில், ரஷ்ய மொழி பேசும் மக்கள் மால்டோவாவிலிருந்து பிரிந்து, திரான்ஸ்னிஸ்ட் ரியா - என்ற ஒரு பிராந்தியத்தை உருவாக்கினர். 1990 முன்னரே மக்கள் தொகையின் பெரும் பகுதியினர் ரோமானிய மால்டோவிய மொழி பேசாததால் புதிய மொழிச் சட்டங்கள் குறிப்பாக கொந்தளிப்பான சிக்கலை உருவாக்கின.

இதையடுத்து அதிகாரப்பூர்வ மொழியின் பிரச்சனை காரணமாக செப்டம்பர் 2, 1990 இல், ரஷ்ய மொழி பேசும் மக்களை பாதுகாக்கும் வண்ணம் திரான்ஸ்னிஸ்ட்ரியா என்ற தன்னாட்சி பிராந்திய அரசு உருவாக்க அறிவிக்கப்பட்டது.

திரான்ஸ்னிஸ்ட்ரியா அல்லது திரான்ஸ்-டினீஸ்டர் என்பது டினீஸ்டர் ஆற்றின் கிழக்குக் கரைக்கும் உக்ரைனுடனான மால்டோவாவின் எல்லைக்கும் இடையே உள்ள ஒரு குறுகிய நிலப்பரப்பாகும், இதில் சுமார் 500,000 ரஷ்யர்கள் மற்றும் உக்ரேனியர்கள் வசிக்கின்றனர்.



திரான்ஸ் னிஸ்ட்ரியா 1992 ஆம் ஆண்டு முதல் ரஷ்யாவின் ஆதரவு பெற்ற அதிகாரிகளால் நிர்வகிக்கப்படுகிறது, சோவியத் ஒன்றியத்தின் வீழ்ச்சிக்குப் பிறகு, புதிதாக சுதந்திரம் பெற்ற மால்டோவா குடியரசு மற் றும் சோவியத் உறவுகளை பராமரிக்க விரும்பும் மக்களிடையே மோதல் ஏற்பட்டது.

திரான்ஸ்னிஸ்ட்ரியாவில் நிலையான பாதுகாப்பு இல்லாமையால் 1500 ரஷ்ய அமைதி காக்கும் துருப்புக்கள் நிலையெடுத்துள்ளனர். மால்டோவா கிழக்கு ஐரோப்பாவின் உக்ரேனியாவிற்கும் ருமேனியாவிற்கும் நடுவில் உள்ள தேசம். இம் மக்களில் பெரும்பான்மையானவர்கள் ருமேனிய இனக் குழுக்களை சேர்ந்தவர்களாவர். மால்டோவாவில் உக்ரேனிய மற்றும் ரஷ்ய வம்சாவளியைச் சேர்ந்த மக்களும் நீண்ட காலமாக வாழ்ந்து வருகின்றனர்.

ரஷ்ய ஆதரவு கண்காணிப்பாளர்களால் வெளியிடப்பட்ட அறிக்கைகளின் படி திரான்ஸ்னிஸ்ட் ரியாவில் ரஷ்யா பேசும் மக் கள் மால்டோவன் அதிகாரிகளின் அடக்குமுறையை எதிர்கொள்கின்றனர்.

**திரான்ஸ்னிஸ்ட்ரியாவின் இருப்பிடம்:**

மால்டோவாவின் மற்ற பகுதிகளுடன் தொடர்புடைய திரான்ஸ்னிஸ்ட்ரியன் பிரதேசம், உக்ரைனின் எல் லையில் நிலத்தால் சூழப்பட்டுள்ளது. அனைத்து ஐநா உறுப்பு நாடுகளும் திரான்ஸ்னிஸ்ட்ரியாவை மால்டோவா குடியரசின் சட்டப் பூர்வ பகுதியாகவே இன்றும் கருதுகின்றன. ஐக்கிய நாடுகள் சபையால் இன்னமும் அங்கீகரிக்கப்படாத பிராந்தியமாகவே உள்ளது.

ஜோர்ஜியாவில் இருந்து பிரிந்துள்ள தெற்கு ஒசேத்தியா, அப்காசியா ஆகிய அங்கீகரிக்கப்படாத மாநிலங்கள் மட்டுமே திரான்ஸ்னிஸ்ட்ரியாவை ஒரு இறையாண்மை பிராந்தியமாக அங்கீகரித்து உள்ளன.

1992 இல் மால் டோவாவிலிருந்து பிரிந்த இப்பிரதேசத்தில், டிராஸ்போல் அதன் அறிவிக்கப்பட்ட தலை நகராக உள்ளது. 2009 ஆம் ஆண்டு நிலவரப்படி, திரான்ஸ் னிஸ்ட்ரியாவின் மக்கள் தொகை சுமார் 555,000 மக்களைக் கொண்டுள் ளது.

**நேட்டோவின் பின்தளமாக மால்டோவா:**

உக்ரேனிய போரின் பின்னர் நேட்டோ இப்போது மால்டோவாவையும் ரஷ்யாவிற்கு எதிராக ஆயுதங்களை உயர்த்துமாறு கேட்டுக் கொள்கிறது என ரஷ்யத் தரப்பு ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

நேட்டோ மத்திய கிழக்கிலும், கிழக்கு ஐரோப்பாவிலும் அமைதி மற்றும் ஸ்திரத் தன்மையைக் காண விரும்பவில்லை என்றும், முதலில் அவர்கள் உக்ரைனை ரஷ்யாவுடன் போருக்குத் தூண்டினர், இப்போது அவர்கள் மால்டோவாவைத் தூண்டுகிறார்கள் என ரஷ்யத் தரப்பு ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

**மால்டோவா நடுநிலமை:**

ஆனால் மால் டோவா உக்ரைனில் நடக்கும் ரஷ்யாவின் போரில் இருந்து விலகி இருக்க ஒரு தெளிவான விருப்பத்தை காட்டியுள்ளது. மால்டோவா ஜனாதிபதி ஐரோப்பிய ஒன்றியத்திற்கு ஆதரவானவர். ஆனால் நடந்து கொண்டிருக்கும் போரில் நடு நிலைமையை கடைப் பிடிப்பதை ஆணித்தரமாக வெளிப்படுத்தியுள்ளார்.

அத்துடன் ரஷ்ய சார்பு அரசால் நிர்வகிக்கப்படும் பிரதேசமான திரான்ஸ் னிஸ்ட்ரியாவில் சமீபத்திய குண்டு வெடிப்புகளை ரஷ்யா கண்டித்துள்ளது. இந்த மர்மமான தாக்குதல் களுக்கு திரான்ஸ் னிஸ்ட் ரியன் அதிகாரிகள் உக்ரை னைக் குற்றம் சாட்டியுள்ளனர்.

ரஷ்யாவை போருக்கு இழுக்கும் முயற்சி என்று அழைத்தாலும், இக்குண்டு வெடிப்புகளுக்கு மால்டோவா அரசு யாரையும் குற்றம் கூறவில்லை. எவ்வாறாயினும், மால் டோவாவில் ரஷ்ய எதிர்ப்பு உணர்வை எப்படியா வது தூண்டுவதற்கு உக்ரைனும் மேற்கு நாடுகளும் இத்தகைய குண்டு வெடிப்புகளைப் பயன்படுத்துகின்றன என ரஷ்ய ஊட கங்கள் ஊகங்களை தெரிவிக்கின்றன.

**திரான்ஸ்னிஸ்ட்ரியா உருவாக்கம்:**

1990 முதல் 1992 வரை திரான்ஸ்னிஸ்ட்ரியா மக்களுடன் ஒரு குறுகிய போரில் ஈடுபட்ட மோல்டோவா அரசு, பிரிவினைவாத இயக்கத்தை அடக்கி, திரான்ஸ் னிஸ்ட்ரியா மாநிலத்தை தங்கள் கட்டுப் பாட்டில் மீண்டும் ஒருங்கிணைக்க முயன்றனர்.

**மொழிப் போர் :**

31 ஆகஸ்ட் 1989 அன்று, மால்டேவிய அரசு புதிய சட் டங்களை இயற்றியது. அவற் றில் ஒன்று சோவியத் யூனியனின் அதிகாரப்பூர்வ மொழியான ரஷ்ய மொழிக்குப் பதிலாக மால்டோவனை அதிகாரப்பூர்வ மொழியாக மாற்றியது.




இது ஒரு மொழியியல் மால்டோ-ருமேனிய அடையாளத்தையும் குறிப்பிடுவதாக உணர்த்தப்பட்டது, இரண்டாவது சட்டம் லத்தீன் ருமேனிய எழுத்துக்களுக்குத் திரும்புவதை உறுதி செய்தது.

மால்டோவன் அல்லாத மக்கள் தொகையின் பெரும் பகுதியினர் ரோமானிய மால்டோவிய மொழி பேசாததால் புதிய மொழிச் சட்டங்கள் குறிப்பாக கொந்தளிப்பான சிக்கலை திரான்ஸ் னிஸ்ட்ரியாவில் உருவாக்கின.

இதையடுத்து அதிகாரப்பூர்வ மொழியின் பிரச்சனை காரணமாக செப்டம்பர் 2, 1990 இல், ரஷ்ய மொழி பேசும் மக்களை பாதுகாக்கும் வண் ணம் திரான்ஸ்னிஸ்ட்ரியா உருவாக்கப்பட்டது. இதனை டிசம்பர் 22, 1990 அன்று அன்றைய சோவியத் அதிமர கோர்பச்சேவ் உத்தியோகபூர்வமாக பிரகடனப்படுத்தினார். இதனையடுத்து மால்டோ வன் அதிகாரிகள் இந்த அறிவிப்புக்கு எதிராக திவிர நடவடிக்கை எடுத்தனர்.

**சோவியத் வீழ்ச்சி:**

1991 ஆம் ஆண்டு சோவியத் ஆட்சி வீழ்ச்சியின் பின்னர் மால்டோவா நாடாளுமன்றம் திரான்ஸ்னிஸ்ட்ரியா சுதந்திரப் பிரகடனத்தை நிராகரித்தது. மால் டோவா அரசு தன் இறையாண்மையை உறுதிப்படுத்த உடனடியாக நடவடிக்கை எடுத்தது. அக காலத்தில் மால்டோவா குடியர சிற்கு அதன் சொந்த இராணுவம் இருக்கவில்லை.

நீண்ட மோதலின் பின்னர் 1992 ஆம் ஆண்டின் முற்பகுதியில் சமரசம் காண தீர்வு ஒன்றை உருவாக்கு வதற்கான முதல் முயற் சிகள் நடந்தன. புதிதாக சுதந்திரம் கோரிய திரான்ஸ்னிஸ்ட்ரியாவின் தலைவர் இகோர் ஸ்மிர்னோவ் மற்றும் மூன்று பிரதிநிதிகள் உக்ரைனின் தலைநகரான கீவ்வில் வந்து, உக்ரேனிய தலைவர் லியோ னிட் சந்தித்தனர்.

ஆனால் இவர்கள் மால்டோவாவின் காவல்துறையினரால் கைது செய்யப்பட்டு உடனடியாக மால்டோவாவில் உள்ள சிறைக்கு கொண்டு செல்லப்பட்டனர். இதற்கு எதிர்ப் புத் தெரிவிக்கும் வகையில், பெரும் போராட் டங்களை மக்கள் தொடுத்தனர்,

**2006 சுதந்திர வாக்கெடுப்பு :**

நீண்டகால இனச் சிக்கலும், தொடர்ந்த மனித உரிமை மீறல்களின் பின்னர் 2006 இல் திரான்ஸ்னிஸ்ட்ரியன் சுதந்திர வாக்கெடுப்பு நடந்தது.

செப்டம்பர் 17, 2006 அன்று, திரான்ஸ்னிஸ்ட்ரியாவில் வாக்கெடுப்பு நடத்தப்பட்டது, சுதந்திர நாடாவதா அல்லது மால்டோவாவின் ஒரு பகுதியாக மாறுவதா அல்லது எதிர்காலத்தில் ரஷ்ய கூட்டமைப்பின் ஒரு பகுதியாக மாறுவதா ஆகியவற்றுக்கு இடையே வாக்காளர்கள் தங்கள் விருப்பை தேர்வு செய்தனர்.

இந்த வாக்கெடுப்பு முடிவுகளின் படி திரான்ஸ்னிஸ்ட்ரியா மக்கள் 98.07 முதல் 96.61 சதவிகிதம் வரை ரஷ்யவுடன் ஒருங்கிணைப்புக்கு ஆதரவாக வாக்களித்து இருந்தனர். ஆயினும் திரான்ஸ்னிஸ்ட்ரியா மக்களின் வாக்கேடுப்பை ஐரோப்பிய ஒன்றியம், மற்றும் ருமேனியா, பல்கேரியா மற்றும் துருக்கி உள்ளிட்ட பல நாடுகள் இந்த வாக்கெடுப்பின் முடிவுகளை அங்கீகரிக்கவில்லை.

திரான்ஸ்னிஸ்ட்ரியாவில் மற்றோர் வாக்கெடுப்பு ஜீன்2010 இல் நடாத்தப்பட்டது. சட்டம் மற்றும் ஜனநாயகத் தரங்களை மீறாமல் நடத்தப்பட்டது என்றும் திரான்ஸ்னிஸ்ட்ரியன் பிராந்திய மறுசீரமைப்பு தொடங்கும் தளமாக இத் தேர்தல் அமைந்ததாக அறியப்படுகிறது.

ஜூன் 2010 தேர்தல் கணக்கெடுப்புகளின் படி திரான்ஸ்னிஸ்ட்ரியாவின் மக்கள்தொகையில் 46வீத வீத மக்கள் ரஷ்ய கூட்டமைப்புடன் இணைந்து இருக்க விரும்புவதாகவும் சுட்டிக்காட்டியுள்ளனர். அதே வேளை 13 வீத மக்கள் பிராந்திய சுயாட்சியின் நிலையில் அப்பகுதியை மால்டோவாவுடன் மீண்டும் ஒருங்கிணைக்க விரும்புவதாகவும் தெரிவித்துள்ளனர்.

**ரஷ்யாவுடன் இணைவு :**

மால்டோவா - உக்ரேனுக்கும் நடுவிலும், வல்லரசுகளின் போர்சூழ் பகைமையில் சிக்கித் தவிக்கும் பிராந்தியமாக திரான்ஸ்னிஸ்ட்ரியா விளங்குகிறது. வெளிப்படையாகவே ரஷ்யா திரான்ஸ்னிஸ்ட்ரியா பிராந்தியத்தை திறந்த கரங்க ளுடன் ஏற்றுக்கொள்ள தயாராக உள்ளது.

இது ஐரோப்பிய ஒன்றியத்தின் முகத்தில் மற்றொரு இறுக்கமான அழுத்தமாகவே இருக்கும் என ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

# புலமைச் சிகரம் தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி


மாதிரிப் பரீட்சை வினாத்தாள்

1) C 2) E 3) F


24. மூன்று கால் மேசை ஒன்றைச் சுற்றி நாற்காலிகள் மூன்று உள்ளன. அங்கு காணப்படும் கால்களின் எண்ணிக்கை யாது?
1) 16 2) 15 3) 13

25. சத்தி, நிஷான், விஜய், அருண் ஆகிய நால்வரில் விஜயிலும் உயரம் குறைந்தோர் இருவர் மட்டுமே உள்ளனர். நிஷானிலும் உயரம் குறைந்தோர் ஒருவர் மட்டும் உள்ளார். சத்தி மாத்திரம் நிஷானிலும் உயரம் குறைந்தவர் ஆவார். நால்வரில் உயரம் கூடியவர் யார்?
1) விஜய் 2) நிஷான் 3) அருண்


26. ஒரு வரிசையில் கமலா முன்னாலிருந்து 7 ஆவதாகவும் விமலா பின்னாலிருந்து 4 ஆவதாகவும் உள்ளனர். அவர்கள் இருவருக்குமிடையில் இரண்டு பேர் உள்ளனர். அவ்வரிசையில் மொத்தம் எத்தனை பேர் உள்ளனர்?
1) 13 2) 14 3) 15

27.  உருவில் உள்ள வடிவத்தைப் புள்ளிக்கோட்டின் வழியே வெட்டும்போது கிடைக்கும் முகத்தின் வடிவம்
1) சதுரம் 2) செவ்வகம் 3) அரியம்

28. மகனை விட அப்பா உயரம் கூடியவர் என்பது
1) எப்பொழுதும் உண்மையானது
2) சில சமயம் உண்மையானது
3) எப்பொழுதும் பொய்யானது

29.  இச் சிறிய முக்கோணத்தின் சுற்றளவு 9cm எனின்  இம்முக்கோணியின் சுற்றளவு யாது?
1) 12cm 2) 18cm 3) 36cm

30. படகு ஒன்றில் 30 பேர் பயணிக்கலாம் எனின் 100 பேர் பயணிப்பதற்கு எத்தனை படகுகள் தேவை?
1) 3 2) 2 3) 4


31. 


வெறுமையான கட்டத்துக்குப் பொருத்தமான எண் யாது?
1) 14 2) 10 3) 12

32. அட்டவணையை அடிப்படையாகக் கொண்டு விடையளிக்குக.


| பூக்கள் | பழங்கள் | D |
|---|---|---|
| A | மாம்பழம் | கத்தரி |
| மல்லிகை | அன்னாசி | வெண்டி |
| செவ்வந்தி | C | தக்காளி |

அட்டவணையில் ACD ஆகியவற்றுக்குப் பொருத்தமான விடைகள் முறையே
1) நித்திய கல்யாணி, பலாப்பழம், காய்கறிகள்
2) முருங்கை, காய்கறிகள், வெண்டி
3) கீரை, பருப்பு, சோயா

33. 



நித்திய கல்யாணிப் பூவைக் குறிக்கும் எழுத்து
1) அ 2) ஆ 3) இ

❖ 34, 35 ஆம் வினாக்களுக்கு தரப்பட்டுள்ள உருவைக் கொண்டு விடையளிக்குக.

34. 


பிள்ளை காலையில் தான் நிற்கும் இடத்திலிருந்து பாடசாலை நோக்கிச் செல்லும்போது எத்தனை தடவை தெற்கு பக்கமாகச் செல்ல வேண்டும்?
1) 2 தடவைகள் 2) 3 தடவைகள் 3) 4 தடவைகள்

35. இப் பிள்ளை காலையில் பாடசாலைக்குச் செல்லும்போது இவரது நிழல் எத்தனை தடவை முன்னால் விழுந்தது?
1) 6 தடவைகள் 2) 5 தடவைகள் 3) 4 தடவைகள்

36.  இவ்வுருவில் $\frac{3}{8}$ நிறம் தீட்ட வேண்டும் எனின் மேலும் எத்தனை துண்டங்களுக்கு நிறம் தீட்ட வேண்டும்?
1) 2 2) 3 3) 4

## விடைகள்

24. 2
25. 3
26. 1
27. 2
28. 2
29. 2
30. 3
31. 1
32. 1
33. 1
34. 2
35. 1


கல்வி tv CHANNEL-1

**14.08.2022**
**ஞாயிற்றுக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | கணிதம் |
| 06.00 | தரம்-07 | தமிழ் |
| 06.45 | தரம்-08 | கணிதம் |
| 07.30 | தரம்-09 | வரலாறு |
| 08.15 | தரம்-10 | தமிழ் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English வினாத்தாள் |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | விஞ்ஞானம் வினாத்தாள் |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் வினாத்தாள் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | கணிதம் வினாத்தாள் |
| 03.30 | க.பொ.த சா.தரம் | வரலாறு வினாத்தாள் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | சைவசமயம் வினாத்தாள் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast வணிகப்பிரிவு |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் வினாத்தாள் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு வணிகப்பிரிவு |
| 08.00 | தரம்- 05 | புலமைப்பரிசில் வினாத்தாள் மறு ஒளிபரப்பு அனைத்துப்பாடங்களும் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | விஞ்ஞானம் வினாத்தாள் |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் வினாத்தாள் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | கணிதம் வினாத்தாள் |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | வரலாறு வினாத்தாள் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | சைவசமயம் வினாத்தாள் |
| 04.30 | தரம்-10 | English |

கல்வி tv CHANNEL - 2

**14.08.2022**
**ஞாயிற்றுக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள் | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | பாட்டு |
| 08.15 | தரம்-01 | English |
| 09.00 | தரம்-02 | அழகியல் |
| 09.45 | தரம்-03 | English |
| 10.30 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 11.15 | தரம்-04 | சைவசமயம் |
| 12.30 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 01.15 | தரம்-05 | English |
| 02.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | பாட்டு |
| 05.00 | தரம்-01 | English Cartoon |
| 05.15 | தரம்-02 | அழகியல் |
| 06.00 | தரம்-03 | English |
| 06.45 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 07.30 | தரம்-04 | சைவசமயம் |
| 08.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 09.00 | தரம்-05 | English |
| 09.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | English |
| 12.30 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 01.15 | தரம்-04 | சைவசமயம் |
| 02.00 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 02.45 | தரம்-05 | English |
| 03.30 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

# கோண்டாவிலில் சர்வதேச துடுப்பாட்ட மைதானம் அமைப்பதற்கு யோசனை

யாழ்ப்பாணம், ஒக. 14

யாழ் மாநகர சபைக்குச் சொந்தமான கோண்டாவிலில் உள்ள நீர் விநியோக கிணறு அமைந்துள்ள 11 ஏக்கர் காணியில் சர்வதேச துடுப்பாட்ட மைதானம் அமைப்பது தொடர்பில் மாநகர முதல்வர் வி.மணிவண்ணனால் யோசனையொன்று முன்வைக்கப்பட்டது.

யாழ்.மாநகர சபையின் மாதாந்த அமர்வு நேற்று முன்தினம் இடம்பெற்றபோதே மாநகர முதல்வர் இதனை முன்வைத்தார்.

கோண்டாவிலில் உள்ள மாநகர சபையின் நீர் விநியோகக் கிணறு அமைந்துள்ள காணி சர்வதேச துடுப்பாட்ட மைதானம் அமைக்க பொருத்தமானது என இலங்கை கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபையோ நன்கொடையாளர்களோ முன்வந்தால் அதற்கான அனுமதியை வழங்கலாமா இல்லையா எனச் சபையின் சம்மதம் இதன்போது கோரப்பட்டது.

இது தொடர்பில் ஆராய கால அவகாசம் தேவை என மாநகர சபை உறுப்பினர்களால் கருத்து தெரிவிக்கப்பட்டதால் இவ்விடயத்தை அடுத்த கூட்டத்துக்கு ஒத்தி வைக்க முடிவெடுக்கப்பட்டது.

வடமாகாணத்தில் அமையக்கூடியதாக ஓர் சர்வதேச தரத்திலான துடுப்பாட்ட மைதானம் அமைக்க இலங்கை கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையால் மண்டைதீவுப் பகுதி முன்னர் ஆராயப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

# கோட்டை- காங்கேசன்துறை இடையே இரவு தபால் ரயில் சேவை மீள ஆரம்பம்

கொழும்பு, ஒக. 14

கொழும்பு கோட்டை ரயில் நிலையத்துக்கும் காங்கேசன்துறை ரயில் நிலையத்துக்கும் இடையிலான இரவு நேர தபால் ரயில் சேவையை எதிர்வரும் 19 ஆம் திகதி முதல் ஆரம்பிக்க ரயில்வே திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்த ரயில் சேவை கடந்த 10 திகதி முதல் ஆரம்பிக்கவிருந்த நிலையில் 10ஆம் திகதியும் 11 ஆம் திகதியும் விசேட ரயில் சேவையாக இடம்பெற்றது. இவ்வாறான நிலையில் 19 ஆம் திகதி முதல் தினசரி சேவையாக இரவு நேர தபால் ரயில் சேவை ஆரம்பிக்கப்படவுள்ளது.

கொழும்பு கோட்டையில் இருந்து இரவு 9 மணிக்கு புறப்படும் ரயில் யாழ்ப்பாணம் பிரதான ரயில் நிலையத்தை அதிகாலை 5.29 மணிக்கு வந்தடைவதுடன் காங்கேசன்துறையை அதிகாலை 6.17 மணிக்கு சென்றடையும்.

காங்கேசன்துறையில் இருந்து இரவு 6.00 மணிக்கு புறப்படும் ரயில் யாழ்ப்பாணம் பிரதான ரயில் நிலையத்தை 6.45 மணிக்கு சென்றடைவதுடன் 7.00 மணிக்கு அங்கிருந்து புறப்பட்டு கொழும்பு கோட்டை ரயில் நிலையத்தை அதிகாலை 4.00 மணிக்கு சென்றடையும்.

(அ)

# இலங்கை போக்குவரத்துச் சபையால் செலுத்தப்படாத வாடகைக் கட்டணம்

மன்னார், ஒக. 14

மன்னார் நகர சபைக்கு சொந்தமான பஸ் நிலையத்துக்கு செலுத்தவேண்டிய வாடகை நிலுவையையும் மாதாந்த வாடகையையும் மன்னார் அரச போக்குவரத்துச் சேவையினர் உரிய முறையில் செலுத்தாமையினால்பல லட்சம் ரூபா வருமானம் இழப்பு ஏற்பட்டுள்ளதாக மன்னார் நகர சபை தெரிவித்துள்ளது.

மேற்படி மன்னார் நகர சபையால் நிர்வகிக்கப்படும் மன்னார் பிரதான பஸ் நிலையத்தில் தனியார் மற்றும் அரச போக்குவரத்து பஸ்கள் இணைந்த சேவையை வழங்கி வருகின்றன.

இந்த நிலையில் மன்னார் நகர சபையினால் பஸ் தரிப்பிட கட்டணம் மற்றும் சிற்றூழியர்கள், காவலாளிக்கான செலவில் பங்களிப்பு செலுத்தும் வகையில் தனியார் போக்குவரத்து சேவை மற்றும் அரச போக்குவரத்து சேவையினருக்கு மாதந்த வாடகையாக 50,000 ரூபா செலுத்துவதற்கான தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது.

இந்த நிலையில் தனியார் பஸ் சேவையினர் இரண்டு வருடங்களாக உரிய காலப்பகுதியில் நகரசபைக்கு வாடகைக் கட்டணத்தை செலுத்தி வருகின்ற நிலையில், அரச பஸ் சேவையினர் மாத்திரம் இரண்டு வருடங்களாக எந்த ஒரு கட்டணமும் செலுத்தவில்லை என்பதுடன் முன்னைய நாட்களில் செலுத்த வேண்டிய பணத்தையும் செலுத்தவில்லை.

குறித்த கட்டணத்தை செலுத்துவது தொடர்பாக பலமுறை மன்னார் பஸ் சாலைக்கு கடிதங்கள் நகர சபையால் அனுப்பப்பட்ட போதிலும் கட்டண நிர்ணயத்தை மீள் பரிசீலிப்பது தொடர்பாக கலந்துரையாடலுக்கு மன்னார் அரச போக்குவரத்துச் சபையை அழைத்தும் அவர்கள் அழைப்பையும் கட்டணம் செலுத்துவதையும் உதாசீனப்படுத்தி வருகின்றனர்.

இந்த நிலையில் கடந்த மன்னார் நகரசபை அமர்வில் உரிய வாடகைப் பணத்தை செலுத்த மன்னார் அரச பஸ் சேவையினர் தவறினால் நகர சபை பஸ் நிலையத்தில் அவர்கள் சேவையை தொடர்வதற்கு அனுமதி மறுக்கப் படுவதற்கான தீர்மானம் ஒன்றுமேற் கொள்ளப்பட்டது.

இதனால் பொதுமக்களுக்கு ஏற்படும். அனைத்து போக்குவரத்து இடையூறுகளுக்கும் மன்னார் அரச போக்குவரத்து சேவையினரே பொறுப்பு ஏற்க வேண்டும் என மன்னார் நகர சபையினர் தெரிவித்துள்ளனர்.

(அ)

# மரண அறிவித்தல்

## நமசிவாயம் ஜெகதீஸ்வரன் (ஈசன்)



**தோற்றம்**
**08 - 08 -1964**

**மறைவு**
**04 - 08 - 2022**

யாழ். சங்கானை அரசடி வீதியைப் பிறப்பிடமாகவும், பிரான்ஸ் Paris ஐ வசிப்பிடமாகவும், தற்போது பிரித்தானியா லண்டனை வதிவிடமாகவும் கொண்ட நமசிவாயம் ஜெகதீஸ்வரன் அவர்கள் 04.08.2022 வியாழக்கிழமை அன்று காலமானார்.

அன்னார், காலஞ்சென்ற நமசிவாயம், பூமணி (கனடா) தம்பதிகளின் அன்பு மகனும், யாழ். பருத்தித்துறையைச் சேர்ந்த காலஞ்சென்ற சோமசுந்தரம், தங்கேஸ்வரி தம்பதிகளின் அன்பு மருமகனும், நிர்மலா அவர்களின் அன்புக் கணவரும், அனுஷன் அவர்களின் பாசமிகு தந்தையும், அன்னலஷ்சுமி (செல்வி - கனடா), காலஞ்சென்ற மகேஷ்வரன், ஜெயராணி (கனடா), திருமால் (லண்டன்), கெங்காதரன் (சிவா - லண்டன்), ஜெயதர்சினி (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோ தரரும், உதயநேசன் (கனடா), யோகாமாலினி (பிரான்ஸ்), சுரேஸ் (கனடா), தயாளினி (லண்டன்), குமுதினி (லண்டன்), பாலேஸ்வரன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மைத்துனரும், சிவராஜ் - விஜயா (நியூசிலாந்து), மோகன் - திலகா (இலங்கை), அருள் - ரேவதி (இலங்கை), விமலா - சூரி (சுவிஸ்), ராஜன் (இலங்கை), காண்டீபன் (இலங்கை) ஆகியோரின் அன்பு மைத்துனரும், ஆரபி, ஆரிஸ், அஞ்சலன், ஆதிரா, ஆதித்தியா ஆகியோரின் அன்பு மாமனாரும், ராகுல், அஸ்வின் ஆகியோரின் அன்புச் சித்தப்பாவும், அபிநாஸ், அக்ஷயா, ஆத்விக் ஆகியோரின் அன்புப் பெரியப்பாவும், அலெக்சனா, நிரோஷ், நிதுசன், நிந்துஷா ஆகியோரின் அன்பு மாமாவும், அர்ச்சனா, அபிநயா ஆகியோரின் பெரியப்பாவும் ஆவார்.

பார்வைக்கு :
Saturday, 13 Aug 2022 4:00 PM – 8:00 PM Om Funeral Care Ltd 445 Kenton Rd, Harrow HA3 0XY, UK.

கிரியை :
Tuesday, 16 Aug 2022 11:30 AM – 3:00 PM Oshwal Ekta Centre 366A Stag Ln, London NW9 9AA,United Kingdom.

தகனம் :
Tuesday, 16 Aug 2022 4:00 PM – 5:00 PM Hendon Cemetery & Crematorium Holders Hill Rd, London NW7 1NB, UK.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு :

**நிர்மலா (மனைவி)** – 00447405428872
**உதயநேசன் (மைத்துனர்)** – 0014166481394
**கெங்கன் (சிவா, சகோதரன்)**–00447852183561
**திருமால் (திரு, சகோதரன்)** – 00447917800774
**பாலேஸ் (மைத்துனர்)** – 00447919371907
**காண்டீபன் (மைத்துனர்)** – 0094770872182

தகவல் :
**குடும்பத்தினர்.**

## சில புலம்பெயர்...

சில தனி நபர்களின் பெயர்களை நீக்கி பாதுகாப்பு அமைச்சினால் அதிவிசேட வர்த்தமானி அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

மகிந்த ராஜபக்ஷ அரசாங்கமும் பின்னர் கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசும் பல புலம்பெயர் தமிழ் அமைப்புகளை தடை செய்தன. பின்னர் சில புலம்பெயர் அமைப்புகள் மீதான தடையை ரணில் - மைத்திரி அரசாங்கம் நீக்கியிருந்தது.

சில அமைப்புகள் மீது 2014 இல் தடை விதிக்கப்பட்டு. பின்னர் 2015 இல் அப்போதைய அரசாங்கத்தால் தடைகள் நீக்கப்பட்டன.

பின்னர் 2021-இல் கோட்டாபய ராஜபக்ச அரசினால் சர்வதேச தமிழர் பேரவை, பிரித்தானியத் தமிழர் பேரவை, கனடியத் தமிழர் பேரவை, அவுஸ்திரேலியத் தமிழர் பேரவை, கனடியத் தமிழ் தேசிய அவை, தமிழ் இளையோர் அமைப்பு மற்றும் உலகத் தமிழர் ஒருங்கிணைப்புக் குழு உள்ளிட்ட பல அமைப்புகள் மற்றும் தனிநபர்கள் மீது மீண்டும் தடை விதிக்கப்பட்டது.

கோட்டாபய அரசாங்கம் இங்கிலாந்து, ஜேர்மனி, இத்தாலி, மலேசியா மற்றும் பல நாடுகளில் உள்ள புலம்பெயர் தமிழ் செயற்பாட்டாளர்களுக்கு தடை விதித்தது குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் புலம்பெயர் தமிழர்களுடனான பேச்சுவார்த்தைகளை ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கம் ஆரம்பித்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ள நிலையிலேயே சில புலம்பெயர்ந்த தமிழ் அமைப்புகள் மற்றும் அந்த அமைப்புகளைச் சேர்ந்த தனிநபர்கள் சிலரை தடை செய்யப்பட்ட அமைப்புகள் பட்டியலில் இருந்து இலங்கை அரசு நீக்கியுள்ளது. (அ)

## கோட்டாவை...

இருந்து எவ்வித உறுதியான பதிலும் இதுவரை கிடைக்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய கடந்த ஜூலை மாதம் 9ஆம் திகதி நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலையை அடுத்து நாட்டை விட்டு வெளியேறியிருந்தார்.

முதலில் மாலைதீவுக்குச் சென்றிருந்த கோட்டாபய, அதன் பின்னர் சிங்கப்பூருக்குச் சென்று தங்கியிருந்ததுடன் அங்கு அவர் தங்கியிருக்க அனுமதி வழங்கப்பட்டிருந்த காலம் முடிவடைந்த நிலையில் தற்போது தாய்லாந்துக்கு சென்றுள்ளார்.

இந்த நிலையில் முன்னாள் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ, கோட்டாபயவை மீண்டும் நாட்டுக்குத் திரும்புமாறு விடுத்த கோரிக்கைக்கு முன்னாள் ஜனாதிபதி கோட்டாபயவிடம் இருந்து எவ்வித உறுதியான பதிலும் கிடைக்கவில்லை எனக் கொழும்பு ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அதேவேளை, முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய நாட்டில் வந்து மீண்டும் தங்குவதற்கு பாதுகாப்பு தொடர்பான பிரச்னைகளும் இல்லை என்று பாதுகாப்பு தரப்பினர் தற்போது உறுதிப்படுத்தியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.(அ)

## சல்மான்...

வும் பேச முடியாத நிலையில் இருப்பதாகவும் அவரது உதவியாளர் தெரிவித்துள்ளார்.

சாத்தானின் வசனங்கள் என்ற புத்தகத்தை எழுதிய பின்னர் பல ஆண்டுகளாக மரண அச்சுறுத்தல்களை எதிர்கொண்டு வந்த எழுத்தாளர் சல்மான் ருஷ்டி நியூயோர்க்கில் ஒரு மேடையில் வைத்து கத்தியால் குத்தப்பட்டு தாக்கப்பட்டார்.

சாத்தானின் வசனங்கள் என்ற அந்த நூல் முஸ்லிம்களை நிந்திப்பாக கூறி அவருக்கு ஈரான் மரணதண்டனை வழங்கியிருந்ததுடன் அவரைக் கொல்பவருக்கு 3 மில்லியன் டொலர் பரிசு வழங்கப்படும் என்றும் முன்னர் அறிவித்திருந்தது.

புக்கர் பரிசு வென்றவரான இவர், லாப நோக்கற்ற ஷட்டாக்குவா நிறுவன நிகழ்வில் விரிவுரையாற்றிக் கொண்டிருந்தபோது தாக்குதலுக்கு ஆளானார்.

அந்த நிகழ்ச்சியில் பார்வையாளராக இருந்த நபர், திடீரென்று மேடை மீது ஏறி ருஷ்டியை கழுத்துப் பகுதியில் குத்தித் தாக்கியதாக நேரில் பார்த்தவர்கள் தெரிவித்தனர்.

இதைத் தொடர்ந்து நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்கள், உடனடியாக சல்மான் ருஷ்டியிடம் விரைந்து சென்று அவரை காப்பாற்றியதுடன், அவர் உடனடியாக ஹெலிகொப்டர் மூலம் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார். (அ)

## சர்வகட்சி...

கண்டியில் நேற்று ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

சர்வகட்சி அரசாங்கத்தை அமைப்பதற்கும், புதிய அரசியலமைப்பை அறிமுகப்படுத்துவதற்கும் இடையில் எவ்வித தொடர்பும் இல்லை.

நாட்டின் பிரச்னைகளுக்குத் தீர்வு காண்பதற்காக ஏப்ரல் மாதத்தின் முதல் வாரத்தில் அனைத்துக் கட்சி அரசாங்கத்தின் யோசனை முன்வைக்கப்பட்டது.

எவ்வாறாயினும், சர்வகட்சி அரசாங்கத்தை அமைப்பதில் சமரசம் செய்து கொள்ள முடியாத அரசியல் தரப்பினரால் நாட்டிற்குள் பிரச்னைகள் அதிகரித்துள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் சர்வகட்சி அரசாங்கத்தை அமைக்க அரசாங்கம் இன்னும் நம்பிக்கையுடன் இருக்கின்றது.

சர்வகட்சி அரசாங்கத்தின் யோசனையை எந்தவொரு தரப்பும் மறுக்கும் பட்சத்தில், பாராளுமன்றத்தில் பெரும்பான்மை பலத்தைப் பெறுவோம்.அதற்கமைய பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் பெரும்பான்மையான அரசியல் கட்சிகளின் ஆதரவை பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன-என்றார். (அ)

## குழந்தையின்...

மனைவி வெளிநாடு சென்று மூன்று மாதங்கள் கடந்துள்ள நிலையில், அவரை அழைத்து வருவதற்காக அவர் இந்த செயலை செய்துள்ளதாக ஆரம்பகட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

இந்த நபர் அந்த வீடியோவை மனைவிக்கும் அவரை வெளிநாட்டுக்கு அனுப்பிய நிறுவனத்துக்கும் அனுப்பியுள்ளார்.

குறித்த தந்தையின் செயல் வெளிச்சத்துக்கு வந்ததையடுத்து குளியாப்பிட்டிய பொலிஸார் அவரை கைது செய்துள்ளனர்.

குழந்தையின் கழுத்து பகுதியில் சிறு காயங்களுடன் தழும்புகள் இருந்ததாக பொலிசார் தெரிவித்தனர்.

தந்தையுடன் செல்ல மறுத்துள்ள சிறுவன் தாய் வரும் வரை உறவினருடன் செல்ல விரும்புவதாக பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட சந்தேகநபர் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளார். (அ)

## கோவிட்...

பணிப்பாளர் நாயகம் உறுதிப்படுத்தியுள்ளார்.

அதன்படி நாட்டில் கோவிட் தொற்றுக்கு உள்ளானவர்களின் எண்ணிக்கை 667,735 ஆக அதிகரித்துள்ளதாக அரசாங்க தகவல் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

## வெளிநாட்டு...

கின்றது.

2021 ஆம் ஆண்டின் இதே காலப் பகுதியுடன் (3777.6 அமெரிக்க டொலர்கள்) ஒப்பிடுகையில் இது 50 வீத குறைவு என இலங்கை மத்திய வங்கி மேலும் தெரிவித்துள்ளது. (அ)

# நாமல் உட்பட சிலருக்கு மீண்டும் அமைச்சு பதவி கோரும் மொட்டு!

## பட்டியல் ஜனாதிபதிக்கு அனுப்பிவைப்பு

கொழும்பு, ஒக. 14

ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, நாமல் ராஜபக்ஷ, மகிந்தானந்த அளுத்கமகே, ரோஹித அபேகுணவர்தன உட்பட முன்னாள் அமைச்சர்கள் சில ருக்கு மீண்டும் அமைச்சு பதவிகளை வழங்குமாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கோரிக்கை விடுத்துள்ளதாக தெரியவருகிறது.

சர்வகட்சி ஆட்சியின் புதிய அமைச்சரவை அடுத்த வாரம் நியமிக்கப்படவுள்ளது.

அந்த அமைச்சரவையில் நியமிக்கப்பட வேண்டியவர்களின் பெயர் பட்டியல் ஒன்றை பொதுஜன பெரமுன ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்துள்ளதாக கூறப்படுகிறது.

மேலே குறிப்பிட்ட முன்னாள் அமைச்சர்களுக்கு மேலதிகமாக பவித்ரா வன்னியாரச்சி, எஸ்.பி.திஸாநாயக்க, எஸ்.எம்.சந்திரசேன உள்ளிட்ட முன்னாள் அமைச்சர்களும் இந்த பட்டியலில் இருக்கின்றனர். எவ்வாறாயினும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதற்கு விருப்பத்தை வெளியிடவில்லை எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதனிடையே சிவில் அமைப்புகள், தொழிற்சங்கங்கள் உட்பட சிலர் எந்த வகையிலும் இந்த யோசனைக்கு இணங்க வேண்டாம் என ஜனாதிபதிக்கு அறிவித்துள்ளனர்.

குறிப்பாக ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, நாமல், மகிந்தானந்த, ரோஹித ஆகியோர் மீண்டும் அமைச்சரவையில் சேர்க்கப்பட்டால், மீண்டும் போராட்டம் ஆரம்பிக்க அது வழிவகுக்கும் என அவர்கள் ஜனாதிபதிக்கு சுட்டிக்காட்டியுள்ளனர்.

மேலும் இவர்களுக்கு மீண்டும் அமைச்சு பதவிகளை வழங்கினால், சர்வகட்சி ஆட்சியில் அமைச்சு பதவிகளை பெற்றுக்கொள்ள இணங்கியுள்ள எதிர்க்கட்சி அரசியல்வாதிகள் அமைச்சுப் பதவிகளை ஏற்க முற்றாக மறுத்துவிடக் கூடும் எனவும் அவர்கள் கூறியுள்ளனர்.

இது சம்பந்தமான சிறப்பு பேச்சுவார்த்தை ஒன்று இன்று நடைபெறவுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. (அ)

# பாராளுமன்றம் வாருங்கள்!

## போராட்டக்காரர்களுக்கு மனோ அழைப்பு

கொழும்பு, ஒக. 14

காலிமுகத்திடலில் இருந்து கூடாரங்கள் அகற்றப்பட்டு போராட்டக்காரர்கள் வெளியேற்றப்பட்டதால் போராட்டம் முடிவடையவில்லை. ஏனெனில் போராட்டம் என்பது ஒரு உணர்வு என பாராளுமன்ற உறுப்பினரும் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவருமான மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

போராட்ட இயக்கத்தை அரசியல் கட்சியாக மாற்றிப் போராட்டக்காரர்கள் பாராளுமன்றத்துக்கு வந்து ஆட்சி செய்யுங்கள் எனவும் அவர் அழைப்பு விடுத்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

காலிமுகத்திடல் என்பது ஒரு போராட்டக்களம் மட்டும் தான். ஆனால் போராட்டம் என்ற உணர்வு மக்களிடம் எப்போதும் உள்ளது. அதனால் போராட்டம் தோல்வியடையவில்லை. அது வெற்றியடைந்துள்ளது. அதனால் தான் கோட்டாபய நாட்டை விட்டு வெளியேறிவிட்டார். அத்துடன் மகிந்த பிரதமர் பதவியிலிருந்து விலகியுள்ளார்.



போராட்ட இயக்கத்தை அரசியல் கட்சியாக மாற்றிப் போராட்டக்காரர்கள் பாராளுமன்றத்துக்கு வந்து ஆட்சி செய்யுங்கள்.

ராஜபக்ஷர்கள் திரைமறைவிலிருந்து ரணிலை வைத்து காய் நகர்த்துவதாக ஒரு கதையும் உள்ளது. அதை சரி செய்யவும் போராட்டம் தொடரவேண்டும். போராட்டம் சட்டத்திற்கு உட்பட்டதாக இருக்க வேண்டும். நான் வன்முறையை ஆதரிப்பவன் இல்லை-என்றார். (அ)

## எரிபொருள்...

பொருள் விநியோகம் தொடர்பான முன்னேற்ற மீளாய்வுக் கூட்டத்தில் பேசிய அமைச்சர், எரிபொருள் விநியோகத்திற்காக கியூ.ஆர். முறையைப் பின்பற்றாத எரிபொருள் நிலையங்களுக்கு எதிராக தேவையான நடவடிக்கை எடுக்குமாறு பெற்றோலிய கூட்டுத்தாபனத்திடம் கோரினார்.

ஒவ்வொரு எரிபொருள் நிலையத்திற்கும் விநியோகிக்கப்பட்ட எரிபொருளின் அளவு மற்றும் கியூ.ஆர். அமைப்புடன் வழங்கப்பட்ட எரிபொருளின் அளவு குறித்து கடந்த இரண்டு வாரங்களில் சேகரிக்கப்பட்ட தரவு பகுப்பாய்வு செய்யப்பட்டு விவாதிக்கப்பட்டது.

அத்தியாவசிய சேவைகளுக்கான எரிபொருள் விநியோகம், பொது போக்குவரத்து, மீன்பிடி துறைமுகங்கள், விவசாயத் தேவைகள், தொழில்கள், சுற்றுலா போன்ற தலைப்புகளும் நேற்றைய பேச்சுவார்த்தையின்போது மீளாய்வு செய்யப்பட்டு விவாதிக்கப்பட்டன. (அ)

## அனைத்துப்...

தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அரச மற்றும் அரச அங்கீகாரம் பெற்ற பாடசாலைகள் அனைத்தும் எதிர்வரும் நாளை திங்கள்கிழமை தொடக்கம் காலை 7.30 மணி தொடக்கம் பிற்பகல் 1.30 மணிவரை நடைபெறும் என்று கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

கடந்த வாரம் தொடக்கம் வடக்கு மாகாணப் பாடசாலைகள் ஐந்து நாட்களும் நடைபெறத் தொடங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

## முக்கிய துறைகள்...

பெற்றோலியப் பொருட்கள் சிறப்பு ஏற்பாடுகள் சட்டத்தில் திருத்தம் செய்யப்பட்டதாகக் குறிப்பிடப்பட்டது.

அதன்படி, பெற்றோலிய இறக்குமதிக்கு முறையாக அடையாளம் காணப்பட்ட தரப்பினர்களுக்கு உரிமம் வழங்க முடியும்.

ஏப்ரல் 25ஆம் திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில், இது தொடர்பான சட்டத் திருத்தத்துக்கு அமைச்சரவை ஒப்புதல் அளித்தது.

இதன்படி, பெற்றோலியப் பொருட்கள் விசேட ஏற்பாடுகள் சட்டமூலம் வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளதுடன், அது எதிர்காலத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து நிறைவேற்றப்படவுள்ளது. (அ)

ஈழநாடு
Eelanadu

## மரண அறிவித்தல்



மலர்வு 18 - 12 - 1950

உதிர்வு 02 - 08 - 2022

### மருத்துவர்
### சொக்கலிங்கம் செந்தில்குமார்

*(தமிழ்த்தேசியப் பற்றாளர், மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பழை - பழைய மாணவர், கொழும்பு மருத்துவக் கல்லூரி - பழைய மாணவர்)*

யாழ். பன்னாலை, தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும், பிரித்தானியா லண்டனை வதிவிடமாகவும் கொண்ட சொக்கலிங்கம் செந்தில்குமார் கடந்த 02.08.2022 செவ்வாய்க்கிழமை லண்டனில் காலமானார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான சொக்கலிங்கம் (உதவி அரசாங்க அதிபர்) – ராஜலட்சுமி தம்பதிகளின் அருமை மகனும், மருத்துவர் நிரோஷன் செந்தில்குமார் அவர்களின் அன்புத் தந்தையும், செந்தில்குமாரி (Melbourne), கலாநிதி செந்தில்வதனா (லண்டன்), மருத்துவர் செந்தில்மோகன் (Toronto), செந்தில்யோகன் (தினேஷ் மாஸ்டர்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், குணச்சந்திரன், காலஞ்சென்ற ஸ்ரீஸ்கந்தராஜா, மருத்துவர் சுபாதினி, சித்தரஞ்சனி ஆகியோரின் அன்பு மைத்துனரும், மருத்துவர் துஷ்யந்தி, அருணன், கோபி ஆகியோரின் பாசமிகு மாமாவும், மருத்துவர் மாதவி, சிந்து, மாதரி, தமிழ் மைந்தன், நீலன் ஆகியோரின் பாசமிகு பெரியப்பாவும், கலாநிதி உமாகாந்தன், பைரவி ஆகியோரின் அன்புச் சித்தப்பாவும், திவ்வியன், தர்ஷனா, துவாரகா, தரணியா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

*கிரியை :*
Saturday, 13 Aug 2022 9:00 AM – 10:00 AM
HOLIDAY INN EXPRESS LONDON – NEWBURY PARK
Eastern Avenue 713, Newbury Park, London IG2 7RH, United Kingdom.

*நினைவுகள் பகிர்தல் :*
Saturday, 13 Aug 2022 10:00 AM – 10:45 AM
HOLIDAY INN EXPRESS LONDON – NEWBURY PARK
Eastern Avenue 713, Newbury Park, London IG2 7RH, United Kingdom.

*பார்வைக்கு :*
Saturday, 13 Aug 2022 10:45 AM – 11:30 AM
HOLIDAY INN EXPRESS LONDON – NEWBURY PARK
Eastern Avenue 713, Newbury Park, London IG2 7RH, United Kingdom.

*தகனம் :*
Saturday, 13 Aug 2022 12:00 PM – 12:40 PM
City of London Cemetery & Crematorium Aldersbrook Rd, London E12 5DQ, UK.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல் :
**செந்தில்குமாரி (சகோதரி)**

தொடர்புகளுக்கு :
**செந்தில்குமாரி (சகோதரி)**
**00447575564982**
**செந்தில்வதனா (சகோதரி)**
**00447931335637**
**செந்தில்மோகன் (சகோதரன்)**
**0014163577714**
**குணச்சந்திரன் (மைத்துனர்)**
**0061435598704**

# நெருக்கடியிலிருந்து நாடு நிச்சயமாக மீண்டு வரும்!

## ஜனாதிபதி ரணில் நம்பிக்கை



*கொழும்பு, ஓக. 14*

*நாடு தற்போது எதிர்நோக்கி வரும் பாரிய பொருளாதார நெருக்கடியில் இருந்து நிச்சயம் மீண்டு வரும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.*

*கண்டி ஸ்ரீதலதா மாளிகையில் இடம்பெற்ற பெரஹரா இறுதி நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.*

*அனைவருக்கும் சுபீட்சத்தை கொண்டு வரும் புதிய பொருளாதாரம் தொடர்பில் அனைவரும் புதிய நம்பிக்கைகளுடன் முன்னோக்கிச் செல்ல வேண்டும் என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.*

*மேலும் சவாலான காலங்கள் வரக்கூடும் எனவும் அதிலிருந்து மீண்டு, மக்கள் நாட்டுக்கான புதிய பொருளாதாரத்தை கட்டியெழுப்பவேண்டும் என்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கூறினார். (அ)*

# அரசாங்க ஊழியர்களுக்கும் இனிமேல் 5 நாள்கள் வேலை

*கொழும்பு, ஓக. 14*

*அரசாங்கம் ஊழியர்களை வாரத்தில் 5 நாட்களும் பணிக்கு அழைப்பது தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்தி வருகிறது.*

*எரிபொருள் தட்டுப்பாட்டால் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலையைக் கருத்தில் கொண்டு, அரச ஊழியர்களை பணிக்கு அழைப்பது கட்டுப்படுத்தப்பட்டது.*

*எவ்வாறாயினும், நாட்டில் ஏற்பட்டுள்ள எரிபொருள் நெருக்கடி ஓரளவுக்கு தணிக்கப்பட்டு, பொது சேவைகள் இயங்கி வருவதால், சேவைகளை பெற்றுக் கொள்வதற்காக பொதுமக்கள் வழமை போன்று அலுவலகங்களுக்கு வந்து செல்வதை அவதானிக்க முடிகிறது.*

*இதன்படி, அரச அலுவலகங்களின் பணிகளை வழமை போன்று நடத்த வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளதால், காலதாமதத்தை குறைக்கும் வகையில், அரசாங்க ஊழியர்களை வாரத்தில் ஐந்து நாட்களும் பணிக்கு அழைப்பது தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.*

*அதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு சம்பந்தப்பட்ட செயலாளர்களுக்கு ஏற்கனவே பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)*







## மரண அறிவித்தல்



மலர்வு 29 - 08 - 1940

உதிர்வு 07 - 08 - 2022

### திருமதி
### வாலாம்பிகை யோகநாயகம்

யாழ். கொட்டடி, சீனிவாசகம் வீதியைப் பிறப்பிடமாகவும், கனடா Markham ஐ வதிவிடமாகவும் கொண்ட வாலாம்பிகை யோகநாயகம் கடந்த 07.08.2022 ஞாயிற்றுக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார் என்ற செய்தியை ஆழ்ந்த கவலையுடன் அறியத்தருகின்றோம்.

அன்னார், காலஞ்சென்றவர்களான முருகேசு குமாரசாமிப்பிள்ளை (K.F– யாழ் பெரியகடை பிரபல வர்த்தகர்) பாக்கியலட்சுமி தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான நாகரத்தினம் லக்ஷ்மி அம்மாள் தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற இளவாலையைச் சேர்ந்த யோகநாயகம் நாகரத்தினம் (அம்பாறை, கந்தளாய் சீனி தொழிற்சாலை பிரதான பொறியியலாளர்) அவர்களின் அன்பு மனைவியும், மகேந்திரகுமார், சத்தியகுமார், சந்திரகுமார் ஆகியோரின் அன்புத் தாயாரும், பிரபாகினி, யாழினி, மேனகா ஆகியோரின் அன்பு மாமியாரும், அஷ்மின், சஞ்ஜே, கௌதம், கௌஷன், விஷ்ணு, சங்கீதா ஆகியோரின் அன்புப் பேத்தியும், காலஞ்சென்ற சுந்தரலிங்கம், கமலாம்பிகை – ஜெயபாலசிங்கம் (லண்டன்), தில்லைநடராஜா (கலிபோர்னியா), திருஞானசம்பந்தர் (குட்டி/சம்பந்தர் – கனடா), வடிவாம்பிகை – இராஜகுமாரன் (கனடா), குருநாதலிங்கம் (லண்டன்), சிவபாக்கியம் – சந்திரராஜா (லண்டன்), நகுலேஸ்வரி – நந்தகுமார் (கனடா), திருராசா(லண்டன்) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், ராஜாம்பிகை – சுந்தரலிங்கம், காலஞ்சென்ற ஜெயபாலசிங்கம், இந்திராணி – தில்லைநடராஜா, அம்பிகை – திருஞானசம்பந்தர், காலஞ்சென்ற இராஜகுமாரன், யோகேஸ்வரி (ரதி) குருநாதலிங்கம், சந்திரராஜா, நந்தகுமார், அனுஷா – திருராசா, காலஞ்சென்றவர்களான செல்லமணி கனகரத்தினம், வேலுப்பிள்ளை, புவனேஸ்வரி பொன்னம்பலம், இராசநாதன் ஆகியோரின் அன்பு மைத்துனியும், கணேஸ், லக்ஸ்மி, சுகன், சுபி, சுகிர்த்தா, சுமி, அருண், லக்ஸ்மன் ஆகியோரின் பாசமிகு பெரியம்மாவும், சுகந்தி, பார்த்திபன், ஆதி, கரி, கரனி, யசித்திரா, சாய்சுகில் ஆகியோரின் பெரிய அத்தையும், அழகேசன், ரமணி, செம்சுடர் ஆகியோரின் மாமியும் ஆவார்.

*பார்வைக்கு :*
Saturday, 13 Aug 2022 12:00 PM – 4:00 PM
Sunday, 14 Aug 2022 12:00 PM – 1:30 PM
Chapel Ridge Funeral Home & Cremation Centre 8911 Woodbine Ave, Markham, ON L3R 5G1, Canada.

*கிரியை :*
Sunday, 14 Aug 2022 1:30 PM
Chapel Ridge Funeral Home & Cremation Centre 8911 Woodbine Ave, Markham, ON L3R 5G1, Canada.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல் :
**மகேந்திரகுமார் (மகன்)**

தொடர்புகளுக்கு :
**மகேந்திரகுமார் (மகன்)**
**0014168931222**
**சத்தியகுமார் (மகன்)**
**0014167376598**
**சந்திரகுமார் (மகன்) ஷ**
**0016476318145**
**தில்லைநடராஜா (சகோதரன்)**
**0017146565948**
**திருஞானசம்பந்தர் (சகோதரன்)**
**0014168927585**
**குருநாதலிங்கம் (சகோதரன்)**
**00447957303242**
**திருராசா (சகோதரன்)**
**00447815619312**

*இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 14.08.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.*